ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப் ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - **1.** | சென்னை: அக்ஷய௵ வைகாசி௴ 1௳ | இதழ் - **2.** |
| **Vol. 1** | **1926**-ம்௵ மே௴ **14**௳ | **No. 2** |

## ஆநந்த தரிசனம்

"தெய்வ மிகழேல்" என்பது ஔவையின் திருவாக்கு. இதன் அர்த்தம் கடவுளைத் தியானிக்காமல் அவரை நிந்திப்பது போலேயாம் என்றபடி. இதனால் பகவானைத் தியானிக்காமல் வீண்காலம் கழிப்போர் பாபிகளென் றேற்படுகிறது. ஆஸ்திக பக்தர்கள் யாவரும் தெய்வ கிருபையாலேயே ஸகல ஸம்பத்துக்களும் உண்டாகின்றன வென்று ஒப்புக்கொள்கின்றனர். சிலர் பக்தியீனர்களா யிருந்தும் ஸம்பத்தை யநுபவிக்கிறார்களே யெனின்; அதற்கொரு காரணமுண்டு. தேடிய சொத்தை யநுபவிப்பது போல், இந்த ஜென்மத்தில் பக்தி ஹீனனாயிருக்கும் பாபி ஜென்மாந்திரத்தில் புண்ணியம் பண்ணியிருந்ததால், அந்தக் கர்ம பலனாகிய ஐசுவரியத்தை இப்போது அநுபவிக்கிறான். நீர் சுரக்காத கிணற்றில் ஒருவர் கொட்டி வைக்கும் ஜலம் செலவாகுந்தோறும் குறைந்து போவதுபோல், பக்தி செய்யாதவன் அடைந்தனுபவிக்கும் ஸம்பத்து நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போம். ஆதலின் எல்லோரும் இகபர ஸம்பத்தையும் சுகத்தையும் அடையவேண்டி பகவானுடைய பாத கமலங்களைப் போற்றக்கடவோம்.

***

"ஞானமே பிரதானம்" ஸாமான்ய ஞானத்தால் நாம் எத்தனை சுகமடைகிறோம்? எவ்வளவோ ஆபத்துகளினின்றும் தப்புவதற்கும், இன்பங்களை முறைப்படி அனுபவிப்பதற்கும், ஸத்கீர்த்தியை யடைவதற்கும் ஞானம் பிரதானமா யிருக்கிறது. பைத்தியக்காரன் ஞானமில்லாததால் பாறையில் முட்டிக்கொள்ளுகிறான். பள்ளத்தில் விழுந்து புறளுகிறான். அவனுக்குக் கண்கள் பிரகாசமா யிருந்தும் பயன்படுகிறதில்லை. இவ்வுலக வாழ்க்கைக்கு ஞானம் பிரதானமாவதுபோல், மோக்ஷ ஸம்பத்தாகிய அவ்வுலக செல்வத்தைப் பெறுவதற்கும் அது அத்யாவசியமாகிறது. பிரதமத்தில் மனுஷ்யர்களின் மனது எப்போதும் வெளியேயுள்ள பொருள்களையே நாடுகிறது. மனமானது பஞ்சேந்திரியங்களின் வழியாய்ச் சரீரத்திற்குப் புறம்பேயுள்ள பொருள்களைப் பார்க்க விரும்புகிறது; ஜெகத்தின் அழகைப் பார்ப்பதற்கு இயல்பாகவே ஓர் ஆசை உண்டாகிறது. பிறகு மனிதன் வெளியே யுள்ள பொருள்களை யெல்லாம் சோதித்ததற்கு அப்பால் அவற்றில் சாரமில்லை யென்று உள்ளேயுள்ள வஸ்துக்களை ஆராயத் தொடங்குகிறான். ஆத்ம விசாரணையைப்போல் மனுஷ்ய ஜென்மத்திற்கு ஹிதகரமானது வேறொன்றில்லை யென்று அறிகிறான். இவ்வுலகத்தில் அழியாத வஸ்து ஒன்றுமில்லையாவென்று கேள்வி யுண்டாகிறது. கடைசியில் ஆத்மா ஒன்றுதான்—மோக்ஷ ஸாம்பிராஜ்யமொன்றுதான்—அழியாத தன்மை கொண்டதென்று விடை கிடைக்கின்றது. இவ்விதம் படிப்படியாக விசாரணை செய்துகொண்டே சென்று முடிவில் உண்மையான ஞானியாகிறான். உடனே உலகப் பற்றும் அவனை விட்டகல, பகவத் தியானத்திலாழ்ந்து பேரின்ப வீட்டினைப் பெறுகின்றான். எதற்கும் பக்குவஞானம் பிரதானம்.

***

"அன்பு எங்கே யிருக்கும்?" எங்கே சுகம் கிடைக்கிறதோ அங்கே யிருக்கும். எப்படியெனில், தேனைத் தருகின்ற மலர்கள் எங்கே யிருக்கின்றனவோ, அங்கே வண்டுகள் அன்புவைத்துச் சூழ்ந்துகொண் டிருக்கின்றன. அதைப்போன்று ஸகல ஜீவாத்மாக்களுக்கும் எங்கே சுகம் கிடைக்கின்றதோ அங்கே விருப்பமு மிருக்கின்றது. இவ்வாறே வறுமையை யடைந்திருக்கும் மானிடர்களுக்கு எவர் இல்லை யென்னாது இயன்றளவு உதவுகின்றனரோ அவர்களிடத்தே வாஞ்சையு மிருக்கின்றது. இவ்விதமே ஞானிகளுக்கு விருப்பம் எங்கு இருக்கிறதென்றால், ஸர்வ ஜீவதயாபரனிடமிருக்கின்றது. ஆதலின் மானிடர்கள் சாதாரணமான இன்பத்தைக் கருதி தம்மையொத்தவர்களிடத்து அன்பைச் செலுத்துவதைப் பார்க்கிலும், கடவுளிடத்தில் மெய்யன்புடையவர்களாயிருந்தால் என்றுமழியாத பேரின்பத்தை யடைவதுமன்றி, இம்மையிலும் பகவத் கடாக்ஷத்தால் யாவும் பெற்றுச் சுகித்தலும் கூடும்.

***

"வாசுதேவனை வணங்கு." ஜனன மரண துக்கங்களை நிவர்த்திப்பதில் மிக்க மேன்மைபெற்ற கீதாசாரியரான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைத் தியானம் செய்வோர் பரமபதத்தை யடைகிறார்கள். குசேலர் ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசித்ததால் அஷ்டைசுவரியங்களையும் அடைந்தார். அவர் அன்போடு கொடுத்த அவலை வாஸுதேவன் வெகு ஆவலோடும் வாங்கி உட்கொண்டார். கோபிகா ஸ்திரீகள் கிருஷ்ணனுடைய பரம கருணையால் சிறந்த பக்தைகளாகி விளங்கினர். ஸாமான்யமாக ஒரு பெரிய மனிதனுடைய பெயரைச் சொல்லி அநேக காரியங்களை மனிதர்கள் ஸாதித்துக்கொள்ளும்போது, பகவானாகிய வாசுதேவனை ஸ்மரித்துப் பெறுவதற்கரிய ஐசுவரியங்களைப் பெறுவது ஆச்சரியமாகுமா? சில காலம் கோகுலத்தில் குழந்தையாயும், சிலகாலம் கோபாலர்களின் நேசனாயும், சிலகாலம் கோபிகா ரமணிகளின் மனோகரனாயும், சிலகாலம் அரசனாயும், சிலகாலம் ஆபத்பாந்தவனாயும், மற்றும் சிலகாலம் ஞானோபதேசம் செய்யும் கீதாசாரியனாயும் இருந்து, அநந்தமான லீலைகளைச்செய்த வாசுதேவன் நம்மை ஸதா இரக்ஷித்துக்கொண்டிருக்கும்படி அவருடைய திவ்ய கமலங்களை இடைவிடாது தியானிப்போமாக.

***

"தெய்வம் ஒன்றே." இதை ஸகல மதஸ்தர்களும் அங்கீகரிக்கிறார்கள். ஹிந்துக்களும் அப்படியே கூறுகின்றனர். அரசன் ஒருவனாயினும், அவன் விதவித உடைகளைத் தரித்து வெவ்வேறு காரியங்களைச் செய்வதுபோல் பரப்பிரம்மம் ஒன்றாயினும், அது சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலுக்கேற்றபடி மும்மூர்த்தியாய் விளங்குகிறது. ஒரே பத்னியை ஒரு ஸமயம் மந்திரியாயும், ஒரு ஸமயம் தாசியாயும், போஜனம் பரிமாறுவதில் அன்னையாயும் பாவிப்பதில் என்ன குற்றம்? ஒன்றுமில்லை. சிரேஷ்டமான அபிமானம் மட்டும் ஒன்றில் பற்றியிருக்கவேண்டும். ஒன்றே பலவாய்த்தோன்றி, பின்பு அவை யனைத்தும் ஒன்றில் அடங்கிவிடுகின்றது.

தலைபலவாய்ப் பெயர்பலவா நதிக ளெல்லாஞ்
சாகரத்தி லொருநீராந் தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டதொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்.

***

"ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்" வங்காளத்தில் அவதரித்தார். தாமே பக்தனாயும் பகவானாயுமிருந்து பக்திரஸத்தைப் பானம்பண்ணும் வகையை உலகத்தாருக்குக் காட்டியருளினார். தமிழிலும் அவருடைய திவ்ய சரித்திரம் 24-வருஷங்களுக்கு முன்பு வெளி

யிடப்பட்டது. இப்போது அதன் பிரதிகள் கிடைப்பதரிது. ஸ்ரீ சைதன்யருக்குப் பகவானிடம் உள்ள பரம பக்தியால் எப்போது அவரைக் காண்போமோ வென்று ஏங்குவார். பகவான் தம் முன்பு எதிர்ப்பட்டது போலவும், அவரைத் தாம் காண்பது போலவும், அவரை ஓடிப்பிடிக்கும் வேளையில் அவர் எங்கோ மறைந்து போனதுபோலவும் மனோபாவனை செய்துகொண்டு துக்கமடைந்து அழுவார். சிற்சில சமயங்களில் பக்தியால் பரவசப்பட்டுப் போய் சிரிப்பதும் ஸந்தோஷிப்பதுமாய் இருப்பார். மறு நிமிஷமே பகவானுடைய பிரிவாற்ருமையைச் சகியாது மனம் கலங்கி வருந்துவார். அருகே நிற்பவரைக் கண்டு கிருஷ்ணன் எங்கே யென்று கேட்டுப் பதில் சொல்லும்வரை காத்திருப்பார். இதன்ருே பரம பக்தி! இந்தப் பக்திக்கு ஒரு உதாரணம் கொடுப்போம். நாம் நமது பிரியத்தை யெல்லாம் இதர பந்துக்களிடமிருந்து பிரித்து ஒரு பந்துவிடமே வைத்து அவருடைய நினைவையே அதிகமாகக் கொள்வோமாயின், அந்த பந்துவை அடிக்கடி ஸ்வப்னத்திற் காண்போம். அவருடன் பேசுவதுபோல் சிற்சில ஸமயங்களில் நினைத்துப் பதில் சொல்லிப் பின்னர் விழிப்புற்று ஆச்சரியப்படுவோம். ஆகவே, உண்மையான அன்புக்கு இது சிலாக்கியமான உதாரணமன்ருே? இம்மாதிரியே பகவானிடம் உண்மையான பக்தியைக் கொண்டால் ஸகல சுகங்களையும் அடையலாம்.

***

"புண்ணியம்" என்னும் பதம் சுத்தத்தைக் குறிக்கும். ஆதலின் பாபிகள் அசுத்தர்கள் என்றேற்படுகிறது. சுத்தம் இரண்டு வகை; தேக சுத்தம், மனோ சுத்தம். இவ்விரண்டில் பிரதானமாய் வேண்டியது மனோ சுத்தமே. இதை அடையத்தக்க மார்க்கமே புண்ணிய மார்க்கமாகும். ஆயினும் அவசியமான மனோ சுத்தமானது தேக சுத்தத்தாலேயே பெரும்பாலும் கிடைக்கத்தக்கது. பிரதிதினமும் பகவானை ஆராதித்து, ஸத்கிரந்தங்களைப் படித்து ஈசுவரத் தியானம் செய்யவேண்டும். இதனால் மனமானது பாப வழியிற் செல்லாமல் புண்ணிய மார்க்கத்திலேயே சென்று சுத்தமாகும். பகவானையே பிதாவாகவும், அன்பனுகவும், பற்பல பந்துவாகவும் பாவித்துப் போற்றுவதால், அவருடைய கருணையை நாம் எளிதிற் பெறவும், அதனல் நமது மனம் மிருதுவாகி ஒருவித ஆநந்தமுண்டாகவும் கூடும்.

***

"நல்லறிவே எல்லா நன்மைக்கும் நற்ருய்." மனிதனையும் மிருகங்களையும் பகுத்தறிந்து பார்ப்பின் மனிதனிலும் மிருகங்களை மேலாகச் சொல்லலாம். நாய் நரி முதலியன மனுஷ்யன் இறந்தபின் உடலைத் தின்ன வருகின்றன. பந்துவர்க்கங்கள் பேராசையால் உயிர் இருக்கும்போதே தின்ன வருவார்கள். எத்தனைதான்

உண்டாலும் மனிதனுக்கு நன்றியிராது. மிருகங்களுக்கு நன்றியுண்டு. எவ்வளவு காலம் உழைத்துப் பாடுபட்டாலும் மனிதன் அதை எண்ணுன். மிருகமோ தனக்காக உழைப்பவனிடத்து எவ்வளவோ விசுவாசம் கொண்டு நிற்கும். இதை யானைப்பாகன் யானையை நதியில் இறக்கி அதைக் குளிப்பாட்டும்போது, அந்த யானை அவனிடம் எவ்வளவு வணங்கி நடந்துகொள்கிறதென்பதிலிருந்து ஊகிக்கலாம். உபகாரம் செய்தவனையே மனிதன் அவதூறு புரிவான். மிருகம் அப்படிச் செய்யாது; அது பேசவும் பேசாது. பின் எதனுல் மனிதன் சிரேஷ்டனுகிருனெனில், நல்லறிவினுல்—உத்தமமான ஞானத்தால்—பகவத்பக்தியின் மேலீட்டினுல்—தர்ம குணங்களின் உயர்வால்—பரஹித சிந்தையால்—என்போம்.

***

"நன்மை தீமை" ஆகிய இரண்டினுள் தீமையைத் தெரியாதிருப்பதே நன்று. உதாரணமாக நாஸ்திகனேடு ஆஸ்திகன் தர்க்கியாமலிருப்பது சிலாக்கியம். தர்க்கம் செய்வதால் ஆஸ்திக புத்தியுடையவனுக்குங்கூட கடவுள் உண்டா இல்லையா என்ற ஸந்தேகம் உண்டாய்விடும். நாஸ்திகன் தன் கக்ஷியைப் பலப்படுத்த வேண்டி சில யுக்திவாதங்களைச் செய்வான். அவ் யுக்திகள் நியாயமென்றுகூடத் தோன்றும். அவற்றைக் கண்டிக்கப் போதுமான சக்தியில்லையேல், ஆஸ்திக பக்திக்கே ஹானி நேரிடும். ஆதலின் எப்போதும் தீமையை விளைக்கத்தக்க ஸம்வாதங்களிற் செல்லவே கூடாது. இதற்காகவே சான்ருேரினத்திரு, சேரிடமறிந்து சேர் என்ருர் நமது ஒளவையார்.

---

பேசாமடந்தைகள் :—கொரியா தேசத்துப் பெண்கள் கல்யாண தினம் முதற்கொண்டு ஒரு வாரம்வரையில் பேசக்கூடாதென்றும், தலையைக்கூட அசைத்தல் கூடாதென்றும் அவ்வூரில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறதாம். இதற்காக அவளைக் கல்யாண வீட்டார் அனைவரும் வெகு ஜாக்கிரதையாக சோதித்துக்கொண்டிருப்பார்களாம்.

---

பழித்துக் காட்டுதல் :—

ஜன்மாந்திர கர்மத்தால் அவயவஹீனம் அடைந்தவர்களையும், சக்தி தத்துவங்கள் குறைந்தோரையும், விதந்துக்களையும் பழிப்பாய்ப் பழித்துக் காட்டுதல் சில மௌடீகர்களின் ஸ்வபாவம். அரைப்படிப்புள்ள அசடர்களுக்கே இவ்வித ஈனகிருத்தியங்களில் சிந்தை பாயும். எப்போதும் சுகிகளாகவும் ஸர்வலக்ஷண சுந்தரர்களாகவும் இருந்தது அபூர்வம். பிறரைப் பழிப்பதில் தூஷகர்களின் பதவி உயர்ந்துவிடாது, அந்தப் பழிப்பால் அவர்களின் ஹீனஸ்வபாவத்தையே அதிகமாக வெளியிட்டுக்கொள்கிருர்கள்.

ஆநந்த குண போதினி

அக்ஷயஹூ வைகாசிமீ 1உ

# இக்காலத்தில் வெளிவாழ்க்கையின் வேகம்

ஒரு வீட்டின் வாயிற்படி யருகில் சென்றதும், அங்கு வெளியில் போடப்பட்டிருக்கும் அழகிய பந்தலைப் பார்த்துப் பிரமிக்கின்றோம். வாழை மரங்களும் தோரணங்களும் மிக்க அலங்காரமாய் விளங்குவதைக் கண்டு ஆநந்திக்கின்றோம். இந்த வெளி யழகிலே நாம் பரவசமாகி, ஆகா! வெகு சுந்தரமான வீடு என்று சொல்லி விடுகிறோம். பிறகு நாம் வீட்டிற்குள்ளே செல்வோமானால் அங்கு காண்பதென்ன? வீட்டுக்குள்ளே மெழுகிக் கூட்டி எத்தனையோ வருஷங்களாயிருக்கலாம்; வீடு முற்றிலும் குப்பையும் தூசியுமாய்ப் பண்டங்கள் மூலைக்கு மூலை சிதறி விழுந்து, சமையற்கட்டில் அடுப்பு உடைந்துபோய் சின்ன பின்னமாய்க் கிடக்கின்றது. இந்த ஆபாஸத்தைப் பார்க்கும் நாம் அந்த வீட்டைச் சுககரமான வீடு என்று சொல்லமுடியுமா? அலங்காரமான வீடு என்று பேசவாவது கூடுமா? வீட்டிற்குள்ளே பரிசுத்தமும், ஒழுங்கும், அழகும், சமையல் அறையில் அக்கினியும் இல்லாமல் ஸர்வ சூன்யமாய்க் கிடக்க, வீட்டுக்கு வெளியில் மட்டும் ஆடம்பரமான அலங்காரங்கள் செய்து விடுவதனால் உண்டாகும் பயன் என்ன? குடத்துக்குள்ளே பாசி பிடித்துப் போயிருக்க, அதைத் தேய்த்துச் சுத்தப்படுத்தாமல், வெளியில் மட்டும் அக்குடத்தைப் பளபளவென்று பிரகாசிக்கும்படி செய்து விடுவதனால், அந்த வெளி அழகைக்கொண்டே அதைச் சுத்தமான குடம் என்று சொல்லி விடலாமா? ஒருவனுடைய உள் மனம் பரிசுத்தமாயில்லாமல், வெளிக்கு மட்டும் விசேஷ ஆடம்பரமுள்ளவனாக இருந்தால், அந்த வெளி ஆரவாரத்தைக்கொண்டே அவனை உத்தமன் என்று சொல்லிவிட முடியுமா? உள்ளே அழகும் பரிசுத்தமும் இல்லாமல் வீணுக்கு வெளி அழகு மட்டும் மேன்மேலும் வளர்ந்து கொண்டு போவதனால் என்ன பிரயோஜனம்!

இவ்விதமே ஒரு ஜனஸமூகத்தில் உத்தமமும் சிரேஷ்டமுமான உள்வாழ்க்கை சீர்கெட்டுப் போய், பயனற்ற வெளிவாழ்க்கை மட்டும் வெகு வெகு ஆரவாரமாய் மேன்மேலும் விருத்தியடைந்து செல்லுமாயின், அதனால் அந்த ஜனஸமூகம் உண்மையான பிரயோஜனத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா? வாழ்க்கை என்றால் வாழ்வின் இலக்ஷணம் என்று அர்த்தமாகும். அதில் பரிசுத்தம், பகவத்

பக்தி, செல்வநிலை, முன்னேற்றம், சன்மார்க்கம், ஐக்கிய புத்தி முதலியன அடங்கப்பெற்றது உள்வாழ்க்கையாகும். வெளிவாழ்க்கையோ ஆடம்பரமும், பயனற்ற ஆரவாரங்களும் கொண்டு விளங்குவதாம். இந்த உத்தமமான உள்வாழ்க்கை ஒடுங்கிப் போய் வெளிவாழ்க்கையான பகட்டுமட்டுமே மேன்மேலும் ஓங்கிச் சென்றிருப்பது இக்காலத்துப் பொல்லாப்பான செய்தியாகும்.

---

வேகத்திலே விவேகம் வேண்டும். அந்தச் சரக்குதான் இந்நாளில் அபூர்வம். இக்காலத்தின் போக்கை உற்றுநோக்கின், நமது வெளிவாழ்க்கையானது வெகு வேகமாக முன்னுக்கு வந்து விட்டதாய்த் தெரிகிறதே யன்றி, அந்த வெளிவாழ்க்கைக்கு ஏற்றதாக உள்வாழ்க்கையின் உத்தம லக்ஷியங்களையும் அது கொண்டுள்ளதா வென்பது கேள்வி.

இக்காலத்திய வெளிவாழ்க்கையிலே, இப்போதைய பொருள்களின் நாகரீகத்தையும், அவற்றிற்கு ஏற்றவாறு அமைந்திருக்கும் அற்புதமான யந்திரங்களையும், தந்தி, தபால், நீராவி யந்திரம், யுத்தக் கருவிகள், மின்சார தீபங்கள்—இன்னும் இவைபோன்ற பற்பல புதுமைகளையும் வெகுவாக வியந்து பேசுகிறோம். இக்காலத்திய மகிமைகளே எல்லாப் பத்திரிகைகளிலும் மிகுதியாகப் புகழப்படுகின்றன. அங்கங்கே அநேகர் சபைகள் கூடி இக்காலத்தின் ஐசுவரியம், மேன்மை, புத்தி கூர்மை, நினைத்ததை நினைத்தபடி முடிக்க வல்ல திறமை முதலியவைகளைப் பற்றியும் அற்புதமாய்ப் பேசுகிறார்கள். இந்த வெளிவாழ்க்கைக்கு ஏற்றபடி உள்வாழ்க்கையான சன்மார்க்கம், சிக்கனம் முதலிய நற்குணங்கள் விருத்தியாகி இருக்கின்றனவா? வெளிவாழ்க்கையின் தன்மையோடு உள்வாழ்க்கையின் உத்தமமான குணபாவங்களும் கலந்து கொண்டு தொடர்வதே உண்மையான சீர்திருத்தமாகும். அந்தப் பொருளின்படி பார்த்தால், தற்காலத்திய நமது சீர்திருத்தம்—அதாவது நமது முற்போக்கானது—அதிக உன்னதமான ஒரு படியையாவது எட்டியிருக்கிறதென்று சொல்லமுடியாது.

***

இக்காலத்திய வெளிவாழ்க்கையிலே, சோதிட சாஸ்திர பரிசீலனைக்கு ஏற்ற கருவிகள் எத்தனையோ கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித அநுகூலங்களை இப்போது பெற்றிருப்பதினாலேயே முற்காலத்திய நியூடன் முதலிய சோதிட சித்தாந்திகளை விட, இக்காலத்திய சோதிட சாஸ்திராதிகாரிகள் சிறந்தவர்களென்று சொல்லிவிடலாமா? கருவிகள் ஆயிரம் மடங்கு அதிகப்பட்டாலும், சாஸ்திர ஞானமானது ஒரு மடங்காவது அதிகப்படுமென்பதில்லையே. உதாரணமாக, ஒரு காய்க்குப் பதிலாகப் பத்து விதமான காய்கறிகளும் பலவகை அன்னங்களும் இலையில் பரிமாறப்பட்டாலும், அவற்றின்

தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றபடி நமது பசியையும் அதிகரிப்பித்துக்கொள்ள நம்மால் கூடுமா? இலையில் பதார்த்தங்கள் கொஞ்சமாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் எப்போதுமுள்ள பசிதான் இப்போதும் இருக்கும். முன்பு ஒன்றிரண்டு புஸ்தகங்கள் இருந்ததற்குப் பதிலாக, இப்போது லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இருக்கின்றன. முன்பு ஒரு மாதத்தில் எவ்வளவு அச்சிடப்படுமோ, அவ்வளவும் இப்பொழுது ஒரே நாளையில் அச்சிடப்படுகின்றன. இதனால் அக்காலத்துக் கவிகளையும், கிரந்தகர்த்தாக்களையும், பிரஸங்கம் செய்யும் புலவர்களையும்விட மேலானவர்களா—இக்காலத்தவர்கள்? இப்பொழுது எத்தனையோ அருமையான சித்திரங்கள் எழுதப்படுகின்றன. அதனால் அக்காலத்திய சித்திரவேலைக்காரர்களைப் பார்க்கிலும், இக்காலத்துச் சித்திரவேலைக்காரர்கள் சிறந்தவர்களென்று சொல்லிவிடலாமா?

***

இந்நாளைய வெளிவாழ்க்கையில் சௌகரியங்கள் அதிகமாயிருந்தும், உள்வாழ்க்கைச் சுகத்தை மாத்திரம் நாம் அதிகமாக அடையாமலிருப்பதென்ன? மனோரம்மியமான இன்ப வாழ்க்கையை நாம் இப்போது திருப்திகரமாய்ப் பெற்றுக்கொள்ளவாவது முடிகின்றதா? சாஸ்திர ஞானத்துக்கான கருவிகள் இப்போது பெருகியிருப்பதைக் கண்டு எதை உபயோகிப்பதென்று தெரியாமல் தியங்கி, உபகரணங்களும், சாதனங்களும் அளவற்றுக் கிடப்பதைப் பார்த்து, அதைப் பற்றுவோமா—இதைப் பற்றுவோமா என்பதாகப் பிரமித்துக் கிடக்கிறோம் என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது.

***

பரம சுந்தராங்கியான ஒரு பெண்ணின் வெளி அழகைக்கண்டு மயங்கிவிட்டவன், அப்பெண்ணின் உள்மனத்தையும் குணங்களையும் கண்டறிவதற்கு முயலாமல், எப்படியாவது அப்பெண் தனக்கு மனைவியாய்க் கிடைத்தால் போதுமென்று நினைத்து விடுகிறான். அதுபோல் நமக்கு வெளிவாழ்க்கையில் புதிதாய்க் கிடைத்திருக்கிற அருமையான கருவிகளையும் பதார்த்தங்களையும் கண்டு ஸந்தோஷிக்கிற பரவசத்திலே, அவைகளிடத்திலுள்ள குற்றங்களையும், அவைகளை நாம் ஏற்றுக்கொள்வதனால் விளையும் தீமைகளையும் சிந்தித்துப் பார்க்கிறதில்லை. அப்புதிய கருவிகள் நம்முடைய சாமர்த்தியத்தையும் சௌகரியத்தையும் விருத்தி பண்ணுகின்றனவென்று தவறுதலாய் நினைத்து விடுகிறோம். உண்மையாகப் பார்த்தால் அவைகள் நமக்குவேண்டிய சாதனங்களை மாத்திரம் வீணாகப் பெருக்குகின்றனவே யன்றி வேறில்லை. உதாரணமாக இறகு பேனாவுக்குப் பதிலாக 'பவுண்டன் பேனா' கிடைத்திருப்பதில் அதிலுள்ள அதிகச் செலவையும், மையின் அதிக கிரயத்தையும், சீக்கிரம் அது கெட்டு

விடுவதான தோஷங்களையும் நாம் கவனித்துப் பார்ப்பதில்லை. அந்தப் பேனாவிலும் பலவிதம் இருப்பதால் எதை வாங்குவதென்று திகைக்கிறோம். இறகு பேனா ஏந்திய கையில் பவுண்டன் பேனா ஏறிவிட்டதினாலேயே, நமது அறிவும், எழுதும் சக்தியும் மேன்பட்டுப் போய் விடுகின்றனவா? ஒருபோதுமில்லை. அது எப்போதும் போல் இறகுபேனா எழுதும் போதிருந்த அளவில்தான் பவுண்டன் பேனா பிடிக்கையிலும் இருந்து வருகின்றது. இவ்விதமாகவே, பூர்வத்தில் நூற்றுக்கணக்காகப் புஸ்தகங்கள் இருந்த காலத்தில், அவைகளுள் இன்னின்னவை சிறந்ததென்று தெரிந்து, அச் சிறந்தவைகளைச் செவ்வையாகக் கற்று ஞானமடைந்தார்கள். அது ஆழமான—திறமையுள்ள கல்வியாகவும் இருந்தது. இப்போதோ புஸ்தகங்கள் லக்ஷக்கணக்காக அடுக்கி யிருப்பதால் யாருக்கு என்ன தட்டுப் படுகிறதோ அதைப் படிப்பதும், அப்படிப் படிப்பதையும் கூட ஆழ்ந்தறியாமல் மேலெழுந்தவாரியாக நுனிப் புல் மேய்வது போல் பார்ப்பதுமாக இருக்கிறது.

***

நமது வெளிவாழ்க்கையில் நாளுக்கு நாள் புதிது புதிதாக நூல்கள் பெருகிக் கொண்டே யிருக்கின்றன. சாஸ்திரங்களிலும் எத்தனையோ விதங்கள் வெளி வந்துள்ளன. ஒவ்வொரு சாஸ்திரத்திலும் கிரந்தங்கள் அபரிமிதமாய் இருக்கின்றன. ஆதலால் ஒரு சாஸ்திரத்தையேனும் முழுதும் படிக்கக் கூடாமல், அதனுடைய நூற்றிலொரு பங்கைக்கூட ஒருவன் நன்றாய் அப்பியாசிப்பது கடினமாயிருக்கிறது. சாஸ்திரத்தை நூறு பங்காக்கி, அதில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொருவன் தனித் தனியே படித்துக்கொண்டிருப்பதனால், சாஸ்திர முறையானது ஒருவனுக்காவது முற்றும் நன்றாய்த் தெரிய இடமில்லாமற் போகின்றது. இதில் என்ன பயன்?

***

உள்வாழ்க்கையின் உத்தம குணங்கள் பெருகித் தன் நாட்டினரை ஆதரித்து, அவர்களின் க்ஷேமத்துக்கான விதமாய் நடந்து கொண்டு செல்லாமையினாலே, இக்காலத்தில் எத்தனையோ பேர் ஜீவனமே கிடைக்காமல் கேவலம் பிச்சை யெடுத்து, அதனால் உயிரை மன்றாடிக் காப்பாற்றி வருகிறார்கள். எத்தனையோ பேர் கையிலும் ஒன்று மில்லாமல், பிச்சை எடுக்கவும் துணியாமல் மானத்துக்கு மன்றாடி அவஸ்தைப் படுகிறார்கள். உடம்பை ஒடித்து உழைத்து வேலையை மட்டும் அதிகமாகச் செய்து கால் வயிற்றுக் கஞ்சியுடன் நாட்களைக் கழிக்கிறவர்கள் எத்தனையோ பேர்! ஆகாரக் குறைவினாலும், கெட்ட ஜலத்தை யருந்திக் கெட்ட காற்றை உட்கொள்ளுவதனாலும் எத்தனையோ பேர் சாகிறார்கள். சரியான போஷணையில்லாமல் தவிக்கும் குழந்தைகளை அளவிட

எவரால் முடியும்? இக் காலத்திலுள்ள ஏழ்மைத் தனத்தையும், துர்நடத்தைகளையும், திருட்டு மோசங்களை கண்கொண்டு பார்க்கக் கூடவில்லை. வெளி வாழ்க்கையில் மயங்கியுள்ள கண்ணியர்கள் இவற்றைப் பற்றி ஏதேனும் சிந்திக்கின்றார்களா? அந்நாகரீகர்கள் தங்களின் மோட்டார் இன்னும் கனவேகமாகச் செல்வதற்கு என்ன உபாயம் என்பதை யோசித்துக்கொண் டிருக்கிறார்களே தவிர, அது ஏறி எவ்வளவு பேர்களைக் கொல்லுகிற தென்பதைப் பற்றி யறிய நேரமில்லாம லிருக்கிறார்கள்! குபேரன் பட்டணத்திலும் ஏழைகள் உண்டென்பதுபோல, மேற்கூறிய தோஷங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் இருக்கவே செய்யும். ஆனால், இப்பொழுது என்ன விபரீதம் என்றாலோ, அங்கும் இங்கும் ஏதோ கொஞ்சமாகக் காணப்பட்டால் அவ்வளவு விபரீதமில்லை தான்; அப்படி யின்றி அக்குற்றங்கள் மிதமிஞ்சிப் பெருகி இருந்தால் அதை என்னென்று சொல்வது? வெளிப்பகட்டே அதிகமாகிவிட்ட இக்காலத்து உலக வாழ்க்கையின் தன்மையைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு தட்டில் அபரிமிதமான செல்வமும், யதேச்சையான சுகமும், மற்றொரு தட்டில் கேடுகெட்ட ஏழ்மைத்தனமும், சகிக்க முடியாத துன்பமும் அமைந்திருப்பதாகச் சொல்லலாம்.

***

வெளிவாழ்க்கையின் விருத்தி காரணமாக கிராமங்கள் அலக்ஷியம் செய்யப்பட்டு எல்லோருக்கும் நகரவாசமே இப்போது அதிகரித்து விட்டதனால், தங்களின் கிராமத்தி லிருந்தபடியே முன்போல் பிழைக்க முடியாமல் பட்டணங்களுக்கு வந்து ஜீவிக்கப் பார்க்கும் ஏழைகள் எவ்வளவோ பேர். அப்படி நகரங்களுக்கு வந்தும் தக்க ஜீவனம் கிடைக்காமல், வெயிலுக்கும் காற்றுக்கும் மழைக்கும் தாங்காத அல்பமான குடிசைகளில் வசித்து, கைக்கும் வாய்க்குமாய்த் திண்டாடி லக்ஷம் லக்ஷமான ஜனங்கள் தவித்துக் கொண்டிருக்க, மற்றொரு பக்கம் ஐச்வரியவந்தர்களின் மோட்டார் வண்டிகளும், சாரட்டுக் குதிரை வண்டிகளும், கௌரவங்களுக்காக விரும்பிக் கூடும் கூட்டங்களும் நடமாடியபடி இருக்கின்றன. ஒரு பக்கத்தில் பலர் பஞ்சத்தால் சாக, மற்றொரு பக்கம் சிலர் பாயச விருந்து உண்டு களிப்பதானது உண்மையான ஜனஸமூக வாழ்க்கைச் சுகமாகுமா? அது பொது ஸமூக நன்மைக்கு நலம் தருமா? வெளிவாழ்க்கை மட்டும் ஓங்கி விட்டதனால் உண்டான தீமையின் விளைவுகளன்றோ இவை?

***

வெளிவாழ்க்கை விருத்தியடைந்து, அவற்றின் பயனாய் மாளிகை போன்ற கப்பல்கள் ஸமுத்திரத்தில் பட்டணங்களை நகருகின்றன வென்று சொல்லும்படி அவ்வளவு ஆச்சர்யமாய் ஓடிக்கொண் டிருப்பது உண்மைதான்; ஆனால் அவைகளில் யாத்

திரை செய்வது யார்? உல்லாஸத்துக்கும் பூரிப்புக்குமாகப் பிரயாணப்படும் செல்வவான்கள் சிலரேயாக, வீட்டில் அன்ன வஸ்திரத்திற்கு இல்லாமல் எங்கேயாவது வெளியேறிப் பிழைக்கக் கருதுகிற ஏழைகளே அதிகமான தொகையினராகிறார்கள். ஒரு சட்டையை ஆறு அணுவுக்குத் தைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்தத் தையற்காரன் மாதம் ஒன்றுக்குத் தன் வயிறு நிறைவதற்கானபடி சம்பாதிப்பது வெகு பாடான பாடாயிருக்கிறது. தொழிலாளியொருவன் மிக்க அருமையான வேலைப்பாடுள்ளவற்றைச் செய்து முடிக்கக் கூடியவன்தான். ஆனால் அவனை ஆதரிப்பாரில்லாமல், அவனும் அவன் மனைவி மக்களும் 'அன்னமோ ராமச்சந்திரா!' என்று கதறுகிறார்கள். எந்தெந்த இடத்தில் என்னென்ன பண்டங்கள் விசேஷமோ, அவைகளை யெல்லாம் நினைத்தபோது கடைத் தெருவில் வாங்கி விடலாம். ஆனால், அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்கிறவர்களுடைய ஸ்திதியை விசாரித்தால், பிராணனை விடத் துணியாமல் அவர்கள் பரிதாபமான பிழைப்பு பிழைக்கிறார்களெனத் தெரிய வருகிறது. இவை வெளிவாழ்க்கையின் வேகத்தால் ஏற்பட்ட கேடுகளன்றோ?

***

அன்பிலும் இரண்டு விதம் உண்டு; உள்ளன்பும் வெளியன்புமாம். உள்ளன்பையே எவரும் நாடிப் போற்றித் துதிப்பர். வெளியன்பு எவ்வளவு பெருகினாலும் அதனால் ஆகும் பயன் என்ன? வெளியன்புக்கு ஏற்றபடி உள்ளன்பும் விசாலித்துப் பெருகினாலன்றோ மேன்மை. அதுபோலவே, வெளிவாழ்க்கையின் ஆடம்பரத்துக்கு ஏற்றபடி உள்வாழ்க்கையின் உத்தம லக்ஷியங்களும் வளர்ந்து விசாலித்து, அவரவர்கள் தங்களுக்கானவற்றைத் தங்களின் நாட்டிலேயே சேகரித்துக்கொண்டு, எளியவர்களுக்கு ஜீவன மார்க்கம் காட்டுவதன்றோ சிலாக்யம். அவ்விதமின்றி எந்தப் பண்டங்களுக்கும் வெளி நாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டு, ஏழைகளுக்குத் தொழில்களும் ஜீவனமும் கிடைக்கவொட்டாமற் செய்வதாயிருந்தால், தாங்கள் பிறந்த பூமிக்கு முன்னேற்றம் எப்படிச் சித்திக்கும்? தனக்கு வேண்டிய அன்னத்தை வீட்டிற்குள் சமைத்துத் தயாரித்துக் கொள்வது போலவே, தங்களுக்கு வேண்டிய பண்டங்களையும் தங்கள் ஊர்களிலேயே செய்துமுடித்துக்கொள்ள வேண்டுமல்லவோ? அப்பொழுதன்றோ தங்கள் நாட்டிலுள்ள ஏழைகள், தொழிலாளர்கள் ஜீவிக்க வழி வகைகள் தோன்றும். இது உள்வாழ்க்கை மேன்மைப் படுவதிலிருந்தே ஏற்பட வேண்டும்.

***

வெளிவாழ்க்கை மட்டும் விசாலப்பட்டுள்ள இக்காலத்தில் எவ்வளவோ பொருள்கள் செய்யப்படுகின்றனவே என்கிற காரணத்தி

ஞலேயே இது சிறந்த காலம் என்று மகிழ்ச்சியடைய இடமிருக்கிறதா? அந்த வஸ்துக்களை அனுபவிப்பது யார்? சீமான்களே. அந்த வஸ்துக்களைச் செய்வது யார்? வெளிநாடுகளில் உள்ள அன்னியரே. இதைப் பற்றி நாம் நன்ருக யோசிக்கக் கடவோம். இக்காலத்தில் ஸகல சௌகரியங்களும் அமைந்திருக்கின்றன வென்பதற்குக் கருத்து என்ன வெனில், தனிகர்களுக்கு மேன்மேலும் தனம் விருத்தியாவதும், ஒன்றுமில்லாத ஏழைகள் வரவர அதிக ஏழ்மைத்தனத்திஞல் நொந்து போவதுமேயன்றி வேறில்லையென நினைக்க வேண்டியதாகிறது. இது நாகரீகமோ, அல்லது நாகரீகக் கேடோ? முற்காலத்தில் நீக்க இயலாத குறைகள் பல இருந்தனவாயினும், உள்வாழ்க்கையின் குணங்களே மிகுதியும் பெருகி நின்றமையால், இல்வாழ்க்கையின் சுகத்துக்கு விரோதமான தீமைகள் இப்போது உண்டாயிருப்பது போல் அக்காலத்திலில்லை. உள் வாழ்க்கை பெருகி நின்ற முற்காலத்தில் ரூபாய்க்குப் பத்து பன்னிரண்டு படி அரிசி கிடைக்க, வெளிவாழ்க்கை மட்டும் ஓங்கியுள்ள இக்காலத்திலோ ரூபாய்க்கு மூன்று படி அரிசி அகப்படுவதும் அபூர்வமாய் விட்டது.

***

நாகரீகத்தைப பெருக்குவதற்கென்று உத்தேசிக்கப்படும் நூதன உபாயங்களெல்லாம், அதை முன்னும் போகவொட்டாமல், பின்னும் போகவொட்டாமல் மயக்கி அதற்குக் கேட்டையும் விளைக்கின்றன. சாஸ்திரமும் பாஷா வித்தைகளும் புதிய கருவிகளை உபயோகிக்கத் தெரியாமல் தட்டுக் கெட்டுத் தடுமாறும்படி செய்கின்றன. நாகரீகத் தொழில்களும், நாகரீக மரியாதைகளும், நாகரீகப் பயிற்சிகளும் ஒரு நிதானமான நிலையில் நிற்காமல், புதிது புதிதாக நிமிஷத்துக்கு நிமிஷம் வேறுபடுகிற பாரீஸ் நகரத்து மோஸ்தர்போல், ஒரு வேளையிலுள்ளது மற்றொரு வேளையில் இல்லாமல் உடனுக்குடனே மாறி, ஒன்று போய் மற்றொன்று தோன்றினபடியே ஓயாத ஓட்டத்தில் உழன்று சாரம் கெட்டுப் போகின்றன. இவ்வித வெளிவாழ்க்கையிஞல் என்ன பயன்?

***

வெளியிலிருந்து வந்த அன்னியப் பெண் நமது வீட்டுக்குச் சொந்தமான மருமகளாய் மாறி நமது குலத்தைச் சேர்ந்தவளாய் விடுவதுபோல, புதிதாகத் தோன்றும் விஷயங்கள் பழமையான உள்வாழ்க்கையோடு விரோதப் படாமல் ஒன்று சேர்ந்து ஐக்கியமாகி, ஒரு கிரமமான ஒழுங்கை யடைவதுதான் மனிதர் வாழ்க்கைக்குப் பெரிய லக்ஷணம். அப்படிப்பட்ட ஒழுங்கானது இப்பொழுது பிசகியிருக்கிறது. புதியவை பழயவையோடு கலக்காமல் வேறுபட்டு நிற்கின்றன; பழயதின் ஆணிவேரைப் பாழ்ப்படுத்தியும்

விடுகின்றன. இந்த நூறு வருட காலமாய் வெளிவாழ்க்கையானது வெகு வேகமாக முன்னுக்கு வந்து விட்டது. இந்த வேகத்துக்குச் சரியாக ஞானம், புத்தி, நல்லொழுக்கம், கடவுள் பக்தி, தயாளத்வம், சுதேசக் கைத்தொழில் வர்த்தகங்களின் அபிவிர்த்தி, நாட்டின் செழிப்பு, ஐக்கிய சிந்தை—முதலிய உள் வாழ்க்கையின் லட்சணங்களும் உண்மையாகவே விருத்தியடைந்த பிறகுதான் யதார்த்தமான சீர்திருத்தம்—முன்னேற்றம்—நாடெங்கும் பரவியதாகும். உள்வாழ்க்கையில் முன்பு நமது நாடு—பூர்வீக இந்தியா மிக்க உன்னதங் கொண்டு, படிப்பைவிட ஸன்மார்க்கமே பெரிதாய் எண்ணப்பட்டு, நாட்டுக் கைத்தொழில்களுக்கும் ஜீவ ஒளியைத் தந்து விளங்கிற்று. இப்போதைய வெளிவாழ்க்கையிலோ கைத்தொழில்கள் நசித்துப் போனதோடு ஸன்மார்க்கத்தை அலக்ஷியம் செய்துவிட்டு வெறும் படிப்பே பிரதானமாய்க் கருதப்பட்டு வருகிறது. பழைய உத்தமமான உள்வாழ்க்கையின் லக்ஷணங்கள் மறைந்து, பெரும்பான்மையும் கைவிடப் பட்டுப்போய், தற்காலப் போலி நாகரீகமான மேற்சொன்ன வெளிவாழ்க்கையின் வேகம் மட்டும் வெகுவாக அதிகரித்துச் செல்லுவதினால் உண்டாகும் பயனென்னவோ ?

---

செவ்வாய்க்கிழமை :—இது ஒரு பாழுங்கிழமை என்பது பலரது எண்ணம். அவர்களின் அநுபவத்திலும் அப்படியே முடிகிறது. சிலருக்கு இந்தக் கிழமையில் எவ்வேலையும் செய்யக்கூடாதென்ற எண்ணமிருந்தும், அக்கிழமையிலேயே ஒரு பெரிய காரியத்தை நடத்தும்படியாகிவிடுகிறது. ஆனால் அக்காரியம் நீடித்து நடந்தாலும் விருத்தியடைந்து விளங்குகிறதில்லை. ஆனால் சிலருக்கு இது அதிர்ஷ்டநாளாக இருக்கிறது. காலஞ்சென்ற ஏழாவது எட்வர்ட் அரசர் பிறந்தநாளும் செவ்வாய். அவருக்குப் பெயரிட்ட நாளும் செவ்வாய். அவருக்குப் பட்டாபிஷேகம் நியமித்த நாளும் செவ்வாய். அவர் குணப்படும்படி சிகிச்சைசெய்யத் தொடங்கிய நாளும் செவ்வாய்.

---

ஒரு புராதன நாற்காலி :—முதலாவது எட்வர்ட் (Edward the Confessor) என்ற அரசரால் ஸ்காட்லாண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கல்லைத் தாங்குவதற்காக கருவேல மரத்தினால் ஒரு நாற்காலி செய்யப்பட்டது. இந்த நாற்காலியில்தான் இங்கிலாந்து மன்னர்கள் மகுடாபிஷேக காலத்தில் உட்காருவது வழக்கம். அத்தருணத்தில் இந்த நாற்காலியை ஸ்வர்ண வஸ்திரத்தால் மூடுவது வழக்கம். ஹிந்துக்கள் மாமூல், மாமூல் என்று பல அவிவேக வழக்கங்களைப் பின்பற்றுகிறார்களென்று பழிப்போர் இதைக் கவனிக்கக் கடவர்.

---

காலணா ஸ்டாம்பு :—காலணா ஸ்டாம்பிடத்தில் ஜனங்களுக்கு இப்பொழுது எவ்வித வேலையுமில்லை. தாம் தபாலுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு அத்தாட்சி (Certificate of Posting) பெறுவதற்கு மட்டும் இது உதவுகிறது. மற்றபடி பத்திரிகைகள் நடவாத ஊரில் இதற்கு வேலையேயில்லை. காலணா கார்டுகள் வாங்கிய காலமும் கனவாய்ப் போய்விட்டது.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(26-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

9. அக்கு தொக்கு இல்லாதவனுக்குத் துக்கம் ஏது ?

10. அக்கு தொக்கு இல்லாதான் ஆண்மையும், வெட்கம் சிக்கில்லாதான் தோஷமும், மிக்கத் துக்கப்படாதான் வாழ்வும் நாய் கக்கி நக்கித் தின்கிறதற் கொக்கும்.

இவ்விரு பழமொழிகளும் ஒரே பொருளைத் தருவன. ஆழ்ந்த அநுபவங்கள் இதில் நிரம்பியுள்ளன. உலக சுபாவத்தை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுவன. 'அக்கு தொக்கு' என்பது வழக்கச் சொற்களில் ஒன்று. அகராதியில் அந்தப் பதம் காணப்படவில்லை. 'அக்கு தொக்கு இல்லாதவன்' என்றால், திக்கு திசை யற்றவன்-அதாவது அனாதி என்றும், ஒருவர் மீது ஒருவகையான பற்றுதல்-பாசம்-உருக்கம்-ஒரு பிடிப்பு-உள்ளக் கனிவு-நெஞ்சிரக்கம்-அன்பு-அன்பால் உண்டாகும் பரபரப்பு-ஆத்திரம்-தன்னைக் கவனிக்கக்கூடிய அன்புள்ள உறவு-சுற்றம் இவைகள் இல்லாதவன் என்றும் வெகு வெகு நீளமாய்ப் பொருள்படும். வழக்கச் சொற்களுக்கு எவரெவர் எவ்வெவ்விதமாக வேண்டுமானாலும் அர்த்தம் கற்பித்துக்கொள்ளலாம் ; அதற்கு ஓர் எல்லையில்லை. எல்லா அர்த்தங்களும் அதற்குப் பொருந்தியே நிற்கும்.

திக்கு திசை யற்றவனாகிய அனாதிக்குத் துக்கம் ஏது ? அவனைக் கவனித்து அவனுக்காக இரக்கப்படுகிறவர்களும் அன்பு காட்டுகிறவர்களும் இல்லை. எவரும் அவனை அன்னியன்போல் பாவித்துத் தூர விலகிக்கொள்வதால், அவர்கள்மேல் அவனுக்கு அன்பு உண்டாகப்போகிறது மில்லை ; அந்த அன்பால் உருகி அவன் மற்றவர்களிடம் இரக்கம் காட்டவோ, அன்பால் தாவி நிற்கவோ போகிறதுமில்லை. அவனை அன்னியன்போல் ஒதுக்கினவர்களை, அவனும் அன்னியர்கள்போலவே அவர்களை ஒதுக்கி விலகி விடுகிறான். அன்பு காட்டாத இடத்தில் அன்பு உண்டாவதில்லை. இத் தகையோன் எவருக்காகத் துக்கம் காட்டப்போகிறான் ? எவர் எப்பாடு பட்டாலும், எக்கதி கெட்டாலும், என்னதொல்லை துயரங்களில் உழன்றாலும் அதைப்பற்றி இவனுக்குத் துக்கம் ஏது ? அல்லது தன்னைப்பற்றியே தானாகிலும் துக்கப்படப்போகிறானா ? அதுவுமில்லை. தன் துன்பம், தன் கஷ்டம், தன் ஏங்குதல், தன் தவிப்பு, தன் பொல்லாப்பு, தனது இராப் பட்டினி-பகற்பட்டினி யாவும் தன்னாலேயே கவனிக்கப்படவேண்டு மென்றும், தன்னாலேயே நிவர்த்தித்துக்கொள்ள வேண்டுமென்றும், அவ்விதம் தன்னால் தீர்த்துக்கொள்ள முடியாதவற்றைத் தெய்வமே என்று நொந்து சுமந்து தானேதான் அநுபவித்துத் தொலைக்கவேண்டுமென்றும் தன்னில் தானே நன்றாக உணர்ந்துகொள்கிறான். இவ்விதம் பட்டுத் தெளிந்துகொண்டுவிட்டவனொருவனுக்குத் தன்னைப்பற்றி என்ன துக்கம் உண்டாகப்

போகிறது? வந்தது வரட்டும் என்ற நினைவோடு தனக்காக அவன் என்றைக்கும் துக்கப்படப்போவதில்லை. பிறரிடத்தும் அவனுக்குத் துக்கம் உண்டாகப் போவதில்லை. மற்றவர்களுக்குத் துக்கம் சம்பவித்தாலும் 'சரிதான்' என்று அதை அலக்ஷியமாய் ஒதுக்கித் தள்ளிவிடுகிறான். மற்றவர்களுக்கு வாழ்வு வந்தாலும் தனக்கு அதில் என்னலாபம் என்று அதையும் ஒரு பொருட்டாய்க் கவனிக்காமல் பராமுகமாய் இருந்துவிடுகிறான். இவ்வாறாகி, அன்பு என்பதன் பொருளையே அறியாமற்போனவனுக்குத் துக்கம் என்பதுதான் ஏது?


எல்லோரும் தன்னை எங்குவந்து ஒட்டிக்கொள்ளப் போகிறானோ செலவுக்கு இடம் வைக்கிறானோ, சோற்றுக்குப் பாரமாய்வந்து உட்கார்ந்து கொண்டு விடுகிறானோ என்று எண்ணி நெருங்கவொட்டாமல் தள்ளி ஒதுக்கிவிடுகிறபோது, அவர்களிடத்தில் அவனுக்கு என்ன பற்றுதல் உண்டாகப் போகிறது? என்ன பாசம்தான் அவர்களிடம் கொள்ளப்போகிறான்? அவர்களிடம் உருக்கம் எப்படி உண்டாகும்? 'பிடிப்பு' அற்றவர்களிடம் 'பிடிப்பு' ஏது? உள்ளக்கனிவு நெஞ்சிரக்கம் இவைகளும் அவனிடம் தோன்றுவது அற்றுப்போகிறது. அன்போ, அன்பால் உண்டாகும் பரபரப்போ எதுவும் அவன் உணரான். மற்றவர்கள் கடினலோப சித்தாந்திகளாய் அவனிடம் நடந்துகொள்கிறபோது, அவர்களைப்பற்றி எவர் எது நிந்தித்தாலும், அன்பின் கசிவினால் மெல்லிய மனமாக மாறப்படாத அவனது உள்ளம் எதற்கும் ஆத்திரப்படப் போவதில்லை. தன்னைக் கவனிக்கக்கூடிய அன்புள்ள உறவு, சுற்றம் இல்லாதவனுக்கு, அந்த உறவு சுற்றத்தார் எக்கேடு கெட்டாலும் அதற்குத் துக்கமோ, கவலையோ அவன் கொள்ளப்போகிறதில்லை. அவனை 'நடுத்தெரு நாராயணா' என்று தெருவில் அலைந்து திக்கற்றுப்போகும்படி விட்டு விட்டவர்களிடம் அவனுக்கு வேலை என்ன இருக்கிறது? அவன் நெஞ்சமும் அன்பால் இளகி மிருதுத்தன்மையடையாமல் கருங்கல்லாய் மரமரத்துப் போகிறது. 'நாய் வாழ்ந்தாலென்ன, பூனை தாலி யறுத்தால்தான் எனக்கென்ன' என்று இருந்துவிடுகிறான். சுற்றம் உறவு இல்லாதவன் உலகில் எவனுமில்லை. எங்கேயாவது ஒருவன் நெருங்கியவனாக இருக்கவே இருப்பான். ஆனால் கவனியாத மனுஷ்யர்கள் இருந்தென்ன போயென்ன? இவ்விதம் கவனிக்கப்படாமல் எவருமே அற்றுப்போனவனுக்கு—அதாவது அந்தநோக்கு இல்லாதவனுக்கு (மற்றவரைப்பற்றி அவனுக்குத்) துக்கமேது? இதையே இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. இப்படிப் பந்துஜன ஸமூகம் ஒருவனை ஏது மில்லாதவனென்று கருதி ஒதுக்கி உதறிவிட்டு, அவனை அனாதியாக்கித் திக்கற்றுத் தெருவில் நிற்கும்படி விடுவது சரியாகுமா?—தர்மந்தானா—நீதியோ? அது ஒரு ஸமூகத்தின் கேடுகெட்ட நிலையை விளக்குகின்றதன்றோ? இவ்விதமான 'உதறிவிடுதலை'த் தனக்குள் வைத்துக்கொண்ட ஒரு பந்துஜன ஸமூகம் தான் செய்யும் மற்ற தானதர்மங்களால் என்ன பயனை யடையப் போகின்றது? எப்போதும் எத்தகைய ஒருவனையும் அன்பற்றுப் போகும்படி விடுவது—அவன் மனத்தைக் கல்லாக்கிவிடுவது—ஒரு ஸமூகத்திற்கே பெருங்கேடாய், பழிப்பாய் முடிந்துவிடும். ஸமூகத்துக்கு உபயோகமுள்ள ஒரு மனுஷ்யனை உபயோகமற்றவனாக்கிவிடுவது எவ்வளவு கெட்ட காரியம்? அன்புடன் நடந்து அன்பு பாராட்டியிருந்தால் அவன் இப்படி "அந்தநோக்கு இல்லாதவ"னாகிக் கல்மனதாய், அன்பு வற்றிய நெஞ்சமாய்

மாறிப்போயிருப்பானு? இதைப் பந்து ஜனஸமூகம் சிந்தித்துப் பார்க்கட்டும். எவ்வாருகவேனும் ஒரு சிறிதாவது சக்தியானுசாரம் உதவி ஏழையொருவனைக் கைத்தூக்கி விடுவதுதான் பந்துஜன ஸமூகத்திற்குக் கடமையும் தர்மமும் கௌரவமு மாகுமேயன்றி, "தவிக்கவிடுதல்"—"உதறி விடுதல்" எக்காலத்துக்கும் இழுக்கே. கடைசிநாளில் கடவுளிடம் அதற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதாகவும் ஆகிவிடும். இரக்க சித்தமும் இளகிய நெஞ்சமும் பந்துஜன ஸமூகத்தில் தாண்டவ மாடிக்கொண்டிருந்தால் எவனையும் இப்படி "அக்கு தொக்கு இல்லாத"வனுக அந்த ஸமூகம் ஒரு போதும் விட்டுவிடாது. தன்னளவில் தன் காரியத்தைமட்டும் கவனித்துக் கொண்டு, பிறர் எக்கேடு கெட்டா லென்னவென்கிற சுயநலமான எண்ணந் தான் இவ்விதமான கேட்டுக்கு அஸ்திவாரமாகிறது. கடைசியில் இந்த சுயநல எண்ணம் கடவுளையும் பாப புண்ணியங்களையும் கூட எண்ணுதபடி செய்துவிட்டு, வெகு கேவலமான நிலையில் சித்தத்தைக் கொண்டுபோய்ப் படுகுழியில் வீழ்த்தி விடுகிறது; பாவமூட்டையைச் சுமந்து கொள்ளவைத்து விடுகிறது.

இவ்விதம் யாவராலும் கைவிடப்பட்ட, எல்லோரும் இருந்தும் இல்லாமற்போன இந்த "அக்கு தொக்கு" அற்றவனே எந்த ஊருக்கு வேண்டுமானுலும் திடீரென்று உடனே புறப்பட்டுவிடுகிருன். அவர்களைப் பிரிய வேண்டுமே, இவர்களைப் பிரியவேண்டுமே என்ற "பற்றுதலின் துன்பம்" அவனுக்கு இல்லவேயில்லை. எந்த வீட்டில் எது நடந்தாலும் அதில் அவனுக்கு ஒரு சிரத்தையுமில்லை. சந்தோஷமோ வியஸனமோ எதுதானும் அவன் கொள்ளப்போகிறதேயில்லை. தான் உண்டு, தன் துணிமூட்டையுண்டு என்று அவ்வளவில் பற்றற்றவனுய் இருந்துவிடுகிருன். இப்படிப் பட்டவனுக்குத் துக்கம் என்பது வந்து 'பொத்தி'க்கொள்வதேது என்பதையே இந்தப் பழமொழி வெகு நுட்பமாய் எடுத்து விளக்குகிறது.

இன்னெருவித அர்த்தமும் இந்தப் பழமொழிக்கு உண்டு. 'அக்கு தொக்கு இல்லாத' வனுக்கு, அதாவது தன் உறவு, தன் சுற்றம் என்கிற அன்பான எண்ணம் இல்லாதவனுக்கு, எத்தனை உறவினர், சுற்றத்தார் சூழ இருந்து கவனித்தாலும், அது அவனுடைய மனதில் விசுவாசமாய்ப் படுவதில்லை. தனக்காக உழைக்கிருர்களே, உழைத்தார்களே யென்றும் அவன் நெஞ்சில் தைப்பதில்லை. தனக்கு என்ன நன்மை தன் பந்துக்கள் செய்திருந்தபோதிலும் அவன் அதை ஒரு பொருட்டாய்க் கருதுவதில்லை. அவர்கள் தனக்குச் செய்யவேண்டிய தலைவிதி இருந்து செய்ததாக நினைக்கிருனே தவிர, செய்தார்களே என்றும் அவன் எண்ணுவதேயில்லை. என்ன செய்துவிட்டார்கள், மகா சாதித்துவிட்டார்களோ, அந்த வெட்கக்கேட்டை எங்கு போய்ச் சொல்லித் தொலைப்பது—என்று எந்நாளிலும் பழிப்பாகவே இறக்கித் தாழ்த்திப் பேசத் தலைப்படுவான். எவருக்குத் தலை வலித்தாலும் நோவு வந்தாலும், சாவு—வாழ்வு நேர்ந்துகொண்டாலும் அதைப்பற்றி அவனுக்கு அக்கரையே கிடையாது. எந்தக் கெதிக்காவது போகிருர்கள்—எவர்கள் வீட்டில் இழவு விழுந்தாலும் எனக்கென்ன அதைப்பற்றி அக்கரை என்பான். இன்னும் தன் சுற்றம் தன் உறவுஎன்கிற எண்ணமில்லாதவனுக்கு எப்போதும் கெடு புத்தியே துணை. பிரித்து வைக்கிறதே அவன் வேலை. கலகம் உண்டுபண்ணுவதே அவன் தொழில். அவர்களுக்கு எதிரான பக்கத்

"ஆநந்தகுணபோதினி" அநுபந்தம்.




செனிபில்டர் ஒர்க்ஸ்,

டிசைனர்ஸ்,

லித்தோகிராபர்ஸ், கலர்பிரிண்டர்ஸ்.

40, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

தில் சேர்ந்துகொண்டு குத்தி வாட்டுகிறதே அவனது நித்தியப் பிரவர்த்தி. நேரில் இருக்கையில் வெகு மரியாதையாகவும் விசுவாசக் கொக்காகவும் நடித்துவிட்டு, பின் வெளியிலே பிறரிடத்தில் அந்தப் பயலா, அவனு என்று கேவலமாய் பேசவும் தொடங்குவான். ஆபத்துக்காலத்தில் தூர ஒதுங்கி விடுகிறதே அவனது தன்மை. பிறரது கஷ்ட காலத்தில் விரோதம் ஒன்றை வலிய வரவழைத்து உண்டாக்கிக்கொண்டு, வேற்று முகமாய், கண்டாலும் பேசாமல், அழைத்தாலும் வராமல் தூரப் போய்விடுகிறதே அவனது போக்கு. அவன் யாருக்காகவும் அழப்போகிறதில்லை. எவருக்காகவும் இரங்கப்போகிறதில்லை. எவருடைய சந்தோஷத்திற்காவது சந்தோஷப்படவும் போகிறதில்லை. நற்காரியங்களுக்கெல்லாம் விக்கினம் உண்டாக்குகிறது, குதர்க்கம் பேசுகிறது, அன்னமிட்ட வீட்டிலேயே கன்னமிடுகிறது, எதிர்த்து நன்றிகெட்டுத் தூற்றுகிறது, சட்டி சுட்டது கைவிட்டதென்றபடி சரி சரி என்று பற்றில்லாமல் நடந்துகொள்கிறது—இதுவே அவனது சுபாவமாக இருக்கும். அவனுக்கு எவர்களிடத்திலும் நன்றியுமில்லை, விஸ்வாசமுமில்லை, நல்ல நினைவைச் சிந்திப்பதுமில்லை, பிறர் வேலைக்குத் தான் உதவுவதுமில்லை. தன் பாட்டுக்குத் தன் சுகம்—தன் க்ஷேமம் என்பதைமட்டும் வெகு அக்கரையாய்க் கவனித்துக்கொண்டு அவ்வளவோடு கம்மென்று இருந்துவிடுகிற வெகு மோசகரமான சுயநலப்பற்றிலே தேர்ந்துவிடுகிறான். இப்படிப்பட்ட "அக்கு தொக்கு இல்லாதவனுக்குத் துக்கம் ஏது ?"

உலகத்தில் பந்து ஜன உறவை ஒரு மனுஷ்யனுக்குக் கடவுள் பிறக்கும் பொழுதே கூடவே உண்டாக்கிவைத்தது எதற்காகவென்றால், அவனை மற்றவர்கள் ஆதரிக்கவும், அவன் பின்னாளில் மற்றவர்களை ஸம்ரக்ஷணைசெய்து உதவிகள்புரிந்து காக்கவும், இவ்விதமாய் ஒருவருக்கொருவர் உபகாரமாய் இருக்கவுமேயாகும். இவ்வாறான ஈசுவர நியமத்திற்கு விரோதமாய் ஒருவன் தன் பந்து, தன் சுற்றம் என்கிற உருக்கமான, பற்றுதலான, இரக்கமான, இளகியதான சிந்தையும்—இளகிய மனப் பிரவர்த்தியும் இல்லாமற்போவதாகில், அவனுக்கு யார் என்ன செய்துதான் என்ன பிரயோஜனம் ? எவ்வளவு பிரியமாய் நடந்துகொண்டாலும் அது வீணுக்கு உழைத்ததாகவே யாகும். அவனை மனுஷ்யர்களில் கடைபட்டவனென்றே, மிருகத்தினும் கேடாகவே சொல்லவேண்டுமே யன்றி அவனை ஒரு மனித உருவமாகப் பாவிப்பதே கூடாது. இவ்விதம் மனுஷ்யத்தன்மைக்குள்ள இயற்கையான பந்து ஜன சுபாவம் அற்றுப் போய்விட்ட மனிதனுக்குத் துக்கம் ஏது ? இவ்வாறாகவும் அந்தப் பழமொழியின் தாற்பரியம் இருக்கிறதென்று அதற்கு இந்த இரண்டாவது அர்த்தத்தையும் கற்பிக்கலாம்.

இவ்விதமாகத் தன் பந்து, தன் சுற்றம் என்று எண்ணாமல் ஒருவன் மாறிப்போகிற காரணத்தையும் இங்கு கவனிப்பது பொருந்தும். ஒருவனுக்கு எல்லா சுற்றமும் உறவுமாய் ஒருவர், இருவர், இருந்து அவர்கள் கண் மூடிக்கொண்ட பிறகு, அவனுக்கு இந்த உலகமே வெற்று வீடாய், காலி மனையாய்த் தோற்றுகிறது. எவர்களிடமும் அவனுக்குப் பிரியம் வைக்கப் புத்தி போவதில்லை, 'பிரியம்' என்பது தன்னிலேயே ஊறி இன்னொருவர் மீது ஏற்படுவதே யன்றி, வலுவிலும் கட்டாயத்திலும் பலவந்தமாக ஒருவர் மீது வைக்கும் பொருளல்ல. அப்படி வைப்பதும் முடியாத காரியம். ஆகவே, தான் முன்பு பிரியம் வைத்திருந்தவர்கள் கண் மூடிக்கொண்டு இவ் வுலகை

விட்டுப் போய்விட்டபிறகு, அத்துடன் தன்னுடைய சகல ஆசைகளும் அற்றுப்போய், எவர் மீதும் விருப்பில்லாமல், தன் பந்து, தன் சுற்றம் என்கிற எண்ணங்களை உதறிவிட்டுப் பற்று இல்லாதவனாய் மாறிவிடுகிறான். இப்படிப்பட்டவனுக்குத் துக்கம் என்பது ஏது ?

இனி, சிலர் இயற்கையிலேயே, விசுவாசமற்ற, நன்றியற்ற உள்ளமாய் தன் பந்து, தன் சுற்றம் என்கிற சிந்தனையேயின்றி எவ்வளவு செய்தாலும் எத்தனை வருஷங்கள் ஆதரித்துக் காத்தாலும்—அதை நினைக்காதவுள்ளமாய்க் கெட்டுவிடுகிறார்கள். அந்தக் குணம் அவர்களின் பிறப்போடேயே கூடப் பிறந்ததாகும். அதை மாற்ற ஒருபோதும் முடியாது. அத்தகையோர்க்குப் பிறரைப்பற்றித் துக்கம் எங்கிருந்து உண்டாகப்போகிறது?

இன்னும் சில சீமான்கள் கடினமனத்தினராய், பரமலோபிகளாய், செல்வம் சேர்ப்பதிலேயே எண்ணமுள்ளவர்களாய், எங்கு எவர்களால் என்ன செலவு நேர்ந்துகொள்ளுமோ வென்று நடுங்குகிறவர்களாய், எதிலும் தூர விலகி ஒதுங்கிக்கொள்பவர்களாய், தன் பந்து, தன் சுற்றமென்று கருதாமலும், அவர்களுக்கு ஒரு உதவி தானும் செய்யாத பிசினாரிகளாகவும் இருப்பார்கள். இவ்விதமாக "அக்கு தொக்கு இல்லாத"வர்களுக்குத் துக்கம் என்பது ஏது ?—என்று இவ்வாறாகவும் இந்தப் பழமொழி வெகு வெகு நீள வியாக்கியானம் எழுதும்படியாய் அதிகமான ஆழ்ந்த கருத்துகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு விளங்குகிறது.

இவ்வளவு விரிவாக நாம் மேலே சொன்ன கருத்துகளையே, 10-வது பழமொழி இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. "அக்கு தொக்கு இல்லாத"வனுக்கு ஆண்மை ஏது ? எதற்காக அவன் சிரத்தைப்பட்டுத் தன் ஆண்மையைக் காண்பிக்கப் போகிறான் ? அவனுக்கு 'வெட்க'முமில்லை; 'சிக்கு' மில்லை; அதனால் உண்டாகிற பழி, இழிவு முதலிய தோஷங்களையும் அவன் பொருட்படுத்தப் போகிறதுமில்லை. இவ்விதம் எதிலுமே இரக்க சிந்தையற்றுத் 'துக்கப்படாதான் வாழ்வு' என்னத்திற்கு உதவும் ? உள்ளத்திலே அன்பு இருந்தால் அல்லவோ துக்கம் தோன்றப்போகிறது ? அந்த அன்பு எதுவுமே யில்லாமல் சுரணை கெட்டுப்போன ஒருவனுக்குத் துக்கம் எங்கிருந்து உண்டாகப்போகிறது ? அவ்விதமான ஒருவனுடைய வாழ்வு வாழ்வாகுமா ? அவன் உலகத்தாரைப்போல் ஒரு மனிதனாகவாவது, ஒரு வாழ்வு வாழ்வதாகவாவது சொல்ல முடியுமா? அப்படிப்பட்ட ஈனமான, கேவலமான, 'வாழ்வுத் தன்மை' யை இழந்த ஒருவனுடைய ஜீவியம் எதற்கு ஒப்பாகுமென்றால், அது 'நாய் கக்கி நக்கித் தின்கிறதற் கொக்கும். இந்தக் கருத்தையே இந்தப் பத்தாவது பழமொழி எடுத்துக்காட்டுகிறது.

இதில் இன்னொரு பொருளையும் நாம் விவரிக்கவேண்டியிருக்கிறது. நாயின் கேவலமான குணம் தான் உண்டவற்றையே கக்கிவிட்டு அவ்விதம் கக்கியவற்றை மறுபடியும் தின்றுவிடுவதாகும். இந்த சுபாவம் நாயைத் தவிர வேறு எந்தப் பிராணிகளுக்குமில்லை. இந்த நாயின் இழிந்த சுபாவத்தை தன் பந்து தன் ஜனம் என்று எண்ணாத ஒருவன் கைக்கொண்டு விடுகிறான். தன் செயலையே தான் புகழ்ந்து கொள்கிறான். தான் அப்படி எவரிடத்தும் விசுவாசமற்று நிற்பதே பெரிய சமர்த்து என்று தன்னைக் கர்வித்துக்கொள்கிறான். தனக்கு நிகர் எவருமில்லையென்று எண்ணிக்

கொண்டு எவரையும் உதறிவிடுகிறான். எவருக்கும் தலை வணங்காமற் போகிறான். இப்படிப்பட்டவன் கடைசியில் செய்யும் காரியம் என்ன? எவர்களை வேண்டாமென்றானோ, எவர்களிடத்து விசுவாசமற்று நின்றானோ, எவர்களிடம் புசிக்கமாட்டேன் என்றானோ, அவர்களையே, நாய் கக்கியதைப் பிறகு நக்குவதுபோல் அண்டிக்கொண்டு நெருங்கிக் குலாவவும், அன்புடையவன்போல் அவர்களிடம் நடிக்கத் தலைப்படவும் தொடங்கிக்கொள்ளுகிறான். இவ்விதம் அவன் செய்யவேண்டியது அவன் சொந்த விஷயத்துக்காக அவசியமாய்ப் போய்விடுகிறது. அதனால் முன்புதான் தன் பந்துஜன சுற்றம் என்று எண்ணாமல் விசுவாசம் கெட்டு நடந்துகொண்ட இடத்திலேயே மறுபடியும் போய் அவர்களுடைய உதவிக்குக் கெஞ்சவேண்டியவனாய் விடுகிறான். அப்படிக் கெஞ்சும்படித் தலைவிதி அவனை ஆக்கிப்போடுகிறது. ஆகவே, இது நாய் வேண்டாமென்று ஒன்றை வெளியில் கக்கிவிட்டுப் பிறகு அதையே வேண்டுமென்று நக்கித் தின்பதுபோலாய் விடுகிறது. இதையே 'நாய் கக்கி நக்கித் தின்கிறதற் கொக்கும்' என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறதென்றும் அறிந்துகொள்ளக் கடவோம்.

(தொடர்ந்து வரும்.)

---

## சிறு மணித் திரள்

(18-ம் பக்கத் தொடர்ச்சி.)

31. கேலிக்காக ஒரு இஷ்டனை இழப்பது மூடத்தனம். அதுபோலவே இருகட்சியிலும் சேராத அன்னியனொருவனை அனாவசியமாகப் பகைவனாக்கிக்கொள்வது இன்னும் பெரிய மூடத்தனம்.

32. நம்மை நாமே நிந்தித்துத் தாழ்மையோடும் சென்றால் பிறர் நம்மை நிந்திக்கக் காரணம் ஏற்படமாட்டாது.

33. சில சமயங்களில் நிந்தனையை எதிர்பார்க்க வேண்டியிருந்தாலும், நமது அபிப்பிராயங்களில் நாம் எப்போதும் தைரியமாயும், ஒரே உறுதியுடனும் இருக்கவேண்டும்.

34. ஒருவனை மூடன் அல்லது மடையனென்று நாம் கொள்ளும் எண்ணத்தை, அவன் நமது வார்த்தைக்குள் அடங்கித் திருந்தக்கூடியவனாக இருந்தாலன்றி, எக்காலத்திலும் நாம் கொண்ட எண்ணத்தை அவனுக்கு வெளியிடக்கூடாது.

35. திருந்தக்கூடாத ஒருவனுக்கு நாம் புத்தி சொல்லப் போனால், அவன் நம்மைக் கடுகடுத்து நம்மீது குற்றம் சொல்லத் தொடங்குவான்.

36. ஒரு தேசத்தாரையோ, ஒரு ஜன ஸமூகத்தாரையோ, அல்லது தொழிலாளரையோ ஒரேவிதமாக நினைத்துப் பழிக்கக்கூடாது.

37. எவனையும் கோபமூட்டுவதினாலும், பரிகாசம் செய்வதினாலும் நம்முடைய காரியம் பலித்துவிடாது.

38. மனிதர்கள் தனித்தனி ஒருவன் செய்த அவமானத்தையாவது மறப்பார்கள். ஆனால், நாலுபேர் மத்தியில் நம்மைக் கழுதைபோல் விழிக்கச்செய்தானே என்பதிலும் மனம் கொதிக்கிற விஷயம் வேறு எதுவுமில்லை.

39. எந்த வேலையிலாவது, தான் உத்தேசித்து முடிக்க விருக்கும் தொழிலிலாவது பொறுமை அவசியம். ஆரம்பத்தில் வரும் நஷ்டத்தை சகிப்பது அதைவிட இன்னும் அவசியம்.

40. குளிர்ந்த வார்த்தை கோபத்தை ஓட்டும். சூடான வார்த்தை கோபத்தை மூட்டும்.

41. நம் விரும்பாத இடத்தில் நாம் போய்த் தலை நீட்டக்கூடாது. நம்மை வலிய அழைக்காத இடத்தில்—வீட்டில்—நாம் வார்த்தை வைத்துக் கொள்ளக்கூடாது.

42. சிலர் தவறு பேசுவதிலும், நொந்த புண்ணில் கோல் எடுத்து இடிப்பதிலும், கலகமுண்டுபண்ணுவதிலும் இயற்கையிலேயே சாமர்த்தியவான்களா யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட புருஷர்களும் பெண்களும் விவாகம் செய்துகொள்ளாமலிருப்பது உத்தமம். அப்போது தான் தாங்கள் புருஷன் மனைவிகளாகிக் கலகம் விளைவித்துக்கொள்ளாமல் இருக்க முடியும்.

43. நாம் ஒருவனைச் சந்தேகித்தால் அந்த சந்தேகத்தை அவன் தெரிந்துக்கொள்ளும்படி விடக்கூடாது. மேலும் சந்தேகப்பட்டவனைக் கொண்டு ஒரு வேலையைச் செய்யும்படி ஏவக்கூடாது. அப்படி வேலையிட்ட பிறகு சந்தேகிக்கவும் கூடாது.

44. கண்களும் காதுகளும் எல்லோருக்கும் உண்டு; ஆனால் நல்ல புத்தி சிலருக்கு மட்டுமே உண்டு.

45. நம்பிக்கை முழுமையாய் இருக்கவேண்டும். ஆனால், கண்மூடித்தனமாய் இருக்கக்கூடாது. முழுமையும் நம்பவேண்டும், அல்லது முழுமையும் நம்பவேண்டாம்.

46. பேசுவதற்கு விஷயமில்லாத காலத்திலும், ஏதாவது பேச விரும்புகிற ஆசையின் காரணமாக வீண் வம்பளப்பு அளக்கிறார்கள். பேசுவதில் நாவின் வேலையைப் பார்க்கிலும் மூளையின் வேலை அதிகமாக இருக்கவேண்டும்.

47. அநேகர் பேச்சின் வெறியாலும், அதில் கொள்ளும் மூடத்தனமான உற்சாகத்தினாலும், பல விஷயங்களில் வார்த்தைகளைத் தொட்டுக் கொண்டு, முதலில் தாங்கள் பேச உத்தேசித்தவற்றிற்கு முற்றும் வேறானதாகவாவது, பின்பு என் சொன்னோம் என்று விசனப்படத்தக்கதான தவறு விஷயங்களையாவது பேசிவிடுகிறார்கள். பேசியதை மறுபடியும் பொறுக்கிக்கொள்ள முடியாது.

48. ஒரு மூடனால் மௌனம் சாதிக்கமுடியாது. அவன் எதிலும் தன் வாய்த்தைவாயைத் திறந்துவிடுவான். விவேகமும் சகிப்பும் இல்லாதவனுக்கு மௌனமாய் இருக்கும் குணம் ஏற்படாது.

49. அவசரமாய்ப் பேசுகிறவனைப் பார்த்திருக்கிறாயா? அவன் எதைப் பேச நினைத்தானோ அதை அப்பொழுதே மறந்துபோய் வேறொரு

பேச்சைத் தொட்டுக்கொள்வான். அவனைப் பார்க்கிலும் ஒரு மூடனிடத்து அதிக நம்பிக்கை வைக்கலாம்.

50. எதுவும் தானாகவே வலிய வரும் காலத்தில் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு, பிறகு அவர்கள் வேண்டும் காலத்தில் அது கிடைக்காது.

51. மனிதருடைய காலங்களில் எப்போதோ ஓர் அலை வீசுகிறது. அந்த அலையின் பெருக்கிலே அதனோடு கிளம்புகிறவர்கள் அதிர்ஷ்டமென்னும் கரை சேருகிறார்கள். அப்படி செய்யத் தவறுகிறவர்கள் தரித்திரமான மணல் மேட்டிலும், திண்டாட்டமான மனவருத்தத்திலும் தங்கள் பிரயாணத்தை முடிக்கும்படியாக இருக்கும்.

52. காலாநுசாரம் என்னும் நீரோட்டத்தின் வழியே நாம் சலியாமல் சென்று உழைக்கக் கடவோம். எப்பொழுதாவது அந்த நீரோட்டம் அதிர்ஷ்டமாகிய ஸமுத்திர தரிசனத்தை நமக்குக் கொண்டுவந்து காட்டும். இதில் நாம் பின்னடைந்தோமானால் நம்முடைய முயற்சிகளை யெல்லாம் இழந்து இரண்டும் கெட்டவர்களாய்விடுவோம்.

53. மிதமிஞ்சிய எச்சரிக்கையுடன் எந்தத் தொழில் செய்யவும் பயந்துகொண்டிருப்பது உதவாது. தவறு செய்துவிடுவோமே, ஒருக்கால் நஷ்டம் வந்துவிடுமே என்று மிகவும் அதிகமாய்ப் பயப்படக்கூடாது. ஒரு காலத்திலுமே தவறு செய்யாதவன் எந்த நாளிலும் ஒரு காரியமோ தொழிலோ செய்திருக்கமாட்டான்.

54. ஆடையினால் ஜனங்கள் ஒருவரையொருவர் எவ்வளவு மதிக்கிறார்கள் என்பதைக் கவனி. அநேகரை நாம் முக்கியமாய் வெளித் தோற்றத்தினாலேயே மதிக்கிறோம். அப்படியே அநேகர் முன் தோற்றத்தைக்கொண்டே நம்மை மதிக்கிறார்கள்.

55. நாம் நம்முடைய உடைகளில் அஜாக்கிரதைமேலிட்டு ஒழுங்கற்று இருந்தால், மற்ற விஷயங்களில் கூட அப்படித்தான் இருப்போம்.

56. முகபாவனையே மனிதனில் விசேஷித்த பாகம். அழகிய வடிவமே அழியாத சிபாரிசுக் கடிதம். (இன்னும் வரும்.)

---

கோபத்தின் போக்கு :—

ஸந்தோஷ மென்பது சாந்தமா யிருக்கும்போது அனுபவிக்கும் உணர்ச்சி. கோப காலத்தில் யாரேனும் ஸந்தோஷ மடைந்ததுண்டா? இல்லை. முன் மகா விஷ்ணு நரஸிம்ஹாவதாரம் எடுத்தபோது அவருடைய கோபத்தைத் தணிப்பதற்காக லக்ஷ்மிகூட ஸமீபமாகச் செல்ல அஞ்சியதாகச் சொல்வர். மாலின் திருமார்பில் விளையாடும் மகா லக்ஷ்மிகூட கோப வேளையில் தன் நாயகனைவிட்டுப் பிரிந்துபோனாளெனில், ஸாமான்ய மனிதர்கள் கோபம் என்னும் துர்க்குணத்தைக் கொண்டால் அவர்களிடம் லக்ஷ்மீ தன் கடாக்ஷத்தை வீசுவளோ? சீ! சீ! என்று அப்பால் விலகிச் செல்வள், எனவே கோபமென்பது எவ்வளவு அருவருக்கத்தக்க குணம் என்று தெளிவாகும். அநேகர் தம் கோபத்தைச் சிலாகிப்பதுண்டு. தங்களுக்குக் கோபம் இருக்கிறதாலேதான் எல்லோரும் பயப்படுகிறார்களென்று கூறுவர். அவ்வாறாயின் வேட்டை நாயைக் கண்டால் பயம், தேளைக் கண்டால் பயம், பாம்பைக் கண்டால் பயம் புலியைக் கண்டால் பயம், இத்தகைய பயங்களுக்குள்ள பெருமையே கோபிகளான மனிதர்களுக்கு மிருக்கும்.

# பிரபஞ்ச தரிசனம்

இந்தியாவுக்கு எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் ஸம்பவித்திருக்கின்றன. அதன் செல்வத்தைக் கவர எண்ணி எத்தனையோ பிறநாட்டார் அப்போதைக்கப்போது ஜயித்து ஆள்வாராயினர். இந்த மாறுதல்களால் ஹிந்து ஜாதீயத் தன்மைக்கு எவ்வடவோ தீங்குகள் விளைந்தன. ஆயினும், ஹிந்து ஸநாதன தர்மத்தை நசுக்கிவிடுவதற்குப் பிறநாட்டார் எவ்வளவு பிரயத்தனப்பட்டபோதிலும், புராதன பாரத வருஷத்து ரிஷிகள் காட்டிய மதாசார மென்னும் பிராணன் இன்னும் இக்காலத்து ஹிந்துக்களுக்குள் துடித்துக்கொண்டே யிருக்கிறது.

***

உலகத்திலுள்ள பற்பல ஜாதியார்களின் சரித்திரத்தை ஆராயுங்கால் திண்ணமாய்த் தெளியப்படும் விஷயம் என்னவெனில், புராதன கிரேக்க ஜாதியார் எவ்வளவு மகத்துவம் பொருந்தியவர்களா யிருந்தபோதிலும், முன்னிருந்த சிறப்பை இப்பொழுது இழந்துபோயினர்; அவ்வாறே மானிட வர்க்கத்தின் சரித்திரத்திலே வெகு காலம் பிரதான்யம்பெற்று விளங்கிய பண்டைய ரோமியர்களும், எகிப்தியர்களும் இப்போது அந்தகாரத்தின் கர்ப்பத்தில் அமர்ந்துபோயினர்; ஆனல் சரித்திரம் ஏற்படுவதற்கு முன்பு தொன்றுதொட்டுத் தோன்றியிருக்கும் ஜாதியாராகிய ஹிந்துக்களோ தங்கள் சுயலக்ஷணம் கெடாமல் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஸநாதன தர்மத்தின் மகத்துவமேயன்றி வேறில்லை. பரித்தியாகமானது மிகவும் உயர்வாகிய கொள்கை. ஸநாதன தர்மத்தின் பிரதான லக்ஷணம் அதுவே.

***

பண்டைக்காலத்து ரிஷிகள் தவவொழுக்கமுள்ளவர்களாய் வாழ்ந்து, சமயநெறியையும் ஒழுக்க முறையையும் தம் சிஷ்யர்களுக்குப் போதித்து, நல்ல சீலமுள்ள ஸம்பிரதாயத்தை ஏற்படுத்தினர். அந்த ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் தம்முடைய சாஸ்திர ஞானத்தாலும், ஸ்வதர்மாநுஷ்டானத்தாலும், பகவத் பக்தியாலும் மானிட வம்சத்துக்கோர் மகா பிரகாஸமளித்து விளங்கினர். அம்மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆலயங்கள் எண்ணிறந்தனவாய் இந்தியாவெங்கும் நிறைந்துள்ளன. அவ்வாலயங்களிலே ஸர்வ வியாபகமும் ஸர்வ சக்தியுமுள்ள பரப்பிரம ஸ்வரூபத்தையே வெவ்வேறு மூர்த்தங்களாக ஜனங்கள் வழிபட்டு வருகின்றனர். கூட்டங்கூட்டமாக ஹிந்துக்கள் இவ்வாலயங்களுக்குத் திரண்டு சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை உள்ள முருக்கும் பக்திரஸம் நிறைந்த பாசுரங்களால் பாடிப் போற்றுவதை இன்றைக்கும் காணலாம். இந்தியா முழுவதிலுமுள்ள யாத்திரை ஸ்தலங்களாகிய தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும் வருஷந்தோறும் நடந்தேறும் திருவிழாக்களிலும் காணலுறும் காட்சி கண்கொள்ளாக் கம்பீரமான காட்சியன்றோ! ஹிந்து மதத்தின் பண்டையாதிபத்யம் போய்விட்டபோதிலும், அதன் புராதனப் பெருமையும் அத

னுடன் போய்விடவில்லை யென்பது உற்று நோக்குவோருக்கு நன்கு விளங்கும்.

***

"சுவேச்சாபத்தியம்" என்பது யாது? ஒரு அரசனோ அல்லது ஒரு சிறு கூட்டத்தாரோ இஷ்டப்படி சட்டங்கள்செய்தும், இஷ்டப்படி அவைகளைச் செலுத்தியும், ஜனங்களுடைய விருப்பு வெறுப்புகளையாவது அபிப்பிராயங்களையாவது லட்சியம் செய்யாமல் அதிகாரம் நடத்துவதாகும். "ஜனநாயகம்" என்பதோ, ராஜாங்கத்துக்கு வரிகொடுக்கும் ஜன ஸமூகத்தின் பெரும்பாகத்தினர் தங்கள் பிரதிநிதிகள் மூலமாகத் தங்கள் இஷ்டப்படி சட்டங்கள் செய்துகொண்டு, தங்கள் இஷ்டப்படி அவைகளைச் செலுத்தும் உத்தியோகஸ்தர்களை நியமித்துக்கொண்டு அதிகாரம் செலுத்துவதாகும். நமது தேசமாகிய இந்தியாவில் அரசர் ஒருவர் இருந்து சுவேச்சாபத்தியம் செலுத்தாவிட்டாலும், அவ்வரசரின் பிரதிநிதிகளாகிய கூட்டத்தார் இருந்து தங்கள் பிரியப்படி சட்டங்கள்செய்து அதிகாரம் நடத்துவதால், இந்தியாவிலும் சுவேச்சாபத்தியமே நடப்பதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இங்கிலாந்திலே ஜனஸமூகத்தின் உச்சி ஸ்தானத்தில் மகாராஜா ஒருவர் வீற்றிருந்து, அவரை ஜனங்கள் பூஜித்துவந்தாலும், ராஜாங்க அதிகாரமெல்லாம் ஜனப்பிரதிநிதிக ளடங்கிய பார்லிமெண்டால் நடத்தப்படுவதால், அங்கே சுவேச்சாபத்தியமில்லாமல் ஜனநாயகமே நடப்பதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. பிரான்சு, அமெரிக்கா இத்தேசங்களில் அரசன் என்பவரே யில்லாமல், ஜனங்களால் நியமிக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளே ஆட்சி நடத்துவதால், அங்கே சுத்த ஜனநாயகம் ஸ்தாபிதமா யிருக்கிறதெனலாம். உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் ஆதியில் சுவேச்சாபத்தியமே செலுத்தப்பட்டு, பிறகு ஜனங்களுடைய ஓயாத கிளர்ச்சியால் ஜனநாயகம் தோன்றலாயிற்று.

***

நமது தேசமும், நமது ஸமூக அமைப்பும், குடும்ப சௌகரியங்களும், பந்து மித்திராதிகளின் சம்பந்தங்களும் முன்போல் இராமல் மாறி விகற்பப்பட்டு வருகின்றன. அநாதைகளான குழந்தைகளையோ, ஸ்திரீகளையோ, விருத்தாப்பியர்களையோ ரக்ஷித்தல் முற்காலத்தில் குடும்பத்தலைவர்களது கடமையாகக்கொள்ளப்பட் டிருந்தபடி இப்போது கொள்ளப்படுவதில்லை. பழய கட்டுப்பாடுகள் இப்போது பல காரணங்களால் கலைந்துபோயிருக்கின்றன. அதற்கேற்றபடி முந்திய செழிப்பு இன்றி வறுமையும் தகாத செலவுகளும் மிகுதிப்பட்டுப் போய், பெரிய குடும்பங்கள் முதலாகக் கடனில் மூழ்கித் தவிக்கின்றன. இன்று பெரிய குடும்பமாக இருப்பது அடுத்த தலைமுறையில் பரம ஏழைக் குடும்பமாய்விடுகின்றது. இது தற்கால நாகரீகக் கேடுகளில் ஒன்று. நாகரீகக் கல்வியின் தீமைகளில் ஒன்றாகவும் சேர்த்துச் சொல்லலாம்.

***

ஜப்பான் தேசத்தார் வெகு துரிதத்தில் உயர்நிலை யடைந்து, சில முக்கியமான ராஜாங்க முறைகளிலும், ஆசாரங்களிலும் ஐரோப்பியரைப் பார்த்து மாறுதல்கள் செய்து கொண்டாலும், தங்கள் ஸமூக அமைப்பின் அஸ்திவாரங்களை மாற்றாமல், எப்படி ஒரு விருக்ஷமானது கால அளவில்

அதன் அளவு, தோற்றம் முதலியவைகளில் மாறினாலும், அதன் இனத்துக் குரிய இயற்கையான உருவம் மாறாமல் இருக்கிறதோ, அப்படியே தங்கள் ஜாதிக்குரிய தன்மையை—லக்ஷணத்தை—மாற்றாமல் ஜப்பானியர்களாகவே இருந்து வருகிறார்கள். ஹிந்துக்களும் ஐரோப்பியரது ராஜாங்க முறை ஸ்தாபனங்களையும், சில ஆசாரங்களையும் ஏற்பது அவசியமாகி, அப்படியே ஏற்றாலும், அவர்களுடைய புராதன ஜாதித் தன்மையை—லக்ஷணத்தை—மாற்றாமல் ஹிந்துக்களாகவே, இந்தியர்களாகவே இருக்கப் பார்த்து ஜென்ம தேசத்தின் பூர்வ கௌரவத்தை என்றைக்கும் காப்பாற்ற வேண்டும்.

***

தற்காலம் நம்மவருக்குள் கையினால் ஜீவிப்பது இளப்பமென்கிற எண்ணம் சாமான்யமாயிருக்க, சற்று கௌரவமான நிலைமையிலிருக்கும் ஸ்திரீகளுக்குள் இந்த எண்ணம் இன்னும் அதிகமாகவே இருக்கிறது. இவ்வகையிற் சிலர் சமையற்கூடத்தையே எட்டிப் பாராமல் ஆர்மோனியப் பெட்டியையும் அலங்காரமான பின்னல்களையும் கைக்கொண்டு நிற்கிறார்கள். இதனிலும் கேடுகெட்ட செய்கை வேறில்லை. நமது நாகரீக வாலிபர்களோ ஒரு சாமானை எடுப்பதற்குக்கூட ஒரு கூலிஆளை எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் அதை எடுத்தால் இளப்பம் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. இருந்தாலும் எல்லா வகுப்பாரிலும் எல்லா குடும்பங்களிலும் இந்த எண்ணம் இருப்பதாகச் சொல்ல முடியாது. வேலையென்று எது ஏற்பட்டாலும் ஊக்கத்துடன் செய்யும் தன்மை ஐரோப்பியரிடமிருக்கிறது. நம்மவர்களோ உத்தியோகத்தை மட்டும் கௌரவமாக நினைத்துவிட்டு, கைவேலைகளையும் கைத்தொழில்களையும் தாழ்வாகப் பாவித்து அதிற் பயிற்சியற்றவர்களாகிறார்கள். இனி, இவர்கள் வெகு கஷ்டப்பட்டுக் கற்றுள்ள கல்விக்கோ பேறு உத்தியோகம் அகப்படுவது குதிரைக் கொம்பாயிருக்கிறது. அதற்காக எதிர்பார்த்துக் காலமுற்றும் வீணே கழித்து எதற்கும் உதவாக் கட்டைகளாகிறார்கள். கடன் வாங்கியும், தகாத செய்கை செய்தும் ஜீவிப்பது இளப்பமாகுமேயன்றி, கையினாலும், புத்தியினாலும் தொழில்கள், வியாபாரங்கள், வேலைகள் செய்து, பிறருக்குக் கஷ்டமாவது,—பாரமாவது—இம்சையாவது இல்லாமல் பொருளைக் கொடுத்துப் பொருள் வாங்கி ஜீவிப்பதில் எவ்வித கேவலமும் இல்லை.

***

இந்தியா நாநாவிதமான வகுப்பார் வாஸம் செய்யும் நாடு. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் அபிவிர்த்தி கருதி கல்விமான்களாவார்களாயின், கலாஞானப் பிரபாவத்தால் இறுதியில் ஐக்கிய மெய்துதல் சாத்தியமாகக் கூடும். வித்யா ஞானம் ஒற்றுமையை யுண்டுபண்ணும். தொழில் ஞானம் வறுமையை ஓட்டும்.

***

"கியாதி யடையக் குறுக்கு வழி" என்ற தலைப்பின் கீழ் அமிர்த பஜார் பத்திரிகை எழுதுவதாவது:—"ஒரு சாதாரண மனிதர் ஜனத் தலைவர் ஆகவேண்டுமென்று விரும்பினால், அதற்கு அவர் செய்யவேண்டியதென்ன? தன்னைத் தானே விளம்பரப்படுத்திக் கொள்ளுதலாம். இது தான் ரகசிய சங்கதி. சட்ட சபைக்கு எதற்காகப் போகிறார்கள்? (பெரும்பாலும்) தலைவர்களென்று ஜனங்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று தான். ஆனால்,

சட்டசபைக்குப் போய் உட்கார்ந்துவிட்டதனாலேயே தலைவராகிவிடமாட்டார்கள்''—என்கிறது. சட்டசபை மட்டுமல்ல; இன்னும் பெயர் பிரசித்தமாகிப் பத்திரிகைகளிலும் வரக்கூடிய சங்கதிகளுக்கெல்லாம் கணக்குப் பாராமல் தொகையைப் பரிசாக எண்ணிவிட வேண்டுமாம். ஒரு விஷயத்துக்கு, அல்லது ஒரு ஏழைக்கு உதவவேண்டியிருந்து, அதனால் எவ்விதப் பிரசித்தியும் ஏற்படாதென்று தோன்றினால், கண்டிதமாக அவ்விஷயத்துக்குப் பணம் இல்லையென்று சொல்லிவிட வேண்டுமாம். இத்தகைய சித்தப்போக்குகள் இக்கால நாகரீகத்தின் விளைவுகளாகும்.

***

எல்லா மாணுக்கர்களும் வாலிபர்களல்லர். எல்லா வாலிபர்களும் மாணவர்களல்லர். மாணுக்கர்கள் தேசீய விஷயங்களில் பற்றுதலற்றுத் தங்கள் பாட புஸ்தகங்களையே திருப்பித் திருப்பிப் படித்து மற்ற உலகத்தை மறந்துவிட வேண்டுமென்பது, எதிர்த்துப் பொங்கி வரும் பிரவாகத்தை ஒற்றைக் கையால் தடுக்க முயல்வது போலாம். அவர்களின் பத்திரிகாபிமானமும், தேசீய ஞானமும் அவர்களை வெறுமனே புஸ்தகப் பூச்சிகளாக்காதபடி தடுத்து அறிவில் தேர்ச்சி பெறச் செய்யும் என்பதை யுணரவேண்டும்.

***

கல்வியிலாவது, சாமர்த்தியத்திலாவது, யோக்கியதையிலாவது பொறுப்பேறிய அந்தஸ்து கொடுக்கப்பட்ட இந்தியர்கள் தகுதிக் குறைவாய் இருக்கிறார்களென ஒரு திருஷ்டாந்தம் காட்டுவதுகூட மிகவும் அருமையாயிருக்கும். எந்த முயற்சியானாலும், எந்தத் தொழிலானாலும்—விவேகத்திலும் புத்தி கூர்மையிலும் இந்தியர்கள் தாழ்ந்தவர்களல்ல. இன்னும் சொல்லப்போனால், இந்தியர்களுடைய நாகரீகங்களும் மதானுஷ்டானங்களும் அவர்களிடம் பொறுமையையும் ஸாத்வீக குணத்தையும் அதிகப்படுத்தி, மனோநிலையில் அவர்களை மிகவும் உன்னதப்படுத்துகின்றன. ராஜ விசுவாசம், அடக்கம், நன்றி யறிதல், மூர்க்கமின்மை முதலிய தர்ம குணங்கள் இந்த நாட்டின் இயற்கையாகும். இங்கே அவை வளர்ந்தும் விர்த்தியாகியும் வருகின்றன.

***

தற்கால நாகரீகத்தின் நோக்கமானது ஓயாத பரஸ்பரப் போட்டியால் ஒருவர் பொருளை ஒருவர் அபகரித்து, வியாபாரங்கள் செய்து செல்வத்தைப் பெருக்குவதையே உபாயமாகக் கொண்டுளது. தற்கால நாகரீகத்தின் நன்மைகள் பலத்தவர்களைப் பலப்படுத்துவதாகவும், மெலிந்தவர்களை மெலிவடைவிப்பதாகவும் பிரத்தியக்ஷமாகிறதே யன்றி, பலத்தவர்களையும் மெலிந்தவர்களையும் சமத்துவப்படுத்தி மனித கோடிகள் ஏற்றத் தாழ்வின்றி வாழச் செய்யும் பான்மை கொண்டவைகளல்ல.

***

இந்தியர்கள் விசேஷமாய் மதிக்கும் பரமார்த்தீக ஞானம் தற்காலத்தில் துரைத்தன உதவியை எவ்வகையிலும் பெறாததோடுங்கூட, பூர்வம் அது காட்டிய மகோன்னத ஸ்திதியினின்றும் தாழ்ந்துகொண்டு வருகிறது.

***

1. பாங்கியில் பணம் போட்டுக் குவிப்பவர்கள் பெரும்பான்மையும் விவசாயத்தையே ஜீவனமாகக் கொண்ட கிராமவாசிகளல்ல. முக்கியமாய் உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், வக்கீல்களும், தர்ம ஸ்தாபன பரிபாலகர்களும், பென்ஷன்தாரர்களும் சுகவாசிகளுமே அப்படிச் செய்கிறார்கள்.

2. கிராமத்திலேயே வசித்து விவசாயமே தொழிலாகக் கொண்டு அதில் உழைப்பவர்களுக்குப் பூமி பலனைத் தருமேயன்றி, பட்டண வாசங்களில் இருந்துகொண்டு பெருமைக்கு நிலங்களை வாங்கிக் குத்தகைக்கு விட்டு சுகஜீவனம் செய்பவர்களுக்கு அத்தனை நன்மையைச் செய்யாது.

3. விவசாயத்தினாலேயே செல்வம் பெற்று வாழும் ஜனங்கள் உலகத்தில் இல்லை. விவசாயத்தை மட்டுமே நம்பி யிருக்கிற ஜனங்களிற் பலலோர் வறுமையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். கைத்தொழில்களால் தான் செல்வம் பெருகும்.

4. ஒரு தேசத்தையோ ஒரு குடும்பத்தையோ பயத்தால் ஆளுவது எளிது. ஆனால் நயத்தால் ஆளுவதே பெரிய ராஜ தந்திரமும் லௌகீக சாமர்த்தியமுமாம்.

5. ஒரு குடும்பத்தினுடைய—ஒரு தேசத்தினுடைய அமைதி யின்மையைச் சிறிது கஷ்டத்துடனும் அடக்கிவிடலாம். ஆனால் அதிருப்தியை எந்த நாளும் அடக்கமுடியாது.

---

## கவிதா விலாஸம்

ஒரு காலத்தில் குலோத்துங்க சோழன் மந்திரி, பிரதானி, கம்பர் முதலிய பிரமுகர்கள் புடைசூழ யானையின் மீது முத்துக்குடை பிடித்துக் கொண்டு இரவில் பவனி வருங்கால், குலோத்துங்கன் கம்பரை நோக்கி, இரவில் குடை பிடித்துக்கொள்ளும் வழக்கம் குற்றமென்றும், "அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்" என்றும் உலகில் குறை கூறுகிறார்களே; நான் இவ்விதம் குடை பிடித்துக்கொண்டு வருவது குற்றமா அல்லவா என்று கேட்க, கவிஞர் பெருமானாகிய கம்பர் சொல்லிய கவி :—

"அண்டமீ துலவி வாழு மருந்ததி
நினது காந்தி,
கண்டபோ தாசை யாகிக் கற்புஅவ
ளழிவா ளென்றே,
யெண்டிசை புரக்கும் வேந்தே, யிரவினிற்
கவிகை நீதான்
கொண்டது தகுதி, யெங்கள் குலோத்துங்க
சோழ ரேறே."

என்றார்.

## II

திருமலைநாய்க்கர் மதுரையில் அரசாண்ட காலத்தில் கன்னிவாடியில் மலையாண்டியப்பய நாயக்கர் என்பவர் ஜமீன்தாராய் விளங்கிப் பரிபாலனம் செய்து வந்தார். இவர் கல்வியிலும் செல்வத்திலும் மிக்க மேன்மைப் பட்டவர். செய்யுட்கள் சொல்வதில் அதிக வன்மை கொண்டவர். இவரைப் போன்றே இவர் பட்ட மஹிஷியும் கவித்துவ சக்தியில் மிகச் சமர்த்தர். நாயக நாயகிகளாகிய இவர்களிருவர்களும் சாதாரணச் சம்பாஷணைகளிலும் கவியாகவே பேசிக்கொள்வது இவர்களுக்குள் இயற்கையா யிருந்தது. இப்படி யிருக்கையில் ஒரு நாள் தமது மனைவி மாதவிலக்காய் இருந்த காலையில் தாம் நான்கு தினமாகப் பாராத காரணத்தால் மனமுருகி அவருக்கு எழுதிய கவி :—

கட்டளைக் கலித்துறை.

நாணல் வளைத்துச் சிலைகைக்
கொடுமத னப்பயருன்
றோணு வுருவம் எதிர்தோற்றி
வாளி தொடுத்தனனால்
சேணார்ந்த மைக்குழற் பெண்ணே
யுனையோர் தினமெனினுங்
காணாத நாளல்ல வேவெகு
நாளெனக் காண்கின்றதே.

என்று இந்தக் கவியை யெழுதி, அவர் பாங்கி யிடத்தில் கொடுத்தனுப்ப, அவள் அதை வாங்கிக் கொண்டுபோய் பட்டமஹிஷியிடம் வாசித்துக் காண்பிக்க, அதற்கு அவர் சந்தோஷித்து, அப்படியா, நல்லது இதோ மங்கள ஸ்நானம் செய்து வந்துவிட்டேன்; அதற்குள் இந்தக் கவியைக் கொண்டு போய் என் பிராண நாயகரிடத்தில் சேர்ப்பி யென்று சொல்லி நாயகியார் கூறிய கவி :—

முத்தமிழ் வாணர் தமக்குப்பொன்
வாரி முகிலெனவே
நித்தம் கொடுக்கும் துரைசிங்க
மே,மத-னோர்ந் தனனு
இத்தரு ணத்தி லவனுக்கு,
நான்வந் திருந்துகொண்டு
புத்திகள் சொல்லு கிறேன்சற்று
நேரம் பொறுத்திடுமே.

என்று இக்கவியைத் தமது மணாளரிடத்திற் கொண்டுபோய்த் தரும்படி யனுப்ப, அந்தப் பாங்கி அவ்விதமே தலைவரிடத்திற் கொண்டுபோய் வாசிக்க, அவர் இக்கவியைக் கேட்டு ஆநந்தித்துப் பாங்கிக்கு ஒரு முத்து மாலையைச் சன்மானமாகக் கொடுத்தாராம்.

☞ "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பது ஆன்றோர் வாசகம். நன்கு கற்ற இருவர் ஒன்றுகூடினால் அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷணைகளும், ஒற்றுமைப் பெருக்கும் காணக்காண இன்பஸாகரமாயிருக்கும். பரஸ்பரம் எவ்வித பந்தத்துவமுமின்றி தூரத்தூர அன்னியர்களாயுள்ள கல்விமான்கள் இருவர் ஒன்று சேர்வதிலேயே இத்துணைப் பூரிப்பும் உல்லாஸமுமானால், இனி, காலமுழுவதும், வாணாள் வரையிலும் பிரியாமல் ஒருமித்து இருக்கக்கூடிய ஸதிபதிகள் இருவரும் வித்யாவந்தர்களாய் சோபிப்பார்களாயின் அவர்கள் அடையும் இறும்பூதுக்கும், வாழ்க்கையின் மகிழ்வுக்கும் கலா விநோதங்கட்கும் அளவிட வொண்ணுமோ? அன்னோரின் தாம்பத்திய அன்னியோன்னியப் பெருக்கை என்னென்றுதான் போற்றுவதோ? இத்துணை மனோரம்மியம் இதிலிருக்கும்போது பின் ஏன் கற்றவனுக்குக் கல்லாத மூடச்சியையும், நன்கு படித்த வித்யாவதிக்குக் கல்வியின் இன்பமே நுகரமுடியாத மூடனையும் மணம்புரிவிக்கின்றார்களோ? இச்செய்கை உலகத்துள் உள்ள கொடுமைகளுள் எல்லாவற்றிலும் பெருங் கொடுமையும் அநீதமும் பரம சண்டாளத்தனமு மாகும். இவர்களுடைய வாணாளையும் குடித்தனத்தையும் பாழ்படுத்தியதாகவு மாகும். இதை நம்மவர்கள் இனியேனும் சிந்தித்துப் பார்ப்பார்களா?

---

## III

## பழனிமலையாண்டவர் பதிகம்.

உன்பிள்ளை செய்தபிழை யுனையன்றிப் பொறுப்பா
　　ருலகினிலு முண்டோ,
கன்மனது கொள்ளாமற் கருணைநீ காட்டிவரக்
　　கடையேனு முய்வேன்,
கல்லாத வெளியோரைக் கையாள லரிதான
　　வறமாகு மூரவோனே,
நன்மனது கொண்டோடி நாயேனை யித்தருணந்
　　தப்பாம லாள்வாய்,
பழமோடு பாலேந்தி மறைவீசி வருகின்ற
　　பழனிமலை யாண்டவனே.

* * *

பணம் வேண்டும், பக்கத்திருந் தேவல்செயப்
　　பணியாளர் வேண்டும்,
பாங்கான சரசங்கள் செய்தின்பந் தந்திடப்
　　பெண்டுமே வேண்டும்,
மணம் வேண்டும், மாடமாளிகை கூடகோபுர
　　மனையும் வேண்டும்,
மனமொத்த நண்பரு மினமொத் துவகை
　　மொழிபேசு மன்புவேண்டும்,

குணம் வேண்டும், நல்லகுலம் வேண்டும்,
குவலயமும் வேண்டுமுக்
கோடிமுப்பான் தேவரும் வரல்வேண்டும்,
கொடிகட்ட வேண்டுமென்
பதம் நண்ணி மயங்கு மென் மனமலரை
யுந்தனிடந் தந்தேன்
பழமோடு பாலேந்தி மறைவீசி வருகின்ற
பழனிமலை யாண்டவனே.

---

# சென்று போன நாட்கள்

## 1. ஸ்ரீமான் வி. நடராஜ ஐயர்

சென்றனவும், இனித் திரும்பாதனவுமான தினங்களைக் குறித்து நாம் வாயூறுவதனால், ஆம் பயன் என்ன? எவ்வளவோ ஸந்தோஷத்துடனும் போக்கிய நாட்கள், புளகித மனத்தினராய் நேச மாணிக்கங்களுடன் அன்பு குலாவிய நேரங்கள், உடன் பிறப்புடன் உளமகிழ்ந்து நின்ற காலங்கள், எத்துணையோ ஆவலுடனும் நாம் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்ட மதுர மான சந்தர்ப்பங்கள், நோன்பு-பண்டிகை-விரதாதிகளை நமக்குப் பிரியமான வர்களோடும் கூடியிருந்து வெகு உத்ஸாகமாகக் கொண்டாடிய அந்த ஆநந்த பரவஸம், அவ்வினிய ஸல்லாபம், குதூகலம்—என்னவோ அதுவும் ஒரு காலம்!

சென்றன செல்க; வீணே அதனை நினைந்து நினைந்து என் சிந்தை நோக? கடவுள் காட்டிய வழியில், விதிப்பயன் போன பாதையில் நம் வாழ்நாள் சென்று கொண்டிருக்கின்றது. அனைத்தும் அவன் இன்னருள் போலாகுக. சென்றதை எண்ணி எண்ணிப் பார்ப்போமாயின், அதிலிருந் தும் நாம் எத்தனையோ அநுபவ ஞானங்களைக் கிரகிக்கலாம். அநுபவம் என்பது ஒரு காரியம் நடந்து விட்டதிலிருந்தும் உண்டாவதுதான். அவ்வித அநுபவம் இனி தொடங்கும் நம் வாழ்நாட்களுக்கு ஓர் வழித்துணை விளக்கு போன்று முன்னின்றும் உதவி நம்மை விழிப்புடன் எதையும் கவனித்து நடத்தும்படி செய்விக்கும்.

தமிழ்மொழி வழங்கும் நமது சிந்தைக்கினிய செவிக்கினிய தென்னாட் டில் பல பெரியோர்கள் பத்திராசிரியர்களாகவும், நூல் வல்லோராகவும் தோன்றி, நம்மவர்க்கு அறிவுச்சுடர் கொளுத்தித் தங்களாலான நன்மை யைச் செய்து சென்றுள்ளார். அவர்களின் ஜீவிய சரித்திரத்தைச் சார சங்கிரகமாகச் சுருக்கிப் பிரதி மாதமும் எழுதிவர உத்தேசித்திருக்கிறோம்.

அவற்றில் முதலாவதாக ஸ்ரீமான் வி. நடராஜ ஐயரின் சரித்திராமிர்தத்தை இங்கு குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீமான் வி. நடராஜ ஐயர் திரிச்சிராப்பள்ளியைச் சேர்ந்த குளித்தலைக்கு அருகிலிருக்கும் மருதூரில் ஸ்ரீமான் வெங்கிடராம ஐயருக்கு இரண்டாவது குமாரராகப் பிறந்தார். திருச்சியில் எஸ். பீ, ஜி. கலாசாலையில் கல்வி பயின்றார். பி. ஏ. பரிக்ஷையில் தமிழ் வகுப்பில் உயர்தரமாய்த் தேறினார். அக்காலத்தில் துரைத்தன உத்தியோகங்கள் வெகு சுலபமாகக் கிடைக்கக்கூடியவை. இந்நாள்போல் ஒரு வேலைக்கு ஒன்பது நூறு மனுக்கள் வந்து குவியுங்காலமன்று. ஆயினும் நடராஜ ஐயர் சேவகா விருத்தியை நாடாமல் ஸ்வதந்திரத்தையும் ஸ்வயேச்சையையும் விரும்பி நின்றார். அக்காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் மிக்க அபூர்வமாய் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விளங்கின. பெரும்பாலும் சிறிய உருக்கொண்டு அப்பத்திரிகைகள் வெளியாகி வந்தன. நடராஜ ஐயர் தாம் ஒரு பத்திரிகையை நடத்த விரும்பி சென்னைக்குச் சென்று "லோகோபகாரி" என்ற பெயருடன் 1895-ம் வருஷத்தில் ஒரு சிறந்த பத்திரிகையை வெளியிட்டார். இது மிக்க அபூர்வமும் சிறப்புமாய், அதற்கு முன்பு அவ்விதமான பத்திரிகையொன்றும் கிடையாதென்று சொல்லக்கூடியதாய் வெகு சிரேஷ்டமாகயிருந்தது. நடராஜ ஐயருக்கென்றே இனிய செந்தமிழ் நடையொன்று அமைந்திருந்தது. அந்த நடையின் மாதுரியத்தை வேறு எவராலும் கைப்பற்றிக்கொள்ள முடியாததாயும், அவருக்கென்றே அந்த நடை தோன்றி அவருடனேயே அது முடியக்கூடியதாயும் அத்துணைச் சிறந்ததாய்ப் பரிமளித்தது. இப்போது அவரது நடை தமிழ் நாட்டில் இல்லையென்றும் சொல்லிவிடலாம். அவருடைய ஒவ்வொரு வாக்கியமும் அர்த்த புஷ்டியுடன் கூடியதாய் மகா கம்பீரமாய் ஜ்வலிக்கும். அதன் சுவையை ருசித்துப் பார்த்தவர்களுக்கு தான் அது தெரியும்.

1895-ம் ஸ்ரீ டிசம்பர்மாதத்தில் மாதம் மூன்று முறையாக "லோகோபகாரி"ப் பத்திரிகையை வெளியிட்டார். அதனை எல்லோரும் விரும்பிப் படித்து, ஏராளமான சந்தாதார்கள் அப்பத்திரிகையை ஆதரிக்க முன் வந்தனர். அவர்களின் சிந்தை களிக்குமாறு 1897-ம் ஸ்ரீ "லோகோபகாரி"யை மாதம் நான்கு முறை அதாவது வாரம் ஒரு முறையாக வெளியிடத் தொடங்கினர். அப்போது 2500 பேர்களுக்கு மேல் சந்தாதார்கள் இருந்து வந்தனர். ஒவ்வொரு பத்திரிகையிலும் ஸ்திரீ வித்யாப்யாஸத்தைக் குறித்துத் தடவைதோறும் எழுதிவருவார். வேதாந்த விஷயங்களும் பக்தி ஞான விஷயங்களும் பத்திரிகையின் முதல் பக்கத்தை அலங்கரித்துக் கொண்டு நிற்கும். பத்திரிகைமுற்றிலும் ஸத் போதனைகள் நிறைந்து அவற்றினூடே வர்த்தமானங்களும் கலந்து விளங்கும். ஒரு லோகோபகாரிப்பத்திரிகையைப் பெற்றுக்கொண்டால் உலக விசேஷங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ளக்கூடியதாய் அத்துணை உயர்வில் விளங்கிற்று. வாசக நடையோ அதி தெளிவு, மிகு சுலபம், வெகு இனிமை. 1899-ம் ஸ்ரீத்தில் லோகோபகாரியின் வருஷ சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கு 'ஞான தரிசனி' என்ற உத்தமமான நூலை இனாமாகக் கொடுக்கத் தொடங்கினர். அதற்கு அடுத்த ஸ்ரீ 'தத்துவ தரிசனி' என்ற புஸ்தகத்தை வெகுமதியாகச் சந்தாதார்களுக்கு அனுப்பினர். பத்திரிகா நேயர்களுக்கு இனாம் புஸ்தகம்

ஒன்றும் கிடைக்கும்படியான ஏற்பாட்டை முதன்முதலில் உண்டாக்கியவர் நடராஜ ஐயர்தான். விவேகானந்தஸ்வாமிகளின் உபன்யாஸங்களைத் தமிழில் மொழி பெயர்த்து ஞானத்திரட்டு முதற்பாகம், இரண்டாம்பாகம் என்று வெளியிட்டார். அத்தகைய தெளிவான தமிழ்மொழி பெயர்ப்பைப்போல் இதுவரையில் எவரும் வெளியிடவில்லை. விவேகானந்தஸ்வாமிகளின் உபன்யாஸங்களை எவ்வளவோ பேர் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றனர். ஆனால் நடராஜ ஐயரின் மொழிபெயர்ப்புக்குள்ள தெளிவும் பாஷாஞானத்தின் இனிமையும் சுலபமும் அதனிற் காணமுடியாது.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

---

# தர்க்க விளக்கம்

## இராம–சீதா அன்னியோன்னியம்

அநேக வருஷங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகா ஸபையின் கடைசி தினத்தன்று ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜியும், பண்டித மதன்மோகன மாளவியாவும்–"மாணக்கர்கள் காங்கிரஸின் அங்கத்தினர்களாயிருக்கலாமா?" என்னும் விஷயத்தைப் பற்றி வாதித்தனர். இருவரும் மகா விவேகிகள். இருவரும் பிரியாத நேசர்கள். இருவருக்கும் அந்தரங்கத்தில் மாணக்கர்கள் காங்கிரஸில் சேரவேண்டுமென்ற கருத்து உண்டு. ஆயினும் வேடிக்கைக்காக இரண்டு கக்ஷிகளாகப் பிரித்து மேற்கூறிய விஷயத்தை வாதித்தனர். கனம் சுரேந்திரநாதர் மாணக்கர்கள் காங்கிரஸில் சேரவேண்டியது அவஸியம்தான் என்று கூறி, அதற்கு வேண்டிய நியாயங்களை யெல்லாம் எடுத்துரைத்தார். அவர் பேசி உட்கார்ந்த தக்ஷணம் பண்டித மதன் மோஹன மாளவியா எழுந்து மாணக்கர்கள் காங்கிரஸில் சேரக்கூடாதென்று தகுந்த நியாயங்களை எடுத்துச் சொல்லி சுரேந்திரநாதரின் பேச்சுகளைக் கண்டித்தார். அவருடைய புத்தி விசேஷத்தைக் கண்டு ஸகலரும் ஆச்சரியமடைந்தனர். அநேகர் சுரேந்திரநாதர் தோல்வியடைந்தாரென்றே எண்ணினார்கள். மதன்மோஹன மாளவியா பேசி முடிந்து தமது ஆஸனத்தில் உட்கார்ந்த தக்ஷணமே சுரேந்திரநாதர் சிங்கம் போல் எழுந்து பண்டிதர் கூறிய வாக்கியங்களை யெல்லாம் கண்டித்து எல்லோருக்கும் சிரிப்பு உண்டாகும்படி பேசினார். அநேகஜனங்கள் பண்டிதர் தோல்வி யடைந்தார்; சுரேந்திரநாதர் சொல்லுவதுதான் சரி; மாணக்கர்கள் காங்கிரஸில் அங்கத்தினர்களாய்ச் சேரவேண்டியது அவசியம் தான் என்று எண்ணினார்கள். இப்படியே புத்திமான்களிருவரும் ஒருவருக்கொருவர் இளைக்காமல் தர்க்கம்செய்து கேட்போருக்கெல்லாம் இன்பத்தை விளைத்தனர். இம்மாதிரிச் சங்கங்கள் பல ஊர்களிலும் ஏற்பட்டு நமது புராண இதிஹாஸங்களிலுள்ள விஷயங்களைப் பற்றித் தர்க்கம் செய்வதாயின் எத்தனையோ ஆநந்தமாயிருக்கும். ஸகல ஸம்சயங்களும் நிவர்த்தியாகி

புத்தி விசாலப்படுவதுடன் ஒவ்வொருவருக்கும் புராண இதிகாஸங்களைப் பூரணமாய்ப் படிக்க வேண்டுமென்ற ஆவலும் உண்டாகும்.

மேற்கூறிய விஷயத்தைப்பற்றி நமது அன்பர்கள் நன்றாய் ஆலோசித்துப் பார்த்தால் அதில் விசேஷ நன்மையுண்டென்று அறியலாம். ஆனால் இப்படித் தர்க்கம் செய்வதால் புராணத்தில் நம்பிக்கையில்லை யென்றாவது, மகரிஷிகளையும் பகவானுடைய அவதாரங்களையும் நிந்தித்ததாகவாவது தப்பெண்ணம் கொள்ளப்படாது. குற்றம் கூறுந்தோறும் குணம் பிரகாசிக்கும். வம்புக்கு இழுத்தால் நம்பிக்கை பலப்படும். நாம் எதேனும் குறை கூறினால் புத்திமான்களாகிய பெரியோர்கள் அதற்குத் தகுந்த ஸமாதானம் சொல்லி நமது மனதுக்குப் பேரின்பத்தை தந்து நமது அறிவை விசாலப்படுத்துவர். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும். மத்தென்றிருக்கும் பிள்ளைக்கு மண் தான் கிடைக்கும். ஆதலின் நாம் அடியிற் கேட்கும் கேள்விகளைப் பிரியத்துடன் ஏற்று அவைகட்கான ஸமாதானத்தை அடுத்த பத்திரிகையில் தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

முதலாவது, இராம மூர்த்தியையும், ஸீதையம்மனையும் பற்றிப் பிரஸ்தாபிப்போம். இராமரிடம் ஸீதைக்கும், ஸீதையிடம் இராமருக்கும் உண்மையான அன்பு உண்டென்றும், ராமர் ஏக பத்நி விரதராயிருந்து ஸீதையைத் தாம் காட்டுக்குப் போகும்போது விட்டுப் பிரியாமல் தம்முடன் அழைத்துச் சென்றாரென்றும், இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதன்றி சீதையின் கற்பைப் பற்றி எல்லோரும் புகழுகின்றனர். இராமாவதாரம் எடுத்ததின் கருத்து உத்தமனாகிய மனுஷ்யன் இன்னபடி நடக்க வேண்டுமென்று நிதர்சனமாய் நடித்துக் காட்டுவதற்காம். ஸீதையாக அவதரித்தது கற்புடைய மங்கையர் புருஷனிடம் இன்னபடி நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவதற்காகவாம். அவ்வாறாயின், இராமர் தமது பத்நியின் வார்த்தையைக் கேட்டு மானைப் பிடிக்கச் சென்றாரே, இது புத்திசாலியான புருஷன் செய்யத்தக்க காரியமோ? இக்காலத்திலுள்ள கிராமாந்திரத்துப் புருஷர்கள் கூட "பொட்டைச் சிறுக்கிக்கு இடங்கொடுக்கப்படாது; ஸதா அவளைக் கொட்டிக்கொண்டே யிருக்கவேண்டும்; ஸ்திரீ புத்தியைக் கேட்பது பிசகு" என்று கூறி தங்கள் மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்காதிருக்கின்றனர். பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு என்றபடியும், முன்னே போகிறவன் இடறி விழுவது பின்னே போகிறவனுக்கு விளக்கு பிடிப்பது போலாகும் என்ற பழமொழிப்படியும் தமது தந்தையாகிய தசரதர் கைகேசியின் வார்த்தையைக் கேட்டு வியஸனத்தால் பீடிக்கப்பட்டு உயிரைவிட்டதை யறிந்த இராமர், தமது மனைவியான ஸீதையின் பேச்சைக் கேட்டு மானைப்பிடிக்கச் செல்லலாமோ?

அவர்தான் சென்றார். ஓ! லக்ஷ்மணாவென்று மான் இறந்துபோம்போது கூக்குரலிட்டதை ஸீதை கேட்டு லக்ஷ்மணனைத் துரத்துவானேன்? தன்னுடைய பர்த்தாவின் பராக்கிரமத்தை அந்த அம்மை அறிந்தவரன்றோ? ஒருவேளை மறந்துபோனாலும், லக்ஷ்மணன் சொல்லிய வார்த்தைகளாலாவது மனந்தேறி யிருக்கப்படாதோ? பிரதிதினமும் பாதஸேவை செய்த லக்ஷ்மணனைச் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லித் துரத்திவிட்டது நியாயமா?

அதுதான் போகட்டும். இராவணன் ஸந்யாஸியாக வந்ததும் அவனை உபசரிக்க வேண்டுமோ? புருஷர் இல்லாத வேளையில் பெரியோர்களை உபசரிக்கவேண்டிய விதியென்ன? புருஷன் உயிர்துறந்தாரோவென்று வியஸனப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் ஸந்யாசியைக் கண்டால் ஸாமான்ய மாதர்கட்கு உபசரிக்கவேண்டுமென்ற யோசனை தோன்றுமா? அதுதான் போகட்டும்; இராவணன் தன் கூந்தலில் ஒரு கையையும், தொடையில் ஒரு கையையும் கொடுத்து உயரத்தூக்கிச் செல்லுகையில் சீதா தேவியார் எவ்வாறு உயிரை விடாமலிருந்தார்? முன் ஜென்மத்தில் வேதவதியா யிருந்து இராவணன் தொட வருமுன் அக்கினியில் விழுந்திறந்த சீதை, இந்த ஜென்மத்தில் இரகுநந்தர் ஸ்பரிசிக்க வேண்டிய தன் சரீரத்தை இராக்ஷஸனாகிய அதே ராவணன் தொட்டதும் ஏன் பிராணனை விடவில்லை? ஒருவேளை பிரக்ஞையில்லை யென்றால், ஜடாயு சண்டை போட்டபோதும், நகைகளைக் கழற்றி சுக்கிரீவனிடம் விட்டெறிந்தபோதும் பிரக்ஞை வந்திருக்குமே? பின்னர் அசோகவனத்திற் சென்று பத்து மாதங்களிருந்ததாயும், அப்போது உயிரைவிட யோசித்ததாயும் சொல்லப்பட்டுளது.

ஸீதை மகாபதிவிரதை யென்பதை யெல்லோரிலும் முதன்மையாய் அறியக்கூடிய இராமர் இராவண சம்ஹாரம் செய்து அந்த அம்மையைச் சிறைமீட்டியவுடன் ஏன் ஸீதையின் கற்பைப்பற்றி ஸந்தேகித்து நெருப்பில் குதியென்றார்? இது உலகத்துக்குப் பயந்தோ? உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டென்பதை அவர் அறியாரோ? ஹனுமானாகிய விபீஷணர் சீதையின் கற்பைப்பற்றிச் சொன்னது போதாதா? என்ன ஐயா! இன்னும் ஸந்தேகம் இராமருக்கு? இது அவருடைய தீராச் சந்தேகமாகவன்றோ விருக்கிறது. அக்னிபகவான் சீதையின் பதிவிரதாக்கினி தன்னைச் சுடுகிறதென்றார். தசரத சக்கரவர்த்தியார் ஸீதைக்குப் பழுதில்லையென்றார். இவ்வளவு சொல்லியபிறகு கடைசியாக "ஹே சீதா! உன் கற்பைப்பற்றி எனக்கு ஸந்தேகமில்லை; உலகத்தாருக்கெல்லாம் உன் பதிவிரதா மகாத்மியம் தெரியட்டுமென்று இப்படிப் பரீக்ஷித்தேன்" என்று ஏற்றுக் கொள்கிறார்.

இவ்விதம் சொல்லி சீதாதேவியின் மனதைத் தேற்றி அயோத்திக்கு அழைத்துப்போன இராமர், சில தினங்களுக்கெல்லாம் யாரோ வண்ணான் பரிகாஸம் செய்தானென்று ஸீதையைக் காட்டுக்குத் துரத்திவிட்டு, கடைசி காலத்திலும் அவ்வம்மனை நோக்கி, "உனக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்ததால் கற்பைப்பற்றி எனக்கு ஸந்தேகமுண்டாகிறது" என்றாரே. இதைக்கேட்டு சீதையின் வயிறு எரிந்து, இனி இந்த ஸதா ஸந்தேகப்படும் கணவனிடமே இருப்பதைவிடப் பூமியிற் புதைந்து போகலாமென்று பூமியைத்தட்டி அதிற் பிளவு உண்டாக, பூமியின் உள்ளே சென்று மறைந்துவிட்டார். ஸந்தேக ராமபிரான் அதற்காகப் பூமாதேவியைக் கோபித்துக் கொண்டார். தர்மபத்நி உடன் இல்லாமையால் தங்கத்தால் ஒரு ஸீதையைச் செய்து வைத்துக்கொண்டு யாகத்தை நடத்தினாரென்று அறிகிறோம். மகரிஷியான வால்மீகரிடம் கூட ராமருக்கு ஸந்தேகமுண்டாயிற்று. இது தர்மந்தானா?

மகா கற்புடைய பெண்மணியென்று போற்றப்படும் ஸீதாதேவியின் சரித்திரத்தைப் பார்க்குமிடத்து, அந்த அம்மன் துன்பமே யடைந்தாரென்றும், கடைசியாகத் தமது பர்த்தாவைக் குறித்து மிக்க மனம் வருந்தினாரென்றும் தெரியவருகிறது. அவ்விதம் ஹிருதயவேதனை யடைந்ததனாலன்றோ அவ்வம்மணி பூமியினுட் சென்று மறைந்தார். இராமர் சீதையின் விஷயமாய் நடந்துகொண்ட தயாளமில்லாத செய்கையையும், அத்தேவியாரின் கற்பைப்பற்றி அடிக்கடி ஸந்தேகங்கொண்டு அம்மாதரசியைப் படுத்திய துன்பங்களையும் இக்காலத்துப் பெண்மணிகள் வாசித்தால் என்ன நினைப்பார்கள்? எவ்வளவுதான் அடங்கி நன்மையாய் நடந்தாலும், இந்தப் பாழும் புருஷர்கள் நம்முடைய நடத்தையைப்பற்றி எப்போதும் ஸந்தேகிக்கிறார்களே; இராமாயணம் என்று வால்மீகி ரிஷி செய்ததுபோல, முற்காலத்திலிருந்த எந்த ரிஷி பத்தினியேனும் "ஸீதாயநம்" என்ற கிரந்தத்தை எழுதி ஸீதையைக் குற்றமில்லாதவளாக்கி, அவ்வம்மனிடம் ராமர் ஸந்தேகம்கொள்ளாமல் உண்மையான அன்போடு இருந்தாரென்று முடித்து, இக்காலத்துப் பெண்களுக்கெல்லாம் கற்பினாலுண்டாகும் பரம பாக்கியத்தை எடுத்து விளக்கியிருந்தால் எத்தனை நலமாயிருக்குமென்று நினைப்பார்களன்றோ? பண்டித ரத்நங்களே! மேலே கண்ட விஷயங்களுக்கு நீங்கள் அன்போடு எழுதும் ஸமாதானத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

[☞ இதற்கு சரியான ஸமாதானமும் விடையும் அடுத்த இரண்டு பத்திரிகைகளிலும் தெளிவாய் விவரிக்கப்படுமாதலின், அன்பர்கள் தப்பு அர்த்தங்கள் செய்துகொள்ளாமலிருக்கும்படி கோருகிறோம். பத்திராசிரியர்.]

---

# பாக்கியரதி

சில வருஷங்களுக்குமுன் தென்னிந்தியாவிலிருந்த ஒருவன் ஒரு பெண்ணை சாஸ்திரோக்தமாய் மணம்புரிந்து ஜீவன ஹேதுவின்றி மனம் வெறுத்து அவளுடன் வாழ்ந்த சில நாளைக்குள் அவளைவிட்டுப் பிரிந்து எங்கேயோ சென்றுவிட்டான். அநேக வருஷங்கள் வரையில் அவனைப் பற்றி யாதொரு சங்கதியும் கேள்விப்படாததால், அவன் இறந்துபோனான் என்று ஊகித்து ஹிந்துக்களின் வழக்கப்படி மாங்கல்ய முதலியவற்றைப் போக்கி அப்பெண்ணை அலங்கோலப்படுத்தினார்கள். விதவை என்ற துர்ப்பாக்கியமான முட்கிரீடம் அவள் தலையிலேறிற்று. அவள் புருஷன் போனபோதே மூன்றுமாத கர்ப்பவதியா யிருந்ததால், ஒரு பெண் குழந்தையைப் பிரஸவித்தான். பர்த்தா இறந்துவிட்டாலும் அவ்வளவு துக்கம் ஏற்படாது. ஆனால் உயிருடன் அவனைப் பறிகொடுப்பதே சகித்தற்கரிய ஸஞ்சலமாம். தன் கணவன் சென்ற இடம் தெரியாமல் தவிப்பது மகா கஷ்டமும் அவமானமுமன்றோ? தன்னைச் சுமங்கலியென்பதா?—அமங்கலியென்பதா? ஒன்றும் நிச்சயிக்கக்கூடவில்லை. ஊரார் தன் தலைமீது ஏற்றிய அமங்கலத் வேஷம் சாஸ்வதமாயிற்று. பிறந்த பெண் குழந்தையைப்பற்றி அண்டை

அயலார் வம்புபேசத் தொடங்கினார்கள். மூன்றுமாத கர்ப்பம் அவ்வளவாக வெளிக்குத் தோன்றாது. எட்டாவது மாதக் கடைசியிலும் குழந்தை ஜனிப்பது உண்டாதலின், பத்துமாதமும் நிறைந்து மகவு பிறந்ததாயினும், எட்டாவதுமாதத்தில் என்கிற எல்லோரும் கூறி அதை வித்யாஸமாகப் பேதப்படுத்தி அதற்கான ஸம்சய சரக்குகளையும் கூட்டித் தங்கள் அவதூறை உண்மைப்படுத்த முயற்சித்தனர். சிலர் பகிரங்கமாகவே அப்பெண்மணி மீது தோஷாரோபணம் செய்தனர். சிலர் அவளைத் தோஷமற்றவளென்றனர். இவர்கள் கூறும் வார்த்தைகளெல்லாம் இரும்பு முட்களைப்போல் அந்த சாந்தையின் ஹிருதயத்தில் சுறுக்குச் சுறுக்கென்று தைத்ததால் ஹா! பகவானே நீயே துணை என்று கதறினாள். அவளுக்கு ஜனித்த பெண் குழந்தை உத்தம மார்க்கத்திலேயே உதயமாயிற்றென்பதை அவளது பெற்றோர்கள் அறிவாராயினும் ஊராரின் தூற்றுதலை அடக்கக்கூடவில்லை. பெண்மணி நன்கு படித்தவள். வித்யாவந்தை. ஆனால் பரம ஏழை. அவளுக்கு இரண்டொரு அநாமதேயக் கடிதங்களும் வந்தன. இன்ன இடத்திலிருந்தால் அவளைச் சந்தித்து உபாயகியாக ஏற்றுக்கொள்வதற்கான முடிவு வார்த்தைகளை நிச்சயப்படுத்தலாமென்று அக்கடிதங்களில் குறிப்பிட்டிருந்தன. பெண்மணி கண்ணீரும் கம்பலையுமாக அக்கடிதங்களைத் தன் பிதாவிடம் காண்பித்தாள். பெற்ற வயிறு பொறுக்குமா? தானே அவ்விடத்திற்குச் சென்று நடக்கும் விஷயங்களைக் கிரகிக்க வேண்டுமென்று தந்தை தீர்மானித்தான்.

இரவு எட்டுமணி யாயிற்று. நல்ல நிலாக்காலம். எவரும் நெருங்காத ஒரு பாழுங்குளத்துக் கருகில் தந்தை உலாவியவாறு இருந்தான். சில நிமிஷங்களுக்குப் பிறகு இருவர் நன்றாக உடை தரித்துக்கொண்டு அங்கு தோன்றினர். பெண்மணியின் பிதாவே அந்த நின்றுகொண்டிருந்ததால் அவனைக் கண்டு, ஓகோ! நீரா வந்துவிட்டீரா, பரமானந்தம், எங்கள் கடிதம் கிடைத்ததா, உமது உத்தேசம் என்னவென்றனர். தந்தையோ ஆத்திரத்தில் தன்னை மறந்தான். எதிர்க்கத் தொடங்கிக்கொண்டான். இருவரும் கைகலந்தனர். பெண்ணைப் பெற்றவன் எப்போதும் பலஹீனனே. இன்னும் அப்பெண் பதியைப் பிராணனுடன் பிரிந்து பரமதுக்காக்கிராந்தையாய் இருப்பின், அவளை உலகத்தில் தோற்றுவித்த பிதாவின் உள்ளத்தில் வலிமை என்பது எங்கிருந்துவரும்? வியஸனமே அவனைப் பீடித்து அவன் தேகத்தை உருக்கிவிடுமன்றோ? இரு விடர்களும் இப்பரிதாப மனுஷ்யனை நன்றாகப் புடைத்து இரத்தகாயங்களாக்கிவிட்டுச் சென்றனர். வெகு நேரம் வரையில் தந்தைக்குப் பிரக்ஞையேயில்லை. இரவு அவ்வழியாக 'ரோந்து' சுற்றி வந்து போலீஸ்வீரன் தந்தையின் அலங்கோலத்தைக் கண்டு எழுப்பி வீட்டில் சேர்த்தான். மாதாவும் மகளும் அதைக் கண்டு அலறினர்.

பெண்மணி இனிதான் அவ்வூரில் இருப்பது அபாயகரமென்று தீர்மானித்து எவருடனும் சொல்லிக்கொள்ளாமல் தன் குழந்தையுடன் காசிக்குச் சென்றாள். அகதிக்குத் தெய்வமே துணை யென்பதாக, அங்கு தனவானாகிய ஒரு பிரபுவின் குடும்பத்தாரால் ஆதரிக்கப்பட்டாள். சிலகாலம் அங்கிருந்துவிட்டு, தன் பெற்றோர்களைப் பார்க்கவேண்டுமென்ற பிரியத்தால் தன் ஊருக்குப் புறப்பட்டாள். இவளை ஆதரித்த கனவான் செல்வ சம்பத்தில் மிகுந்தவராயினும் புத்திரஸம்பத்து இன்மையால் இவளது பெண்

குழந்தையைத் தனது சொந்தபுத்திரிபோலவே வளர்த்து வந்தான். ஆகவே அதைப் பிரிய மனமின்றி அவளுக்குச் செலவுக்குவேண்டியது கொடுத்துப் பெற்றோருடன் சீக்கிரம் திரும்பித் தன்னிடம் வந்துவிடும்படி சொல்லி யனுப்பினன். அவன் வார்த்தையைத் தள்ளமுடியாமல் தனக்குத் துணை வந்தவர்களோடும் புறப்பட்டுத் தன் ஊர் சேர்ந்து சிலகாலம் அங்கேயே தங்கிவிட்டாள். பல காரணங்களாலும் புறப்படத் தடையாகி, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு தன் பெற்றோர்களுடனும் காசிக்குப் பிரயாணப்பட்டு வந்து சேர்ந்தாள்.

இதன் மத்தியில் காசியிலிருந்த தனவான் ஊர் சென்ற பெண் மணியைப்பற்றி எந்த விவரமும் தெரியாததாலும், அவளுடைய விலாஸமும் எங்கோ தவறிவிட்டதாலும், தன்னிடம் நான்கு வருஷங்களாய்க் குமாஸ்தா வேலை பார்த்துவரும் 34-வயதுள்ள ஒருவனுக்கு அப்பெண் குழந்தையைத் தருவதென்று தீர்மானித்து விவாகத்துக்கும் ஏற்பாடு செய்துவிட்டான். விவாகமுகூர்த்தத்திற்கு அனைவரும் வந்திருந்து சிறப்பித்தனர். மாங்கல்ய தாரணம் புனைவதற்குச் சில நிமிஷங்களே இருக்கையில் நமது பாக்யரதியும் அவளுடைய பெற்றோர்களும் அங்குபோய்ச் சேர்ந்தனர். பாக்யரதி மணப் பெண்ணைய் ஸர்வாலங்கிருத சுந்தரியாக நின்ற தனது புத்திரியை ஆசை யோடும் அணைத்து முத்தமிட்டுக்கொண்டாள். பாக்கியரதி தனவானை நோக்கித் தன் பெண்ணுக்கு நிச்சயித்த வரனைத் தான் பார்க்கவேண்டு மென்றாள். உடனே தனவான் குமாஸ்தாவுக்குச் சொல்லியனுப்ப, மண மகனை குமாஸ்தா பரம ஸந்தோஷத்துடனும் வந்து தனக்கு இனி மாமி யாகப்போகும் பெண்மணியின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து நமஸ் கரித்தான். அவளும் ஆசீர்வதித்தாள். ஐயோ! பகவான் செய்யும் கூத்தை யார் அறிவர்? ஸந்தோஷம் உடனே வியஸனமாக மாறியது. மாமியார் தன் மருமகனைப் பார்க்கவில்லை. அவன் தன் புருஷனென் றறிந்தாள். மூர்ச்சையானாள்.

உடனே விவாக வீடு அலங்கோலமாயிற்று. விவாகத்துக்கு வந்திருந்த எல்லோரும் இந்த அதிசயத்தைக் கண்டு திகைத்தனர். மணப்பெண் மயங்கி நின்றாள். பாக்கியரதியின் பெற்றோர்களும் தனவானும் ஒரு பெரிய அமங் களம் நேரவிருந்ததை நடவாது தடுத்துவிட்ட கடவுளின் அருளை வியந்து கொண்டாடினர். மருமகன் மாமியைக் கண்டு தலை குனிந்தான். பாக்கிய ரதியும் மூர்ச்சை தெளிந்து எழுந்து தன் பதியை வணங்கினாள். மணப் பெண்ணும் தன் பிதாவை நமஸ்கரித்தாள். ஒரு பயங்கர ஸம்பவம் எப் படியோ பகவத் கருணையால் விலகி எல்லோரும் ஆநந்த ஸாகரத்தில் ஆழ்ந் தனர். தனவானின் தமக்கைப் புதல்வனுக்கு அப்பெண் குழந்தையைத் தருவதென்று அப்பொழுதே நிச்சயமாகி, அதே விவாகப் பந்தலில் மறு தினம் விவாகம் மங்களமாய் நிறைவேறிற்று. தான் தன் மனைவியைப் பிரிந்து ஓடிவிட்ட சமயத்தில் தன் மனைவி மூன்றுமாத கர்ப்பமென்று குமஸ்தாவே வாய்விட்டுச் சொல்வதானன். பெண்ணைப்பற்றிய ஸம்சயமும் நிவர்த்தியாயிற்று. பிறகு சில மாதங்கள் பொறுத்துப் பாக்கிய ரதி தன் பர்த்தாவுடனும் பெற்றோர்களுடனும் தன் குமாரத்தி மருமகன் இவர்க ளோடும் தன் கிராமத்திற்கு வந்துசேர, முன்பு தூற்றிய பந்துக்களெல்லாம் பாக்கிய ரதியின் செல்வத்தையும் அவளது அதிர்ஷ்டத்தையும் நோக்கித்

தங்களின் ஊத்தை வாயை மூடிக்கொண்டு வெகு விசுவாசமாய் உறவாட நெருங்கினர். கடவுளின் கருணையையும், பந்து ஜனங்களின் ஸமயத்துக் கேற்ற ஸ்வபாவத்தையும் கண்டீர்களா?

---

# யூஜனு ஸாண்டோ

உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களாலும் மகா பலிஷ்டன் என்று மதிக்கப்பட்டு வந்து ஸமீபத்தில் காலமான யூஜனு ஸாண்டோ என்பவரைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் எவரும் இரார். நம்மவர்கள் செய்யும் அல்பமான விஷயங்களைக்கூடத் தமது சக்தியால் செய்வதாகச் சொல்லி, தமது சக்திக்கு மதிப்பு கொடுப்பது அபூர்வம். ஒரு தேவதையின் வசியமென்றாவது, மந்திர சக்தியினால் என்றாவது சொல்லித் தமது சக்திக்குப் பெருமை கொடாமல் பிதற்றுவர். ஐரோப்பியர்கள் எவ்வித ஆச்சரியகரமான காரியத்தைச் செய்தாலும், அதை சாஸ்திர ஞானத்தாலும் யந்திரக் கருவிகள் பொருத்தமாய்ச் சேரும் தன்மையாலுமே அவ்விதம் ஆகின்றதென்று பிரத்தியக்ஷமாய் நிரூபித்துப் படங்களுடன் அது விஷயமாய்த் தெளிவான விவரங்களோடு ஒரு புஸ்தகத்தையே வெளியிட்டுவிடுவார்கள். மந்திர மாயங்கள் என்று சொல்லும் வழக்கம் அவர்களிடம் அபூர்வம். அவ்விதமே யூஜனு ஸாண்டோ தமது அதியாச்சரியகரமான செயல்களைத் தமது சரீர பலத்தைக்கொண்டே செய்வதாய் எல்லோருக்கும் விளக்கிப் பிரஸித்த புருஷராயினர்: அதைக் குறித்து ஒரு தனிப் புஸ்தகமும் வெளியிட்டார். யூஜனு ஸாண்டோ தம் தந்தையோடு முதன்முதலாக இத்தலி நாட்டுக்குச் சென்றார். அங்கே வைத்திய கலாசாலையிற் பயின்று தேகத்தின் தசை, நரம்பு, கொழுப்பு முதலியவற்றைக் குறித்துச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டார். அப்போதுதான் சரீர பலத்தை விருத்தி செய்யும் வழியின்னதென்று தானே கண்டுபிடித்துத் தெளிந்தார். இன்னும் தேகக் கூறுகளை முற்றிலும் ஆராய்ந்து சலியா முயற்சியுடன் அப்பியஸித்துத் தேர்ந்தார். சில பெரிய யந்திரங்களைப் பிடித்து ஆட்டி யாவும் கலகலத்துப் போகும்படி செய்து தமது பலத்தைப் பரீக்ஷித்தறிந்தார். தமது பெயர் பிரஸித்தியான பின்பும்கூடத் தேக தத்துவசாஸ்திரத்தை விடாமற் படித்துப் பிரதிதினமும் ஆராய்ச்சி செய்து வந்தார்.

எத்தனை சதுர் சாஸ்திர பண்டிதனாயிருந்தாலும் தனது வித்யா பராக்கிரமங்களைப் பிரகாஸப்படுத்த அவனுக்குத் தருணமும் ஏற்ற ஸந்தர்ப்பமும் லபிக்கவேண்டும். ஸாண்டோவின் அதிர்ஷ்டத்துக்கு ஏற்றபடி அவர் பிரக்யாதியடைவதற்கான ஸமயம் ஒன்று வாய்த்தது. இங்கிலாந்தில் ஜர்மானியனாகிய ஸாம்ஸன் என்பவன் குஸ்தி போடுவதாயும், தன்னை ஜெயிப்பவர்க்கு ஆயிரம் பவுன் இனாம் கொடுப்பதாயும் வெளியிட்டான். இதையறிந்த ஸாண்டோ இங்கிலாந்துக்குச் சென்று இங்கிலீஷ் தெரிந்த ஒரு நண்பரைக்கொண்டு தான் பந்தயத்துக்கு வருவதாகத் தெரிவித்தார். அவ்விதமே அவனோடும் அவனுடைய சிஷ்யர்களோடும் சண்டை செய்து

ஜயித்து வேண்டிய வெகுமதிகளைப் பெற்றார். அது முதற்கொண்டே ஸாண்டோ பிரக்யாதியடைந்து பிரவசித்த புருஷரானார். அதுமுதற் கொண்டு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் அவருக்கு ஏற்பட்டனர்.

1904-ம் வருஷக் கடைசியில் ஸாண்டோ இந்தியாவுக்கு வந்தார். அவர் இங்கு வந்த நோக்கம் தமது பலத்தைப் பிரகாஸப்படுத்தவன்று. சரீர அப்யாஸத்தால் பலவானாகலாமென்று பிரஸங்கித்து ஸத்கீர்த்தி பெற வேண்டுமென்பதே அவரது நோக்கம். இந்தியா முழுமையும் சுற்றுப் பிரயாணம் செய்து தமது பலத்தின் பராக்கிரமத்தை ஸர்க்கஸ் கம்பெனி யின் மூலமாக யாவருக்கும் விளக்கிக் காட்டினார். ஸாண்டோ பம்பாயில் இறங்கியதும், அவரைப் பார்க்கச் சென்ற ஒரு பத்திரிகைப் பிரதிநிதி அவரைக் கண்டதும் "இவனையோ கலிகால பீமசேனன் என்கிறார்கள்" என்று ஸந்தேகித்தாராம்.

அந்தப் பத்திரிகா பிரதிநிதியிடம் ஸாண்டோ தமது கைகளை ஸ்பரி சிக்கும்படி தெரிவித்தார். அவர் தொட்டுப் பார்த்து, இத்தனை மிருதுவா யிருக்கும் கைகளுக்குப் பலம் எங்கிருந்து உண்டாகுமென ஆச்சரியப்பட்டார். ஸாண்டோ மற்றொருமுறை அவரைத் தமது கைகளை ஸ்பரிசிக்கச்சொன் னார். அப்போது கைகள் கருங்கற்களைப்போலிருந்தன. பத்திரிகா பிரதிநிதி இதற்கென்ன காரணமென, அதற்கு ஸாண்டோ எப்போது மனது தசை யில் பற்றுகிறதோ அப்போதுதான் அதற்குப் பலமுண்டாகுமென்றார். ஸாண்டோ இந்தியாவுக்கு வந்துபோன பிறகு, ஸ்ரீமான் ராமமூர்த்திஎன்பவர் இந்தியன் ஸாண்டோ என்ற பெயருடன் வெளிப்பட்டு பிரக்யாதி பெற்ற விஷயம் நம்மவர் அனைவரும் அறிந்ததே.

---

## உலகத்தில் வழங்கும் பான வகைகள்

எல்லா பான வகைகளிலும் ஸர்வ சிலாக்கியமானதும், உத்தமமும் தேக சுகத்திற்கு அடுத்ததுமாக உள்ளது சுத்தமான ஜலமே. அந்த ஜல மும் அவ்வவ்விடத்தின் தன்மைக்கேற்றபடி வேறுபட்டுப் பல்வேறு நிறமாய் விளங்கி குணத்திலும் பேதப்பட்டு நிற்கும் தன்மையது. "அந்த ஊரின் ஜலம் என் உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை" என்று சிலர் சொல்வதை யும் கேட்டிருக்கிறோமன்றோ? இயற்கையான ஜலத்திற்கே சில தோஷங் கள் அமைவதாகில், செயற்கையில் உண்டாக்கப்படும் பான வகைகளின் தன் மையைக் குறித்துச் சிந்திக்கத்தக்கதே.

நமது தேகத்தில் உண்டாகும் தாபத்தைத் தணித்து, உண்ணும் உணவு நன்றாய் ஜீரணமாவதற்கே நாம் ஜலரூபமாய் உள்ளவற்றைப் பருக வேண்டும். நீராவி யந்திரத்தைச் செலுத்துவதற்குக் கரியும் தண்ணீரும் தேவையாயிருப்பது போலவேதான் நமது தேகமாகிய யந்திரத்தைச் செலுத்துவதற்கும் உணவும் நீரும் பிரதானமானவை. நமது தேகத்திற்கு

உணவு வேண்டுமென்பதைக் குறிப்பிக்கப் பசி உண்டாவதுபோலவே, நீர் வேண்டுமென்பதைக் குறிப்பிக்க நீர் வேட்கை அல்லது தாகம் உண்டாகின்றது. பசி தணிவதற்குப் பலவகை உணவுகளைப் படைத்திருப்பதுபோலவே, நீர் வேட்கை தணிவதற்கும் ஏற்ற நல்ல பொருளாக இயற்கையாகவே கடவுள் தண்ணீரைப் படைத்திருக்கிறார். ஆயினும் வெகு காலமாகச் செயற்கைப் பொருள்கள் அநேகம் இவ்வுலகத்தில் எல்லாத் தேசங்களிலும் பானத்திற்கு ஏற்ற பொருளாக வழங்கப்படுகின்றன. அவை யாவையெனின்; பல வகைத் தானியம், பழம் முதலியவற்றினின்றும் இறக்கும் மதுபானமாம்.

தானியம், பழம் முதலியவற்றினின்றும் மதுபானம் இறக்கும் முறையை வெகு காலமாக இவ்வுலகத்தார் நன்றாய் அறிந்துகொண்டிருக்கின்றனர். எகிப்து தேசத்தார் பார்லி முதலிய தானியங்களினின்றும், உவயின் என்னும் ஒருவகைச் சாராயம் இறக்கும் முறையை நெடுங்காலமாகக் கண்டறிந்திருக்கின்றனர். கிரீஸ் தேசத்தவர் வெகுகாலமாக ஒருவகைச் சாராயம் இறக்கிக் குடிக்க வழக்கப்பட்டிருக்கின்றனர். கிரீஸ் தேசத்தவரும் உரோம தேசத்தவரும் எகிப்து தேசத்திலிருந்து பான வகைகள் அழைப்பித்து அதிகமாய்க் குடித்ததாக நெடுங்காலத்துக்கு முன்னரே சரித்திரங்களில் பிரவிசித்தமானது.

ஆதியில் வெகுவாய்ப் பல தேசங்களிலும் சாராய மிறக்குவதற்கு பார்லி என்னும் தானியமே முதற் கருவியாய் இருந்ததெனத் தெரிய வருகின்றது. அமெரிக்கா தேசத்தை முதலில் கண்டு பிடித்தபோது அத் தேசத்தவர் சோளத்திலிருந்து கள் இறக்கிக் குடித்துக்கொண்டிருக்கக் கண்டார்களாம். அது அத்தனையாக மயக்கம் தரத்தக்க உக்கிரமான பானமல்லவாம். பிறகு ஐரோப்பியர்கள் கொண்டுபோய்க் காட்டிய கொடிய பானங்களை அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு வெறி மிகுந்து வருந்தினார்களாம்.

பிற்காலத்திலே தான் பிரான்சு முதலிய தேசங்களில் திராட்சை முதலிய பழங்களினின்றும் சாராயம் இறக்கும் முறை கண்டு பிடிக்கப் பட்டது. இங்கிலாந்தில் முற்காலத்திலே நமது தேசத்தில் தென்னை, பனை முதலிய மரங்களினின்றும் இறக்குவதுபோலவே, அத்தேசத்துப் பல ஜாதி மரங்களினின்றும் கள்ளிறக்கிக் காய்ச்சிப் பானமாக உபயோகித்து வந்தனர்.

சீனதேசத்தில் தானியத்தினின்றும் மாமிசத்தினின்றும் கூடச் சாராயம் இறக்குகின்றனர். ஆயினும் அது மிகவும் கேடுகெட்டது என்கிறார்கள். இவ்வண்ணமே ஜப்பான், ருஷியா முதலிய தேசத்தவர்களும் கள்ளிறக்கிக் குடித்து வருகின்றனர். பலவகைப் பற்கள், பூண்டுகள், புஷ்பங்கள், கிழங்குகள் முதலியவற்றினின்றும் அங்கங்கே அநேக தேசத்தார் மது இறக்கி உண்டு களிப்பு (?) அடைகின்றனர்.

இவ்விதமாய் இக்காலத்தில் இவ்வுலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பான வகைகளுக்கு இவ்வளவென்று அளவில்லை. இவை யாவும் குணத்தில் ஒரு தன்மையானவையல்ல; வெவ்வேறு விதமாக இருக்கின்றன. உடம்புக்குச் சில ஆரோக்கியமாய் இருக்கின்றன வென்கிறார்கள். சில மிதமான வெறியை யுண்டாக்குகின்றவை. சில விசேஷமான வெறி யுண்டாக்குகின்றவை. சில பானங்கள் நோயாளிகளுக்கு மருந்தாய் உபயோகிக்கத் தக்கவையென

வைத்தியர்கள் கண்டறிந்திருக்கின்றனர். ஆயினும் பொதுவாய்ப் பார்க்கு மளவில், இந்தச் சாராயங்களுக்கெல்லாம் மதியைக் கெடுத்து வெறியைக் கொடுக்கும் குணமே மிகுதியாதலால் இவற்றை முற்றும் விலக்கி, குடியன் என்கிற இழி சொல்லுக்கு இலக்காகாமல், நம்மைப் பாதுகாப்பதற்காகக் கடவுள் இயற்கையாகவே படைத்திருக்கும் பாலையும் நன்னீரையும் பானத் திற்கு ஏற்ற பொருளாய் உபயோகப்படுத்திக் கொள்வதே உத்தமமாகும்.

மத்யபானம் செய்வதனால் விளையும் தீமைகள் எங்கும் பிரவசித்தம். குடித்து வழக்கப்பட்டவனுடைய குடும்பம் முன்னுக்கு வந்து ஓங்கி விளங் கியதாய் எவரும் கேட்டதில்லை. இன்றைக்கு ஒரு குடியன் ஒரு தடவை ஒருவனிடமிருந்து வாங்கிக் குடிப்பானாயின், நாளைக்கு அவனுக்குப் பத்து தடவை வாங்கத் தருமாறு நேர்ந்துபோம். தமது கைப் பணத்தைச் செல விட்டு வெறி மயக்கத்தையும் மெய்ம்மறதியையும் விலைக்கு வாங்கிக் கொள் கின்றவர்களை நாம் என்னென்று சொல்லலாம்? கட் குடித்தலாகிய இப் பெருங் குற்றத்தையுடையவர்களை நோக்கி நாணம் என்பது நெடுந்தூரத்திற் கப்பால் ஓடிப் போய்விடும். எவ்வளவு ரகசியமான செய்தி அவர்கள் உள் ளத்திலிருந்தாலும் வெளிப்பட்டுப்போம். குடியன் என்று யாவரும் இகழ, இவ்வாறு மானத்தைப் போக்கடித்துக்கொண்டதன் பிறகு வாழ்கின்ற வாழ்வு என்ன வாழ்வு! இந்தக் குடி வழக்கம் ஒழிந்துபோமாயின், அவர் கள் வீடுகளில் உண்டாகும் காதில் கேட்க வழங்காத வீணாரவாரம் சண்டை சச்சரவு முதலிய எல்லாம் உடனே வெகுவாய் விலகிப்போம்.

கட்குடியைவிட காப்பி, தேயிலைப் பானங்கள் இப்போது அளவு கடந்துவிட்டன. ஒரு சிறு கிராமத்தில் கூட இந்தப் பானக் கடைகள் ஏற் பட்டுப்போயின. பிரதிதினமும் இதன்பொருட்டுச் செலவிடும் தொகை யின் மொத்தத்தை ஒரு மாதத்திற்கு எண்ணிப் பார்ப்பின் அதனால் குடும் பங்கள் இந்த அதிக விரயம் காரணமாக எவ்வளவோ நஷ்டப்படுகின்றன வென்பதைக் கண்டறியலாம். பிரதி தினமும் உண்பதும் உடுப்பதும்போல இந்தப் பானத்தைத் தினசரி பருகுவதையும் தங்கள் வழக்கமாகக் கொண்டு விட்டனர். இதிலும் பெருங்கேடு யாதெனில், வீட்டிற்குட் செய்து பருகு வதில் அவ்வளவு செலவு ஏற்படாது; ஒரு அளவில் நிதானத்தில் அது நிற்கக்கூடும்; இந்தப் பான வகைகள் விற்கப்படும் இடங்களுக்குச் சென்று பருகுவதில், தான் மட்டும் அருந்துவதன்றித் தன்னுடன் வருவோருக்கும் பரிமாற நேர்வதனால் அபரிமிதமான விரயம் ஏற்படுகின்றது. தற்காலப் புது நாகரீகத்தின் தீமைகளில் இந்தப் பான வகையும் ஒன்று. இவ்வழக்கம் இனி விலகுவதும் அரிது. பிறரைக் கௌரவிக்கத்தக்க விருந்து வகைகளுள் இதுவும் ஒரு மரியாதைப் பொருளாக மாறிவிட்டிருப்பது இன்னும் விப ரீதம். ஆயினும் வெளியிலுள்ள கடைகளிற் பருகும் தூப்பியாசத்தை விட் டொழித்துத் தத்தம் இல்லங்களில் மிதச் செலவில் இந்த அப்பியாசப் பை சாசத்தைச் சாந்தி செய்துகொள்ளப் பார்ப்பது உத்தமும், சிறிது சிறிதாக இந்த உபாதையினின்றும் தப்பித்துக் கொள்ளக்கூடிய பாதையாகவும் இருக்கும். நல்ல பழக்கம் நாளாகும்; கெட்ட பழக்கம் வெகு சீக்கிரத்தில் கலந்துகொள்ளும்.

# பெண்கள் பக்கம்

## சந்திராவும் சரஸ்வதியும்.

**சரஸ்வதி** :—ஏது சந்திரா ! இன்றைக்கு உன்னைத் தனியாகக் காண நேர்ந்தது ? நான் வரும்பொழுதெல்லாம் பெரிய கூட்டம் போட்டுக்கொண்டிருப்பாயே. உன்னைச் சுற்றி சதாகாலமும் சிநேகிதைகள் நிறைந்திருப்பார்களே. என்னுடன் பேசுவதற்குக்கூட உனக்குச் சாவகாசம் இருக்காதே. இன்று நீ ஒண்டியாக இருப்பது பெரிய ஆச்சரியம்.

**சந்திரா** :—எல்லோரும் 'குழுமாய்த் திருவிழா' வுக்குச் சென்றிருக்கிறார்கள் நானும் அவர்களுடன் போக எண்ணினேன். என் கணவர் அது ஒரு தவறுதலான கொள்கையுடைய திருவிழாவென்றும், ஆட்டுக்குட்டிகள் பதினாயிரக் கணக்காய்ப் பலி கொடுக்கும் அக்கிரமம் காணச் சகிக்கவில்லையென்றும், அதற்குப் போகக்கூடாதென்றும் சொல்லிவிட்டார். நான் அழுது கொண்டுபோகாமல் இருந்துவிட்டேன்.

**சரஸ்வதி** :—அவர் சொன்னது சரிதான், இதற்காக அழுவானேன் ?

**சந்திரா** :—ஏது நீ அவரைவிடப் பெரிய அதிகாரம் செய்கிறாயே ? எவ்வளவோ பெண்கள் அந்தத் திருவிழாவுக்குப் போயிருக்கும்போது நான் மட்டும் போனால் மோசமோ ?

**சரஸ்வதி** :—மோசமோ, மோசமில்லையோ—அதல்ல சங்கதி. பர்த்தாவுக்கு எது பிரியமில்லையோ அதைப் பத்தினியும் செய்யக்கூடாதென்பதே விதி. எப்பொழுதும் தன் கணவனின் விருப்பத்தை யனுஸரித்து நடந்துகொள்வதே ஒரு பெண்ணுக்கு க்ஷேமமும் சமாதானமுமாகும்.

**சந்திரா** :—நீ சாஸ்திரக் குப்பையை அளக்க வந்துவிட்டாயாக்கும். என்னவோ என் தலையெழுத்து : எத்தனையோ நல்ல இடங்களில் என்னைக் கேட்டார்கள். அங்கு என்னைக் கொடுத்திருந்தால் ஊரிலுள்ள பெண்களைப்போல நானும் நிம்மதியாக வாழ்ந்திருப்பேன். அந்த இடங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, மகா படித்தவர், கல்விமான், என்று என் தந்தை இந்த இடத்தில் என்னைத் தள்ளினார். எப்போது பார்த்தாலும் என் பிரியத்துக்கு எதிரிடையாகவே எல்லாக் காரியமும் இருக்கிறது. நான் எது விரும்புகிறேனோ அதற்கெல்லாம் என் வீட்டார் எதிரிடையாக நிற்கிறார். என் இஷ்டப்படிப் போக என்னை விடுவதில்லை. இந்தப் பாழும் வாழ்வைவிடக் கழுத்தில் கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழலாம்.

**சரஸ்வதி** :—என்ன இவ்வளவு சலித்துக்கொள்கிறாயே ? உன் வீட்டாரை எனக்கு வெகு காலமாகத் தெரியுமே. நான் இந்தத் தெருவிலேயே பிறந்து இந்தத் தெருவிலேயே வாழ்க்கைப்பட்டவள். அவரைப்பற்றி நான் கெடுதலாக ஒன்றும் சொல்வதற்கில்லையே ? உன்னை அவர் அடித்துத் துன்பப்படுத்துகிறாரா ?

**சந்திரா** :—இனி அடி படவேண்டியதுதான் பாக்கி. அதில் கூட ஒரு சாஸ்திரம் இருக்கிறதாம். என்ன எதிரிடையாக இருந்தாலும் பெண்களை அடிக்கவே கூடாதென்பது அவர் கொள்கையாம். 'சற்றேனும் ஏறு

மாருக இருப்பாளேயாயிற் கூறுமற் சந்நியாசங் கொள்' என்றும் ஔவையார் சொல்லியிருக்கிறாராம்; அவ்வளவே தவிர தடி கொண்டு பொத்து என்று சொல்லவில்லையாம்; அடிக்காமற் போனாலென்ன? வாயால் வேண்டியவரை அடிக்கிறார். பட்டுப்பட்டு நெஞ்சமெல்லாம் புண்ணாய்ப்போயிற்று?

**சரஸ்வதி**:—அவர் உன்னை ஸதா திட்டியபடி இருக்கிறாரா? என்ன சொல்லி வைகிறார்?

**சந்திரா**:—நான் எப்போது பார்த்தாலும் பெண்கள் கூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறேனாம்; என்னிடம் பேச வருகிற பெண்களெல்லாம் கல்வி மணமற்றவர்களாம்; வீண் ஊர் வம்பு பேசுகிறவர்களாம்; பயனற்ற பேச்சுகளில் காலத்தைச் செலவிடுபவர்களாம்; இந்த அவர்கள் வந்து உட்கார்ந்துகொண்டு ஒருத்தி முன் இன்னொருத்தி தலையை விரித்துப் போட்டுக்கொண்டு பேன் குத்துவானேன் என்கிறார்; இதைவிட வேறு வேலையில்லையா—சீப்புக்கொண்டு சீவி விட்டால் எல்லா பேன்களும் வந்துவிடுகின்றன—பேன் குத்திக் கொண்டே அந்த இந்த வீட்டுச் சங்கதிகளையும் ஊராரின் கதைகளையும் மெல்லுவானேன் என்கிறார். அது நல்ல சகவாசமல்லவென்றும், படித்தறிந்த பெண்களுடன் பழகவேண்டுமென்றும், படிப்பு வாசனையுள்ளவர்கள் இப்படிக் கூட்டம் போடார்களென்றும், இவ்விதக் கூட்டத்தில் அவர்கள் சேரவேமாட்டார்களென்றும், நன்கு கற்ற சுந்தரிகள் ஒன்று கூடினால் அவர்களின் பேச்சுகளே வேறு விதமாய் வித்தியானந்தமாய் இருக்குமென்றும், அவ்விதமான நிலையில் உன்னைப் பார்த்து நான் சந்தோஷப்பட ஆசைப்படுகிறேனென்றும், வீண் கூட்டம் போடுவதைவிட, நல்ல புஸ்தகங்கள், பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவோ சிலாக்கியமென்றும், படிப்பிலே ருசி கண்டுவிட்டவர்கள் இரவிலும் கூட வெகுநேரம் வரையில் தூங்காமல் வாசித்தபடி அதிலேயே ரமித்துப்போய் விடுவார்களென்றும், எவ்வளவு பொழுது இருந்தாலும் அவர்களுக்குப் போதாதென்றும், நீ ஏன் அப்படி ஆகக் கூடாதென்றும் எப்போது பார்த்தாலும் சொல்லிச் சொல்லிப் பெரிய தொந்தரை கொடுக்கிறார். இது பெரிய ஹிம்சையாக இருக்கிறது. போதும் போதும், இந்தத் திட்டுகள் வாங்கி நான் படும் பாடு!

**சரஸ்வதி**:—இது ஒரு திட்டா? இந்த மாதிரி என்னை என் வீட்டார் வைதால் எவ்வளவோ சந்தோஷப்படுவேனே. உனக்கு நல்லதுதானே அவர் சொல்லுகிறார். உன் க்ஷேமத்தையும் சுக வாழ்வையும் கோரியே அவர் பேசுகிறார். இது உனக்கு ஒரு ஹிம்சையாக—திட்டுகளாக எப்படித்தான் தோன்றுகிறதோ தெரியவில்லை.

**சந்திரா**:—சரி, சரி, நீயும் அவருடன் சேர்ந்துகொண்டு தாளம் கொட்ட வந்துவிட்டாயோ? இனி நீயும் எனக்கு ஒரு புருஷனாகிவிடு. படித்த பெண்களெல்லாம் பத்திரிகைகள், புஸ்தகங்கள் வாசித்தபடியே இருக்கிறார்களாக்கும். அவர்களிலேயே வெகுபேருக்குப் பத்திரிகையென்றாலே இன்னதென்று தெரியாது. எல்லா வீடுகளுக்கும் பத்திரிகைகள் வருவதாக ஏற்பட்டுவிட்டால், பாவம், தபால்காரன் பெரிய மூட்டைகளைச் சுமந்துகொண்டு வரும்படியாக நேர்ந்துவிடும். அப்படியில்லா

மல் இருப்பது அவனது அதிர்ஷ்டந்தான். பத்திரிகை, பத்திரிகை என்று அடித்துக்கொள்கிறாயே? அதில் என்ன 'மண்ணாங்கட்டி' இருக்கிறது? ஊர் வம்புகள்தான் மலிந்து கிடக்கின்றன. அவற்றைத் தெரிந்தாலென்ன? தெரியாமற் போனாலென்ன?

**சரஸ்வதி:**—அப்படியா நினைத்துவிட்டாய்? இந்த வீட்டிற்கு எவ்வளவோ பத்திரிகைகள் வருகின்றனவே; அவற்றையெல்லாம் நீ படிப்பாயென்றல்லவோ எண்ணியிருந்தேன். நீ எதையும் வாசிப்பதில்லையா?

**சந்திரா:**—என் வீட்டாருக்குப் பத்திரிகைப் பைத்தியம் அதிகம். சம்பாதிக்கிற பணத்தில் கால்பாகம் இதிலேயே பாழாய்ப்போகிறது. நாலு பீரோக்கள் நிறைய புஸ்தகங்களை அடுக்கி வைத்திருந்தும் அது போதாதாம்; இன்னும் புஸ்தகங்களை வாங்கி வாங்கிச் சேர்த்தபடியே இருக்கிறார். நேற்று நூறு ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்து "ஜநவிநோதிநி" என்ற பத்திரிகையின் ஒன்று முதல் இருபத்தைந்துவரையில் உள்ள வால்யங்களை வாங்கிப் பீரோவில் அடுக்கிவிட்டுத் தலை கால் தெரியாமல் துள்ளிப் பரவசப்பட்டு, இந்த இருபத்தைந்து வால்யங்களும் கிடைக்கொணாத மகா பெரிய ஆஸ்தியென்று சொன்னார். அவற்றை எனக்காகவே வாங்கினாராம். நான் அவற்றை முழுதும் வாசித்தால் மஹா பெரிய பண்டிதையாகி விடுவேனாம். அந்த நூறு ரூபா இருந்தால், பவுன் பதின்மூன்று ரூபாய்க்கு விற்கிறதற்கு எழு எட்டு பவுனில் ஒரு நகையைச் செய்து போட்டுக்கொள்ளலாம்.

**சரஸ்வதி:**—ஐயோ! சந்திரா! உன் புத்தியென்ன இப்படிச் சூன்யமாயிற்று? நீ படித்த பெண் என்பதற்குக் கொஞ்சம் கூட அடையாளத்தைக் காணோமே. எவ்வளவோ கல்வி கற்ற பெண்கள் எழுத்து வாசனையற்றவர்களுக்கும், படித்திருந்தும் புஸ்தக ருசி தெரியாதவர்களுக்கும் வாழ்க்கைப்பட்டு அலறுகிறார்களே. உன் பாக்கியவசத்தால் உனக்கு உத்தமமான பதி வாய்த்திருக்கிறார். ஒரு பெண்ணின் கடமை தன் கணவரை எல்லாவற்றிலும் திருப்தி செய்வதாம். திருப்திகரமான—சந்தோஷமான—அமைதியான—மிக மிக விரும்பத்தக்க வாழ்க்கையில் தாம் இருப்பதாக அவர் நினைத்துக்கொள்ளும்படி அதற்கேற்றவாறெல்லாம் நடந்துகொள்வதே ஒரு உத்தமமான மனைவியின் பெரிய வேலையாகும். அவர் உன்னை என்ன அப்படித் தகாதது செய்யும்படி சொல்லுகிறார்? புஸ்தகங்கள், பத்திரிகைகள் படிக்கும்படி தானே சொல்லுகிறார். தன் கணவனுக்காக நெல்லு குத்தி அன்னம் போடும் பெண்களில்லையா? அதை விடக் கஷ்டமா இந்தப் படிக்கிற வேலை? படிக்குந்தோறும் பரவச இன்பம் பொங்கி எழும் ஆநந்தக்கடலாயிற்றே. வித்தியா இன்பத்திலும் சிறந்ததோர் ரம்மியம் எங்கேயிருக்கிறது? நீ என் இப்படி வீணாகக் கெட்டுப்போகிறாய்? உன்னுடைய அஞ்ஞானம் எப்போது தொலையுமோ?

**சந்திரா:**—பேஷ்! நீ இப்போது என் பர்த்தாவின் ஸ்தானத்தைச் சரியாக வகிக்க ஆரம்பித்துவிட்டாயே. என் கணவரைப்போலவே நீயும் நன்றாகத் திட்டத் தொடங்கிவிட்டாய். அவர் திட்டுகிற தோரணையிலேயே உன் திட்டுகளும் இருக்கின்றன. ஆனால் உன் திட்டுகள் எனக்குக்

கசக்கவில்லை. உன் வீட்டாரும் என் வீட்டாரும் கூடிக்கொண்டு என்னென்னவோ தர்க்கங்களெல்லாம் செய்து, ஒருவரையொருவர் மீறிப் பேசிக்கொண்டு சிரித்தபடியே குதிக்கிறார்களே; அதைப்போல் நம்மிருவரின் சம்பாஷணைகளு மிருக்கின்றன.

சரஸ்வதி :—அவர்கள் இருவரும் பேசிக்கொள்வதைப் பார்த்தால் வெளியில் இருப்பவர்களுக்கு ஏதோ சண்டை போடுவதுபோல் தோன்றும். ஆனால் அவர்களுக்குள் பரவசப்பட்டுப் போய் அநுபவிக்கும் வித்தியா இன்பத்தைப்பற்றி மற்றவர்களுக்கு என்ன தெரியப்போகிறது? படித்த பெண்கள் கூடிப் பேசுவதற்கும், படியாத பெண்கள் கூட்டம் போடுவதற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாஸம் இருக்கிறது. நீ படியாத பெண்களுடனேயே ஸதாகாலமும் பழகி வருவதனால், நீ கல்வி கற்ற காரிகையா யிருந்தும், உன் அறிவு மழுங்கிப் போய், உன் பர்த்தாவின் புத்திமதிகளை அலக்ஷியம் செய்யத் தலைப்பட்டுவிட்டாய். இந்தப் படியாத பெண்கள் சொல்லிக் கொடுப்பதெல்லாம் பெரும்பாலும் துர்ப்போதனைகளே. பர்த்தாவை மீறி நடக்கும்படி கற்பிப்பார்கள்; கணவனுக்குத் தெரியாமல் வெளி வியாபாரங்கள் வைத்துக்கொள்ளச் செய்வார்கள்; வீட்டுக்காரருக்குத் தெரியாமல் நகை பணம் இரவல் கடன் வாக்கிப்போய் தலையில் சட்டியைக் கவிழ்ப்பார்கள்; புருஷனுக்குத் தெரியாமல் துட்டு சேர்த்து வட்டிக்கு விடச்சொல்வார்கள்; வீண் ஊர் வம்புகளில் பொழுதைக் கழிப்பார்கள். இதைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் தெரியாது. அவர்கள்மீதும் வஞ்சனையில்லை; அவர்கள் அறிந்து வைத்தது அவ்வளவு தான்.

சந்திரா :—படித்த பெண்களெல்லாம் நல்லவர்களாய்விடார்கள், படிக்காதவர்கள் எல்லோருமே கெட்டவர்க ளாகிவிடமாட்டார்கள்.

சரஸ்வதி :—இப்போது நீ சொல்லியது சரியான தர்க்கம். அதை நான் எதிர்த்துப் பேசவில்லை; சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்கிறேன். படியாதவர்களே நம்மவர்களில் வெகு பேர். அவர்கள் ஆதிமுதல் ஏற்பட்ட பரம்பரை ஞானத்தாலும், இயற்கையிலேயே அமைந்துள்ள பெண் தன்மையாலும் தங்களின் வீட்டாருக்கு உட்பட்டு நடந்துசம்சார பாரத்தை ஏற்று எவ்வளவோ அழகாயும் அமரிக்கையாயும் குடித்தனத்தை நடத்தியிருக்கிறார்கள்; நடத்தியும் வருகிறார்கள். அவர்களுக்கு சுபாவத்திலேயே அமைந்த பெண் தன்மையின்படி அவர்கள் நடந்து செல்வதில், இன்னும் அவர்களுக்கு வித்தியாவைபவமும் கூடியிருந்தால் இன்னும் அதிகமாக அவர்கள் பிரகாஸிப்பார்களல்லவா?

சந்திரா :—அதை நான் ஒப்புக்கொள்கிறேன். படிக்காதவர்களுக்கும் படித்தறிந்த பெண்களுக்கும் எப்போதுமே எதிலும் பேதம் ஏற்படத்தான் செய்யும். என்னைப் படியாத மௌடீகமாய் வைத்துக்கொண்டாலும் நன்கு கற்ற கல்விமானின் கட்டழகியாய் நான் இருப்பதால் என்னை நீ கௌரவித்தே பேசவேண்டும். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுமல்லவா? என் பர்த்தாவின் வித்யா மணம் என்னிடத்திலும் கொஞ்சமாவது வீசக்கூடுமன்றோ? அவர் போகவேண்டிய விசேஷத்திற்கு அவருக்குப் பதிலாக நான் சென்றால், அவருக்குள்ள மரியாதைகளெல்லாம் எனக்கும் செய்து கௌரவிக்கிறார்களல்லவா?

சரஸ்வதி :—என் கண்ணே! உன்னை நான் ஒருபோதும் தாழ்வாக எண்ணேன். என்ன இருந்தாலும் படித்தவள் படித்தவள் தான். படியாதவள் படியாதவளே. நீ படித்த பெண்மணி யென்றுதான் உன் வீட்டுக்கு அடிக்கடி வருகிறேன். ஆனால் பேசத் தருணம் வாய்க்கவில்லை. எப்பொழுது பார்த்தாலும் பெண்கள் கூட்டமே நிறைந்திருந்ததால், அவர்களுக்கு இடையே இருந்துகொண்டு வித்தியா ஸம்பந்தமாய் உன்னுடன் பேசுவது சாத்தியப்படாதென்று மௌனமாகச் சென்று விடுவதாயிருந்தேன். இன்றுதான் எனக்குச சமயம் கிடைத்தது. உன்னுடைய தவறான எண்ணங்களெல்லாம் தெரிந்தன. இனி உன்னைத் திருத்தி உன் கணவரைப்போலவே பண்டிதையாக்கிவிட முயலுகிறேன்.

சந்திரா :—நீ பேசுவதைக் கேட்பதற்கு எனக்கு வெகு பிரியமாய் இருக்கிறது. இத்தகைய நல்ல சொற்களை என் ஸ்நேகிதிகள் பேசுவதேயில்லை. நீ இலக்கணமாய் வசனிக்கிறாய். அவர்கள் இலக்கணம் என்பதையே இன்னதென்று அறியார்கள். நாளை முதல் அந்தக் கூட்டத்தை விட்டுவிடுகிறேன். அந்தப் பெண்கள் என் வீட்டுக்கு வருகிற நேரத்தில் நான் இங்கு இல்லாமல் உன் வீட்டிற்கு வந்துவிடுகிறேன். சில தினங்களுக்கு அவர்கள் வந்தலைந்து என் புத்தி மாறிவிட்டதென்றும், உன்னோடு சேர்ந்து கெட்டுப்போய்விட்டேனென்றும் தெரிந்துகொண்டு என் சகவாசத்தை ஒழித்துவிடுவார்கள். நான் உன்னோடு சேர்ந்திருப்பதை என் பர்த்தா அறிந்தால் வெகு சந்தோஷப்படுவார்.

சரஸ்வதி :—இப்போது என் வழிக்கு வந்தாயா? முதலில் நீ சொல்வதுபோல் அந்த 'விநதா கோஷ்டி'யிலிருந்தும் விலகிக்கொள்ளப் பார். நாளை முதல் மத்தியானத்தில் என் வீட்டுக்கு வந்துவிடு. இப்போது "ஆநந்த குணபோதினி" என்று ஒரு நூதன மாதப் பத்திரிகை வந்திருக்கிறது. அதிலுள்ள விஷயங்களெல்லாம் பெண்மணிகளுக்கென்றே அதி சுலப நடையில் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு எழுதப்படுகின்றன. அதைத் தொடர்ச்சியாக நீ வாசித்துவந்தால் நாளடைவில் நீ பெரிய மேதாவியாகிவிடுவாய். நீ பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு புஸ்தகங்களையே தொடவில்லையோ?

சந்திரா :—பள்ளிக்கூடம் போய்வருவது எனக்கு எவ்வளவோ பிரியமாயிருந்தது. உபாத்தியாயனி அம்மாளைக் கண்டால் எனக்கு உயிர். எப்போதும் அந்த அம்மாளுடன் சுற்றிக்கொண்டிருக்கவே ஆசை. பையன்களுக்குத்தான் உபாத்தியாயரைக் கண்டால் நடுக்கமே தவிர, சிறுமிகளுக்கு அப்படியில்லை. நான் பெரிய பெண்ணாய் விடுவேனென்று என் பெற்றோர்கள் என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதை நிறுத்திவிட்டார்கள். உபாத்தியாயனி அம்மாளை விட்டுப் பிரிந்ததற்காக எவ்வளவோ அழுதேன். அதற்குப் பிறகு எந்தப் புஸ்தகத்தையும் நான் தொடவில்லை. பூவேலை செய்வதிலும், ஆர்மோனியம் கற்பதிலும் மற்ற சிறுமிகளுடன் கூடிக்கொண்டு பொழுது போக்குவதிலுமே என் காலம் கழிந்தது. எனக்கு விவாகமாகி இங்கு வந்த பிறகும் அப்படியே பொழுதைப் போக்கினேன். இன்று உன்

னுடன் பேசப் போய்தான் வித்தியா இன்பம் என்பது ஒரு தனி இன்பமென்றும், அதில் பொழுதுபோவதே தெரியாமல் வெகு உத்ஸாகமாய் உல்லாஸமடையலா மென்றும், அறிவுக்கு அது வெகு நல்ல உணவென்றும் தெரிந்துகொண்டேன்.

**சரஸ்வதி:**—சிறுமிகளில் வெகு பேர் உன்னைப்போலத் தான் பள்ளிக் கூடத்தை விட்ட பிறகு புஸ்தகங்களையே தொடாமற்போகிறார்கள். அதனால் அவர்கள் எத்தனை வகுப்புகளில் உயர்ந்து வாசித்திருந்தாலும், பின்னுக்கு அபிவிர்த்தி யென்பதே இல்லாமல் அன்று கண்ட நிலையிலேயே இன்றைக்கும் இருந்துவிடுகிறார்கள். வெகு பேர் தங்கள் பள்ளிப் படிப்பைக்கூட மறந்தும்போகிறார்கள். பெண்கள் பாடசாலையில் படிக்கும் காலம் வெகு சொற்பம். அந்த சொற்பத்தைப் பிறகு வீட்டிலிருந்தும் பயின்று விருத்திசெய்து கொள்ளாமற்போனால் படித்தும் பயனென்ன? இதைப்பற்றி நாளை என் வீட்டுக்குத் தவறாமல் வா, நன்றாய்ப் பேசலாம்; 'அவர்' வருகிற நேரமாய்விட்டது; இனி உனக்கும் வேலை, எனக்கும் வேலை; போய்வரட்டுமா?

**சந்திரா:**—இந்தா தாம்பூலம் போட்டுக்கொள். சரஸ்வதியாகிய உன்னோடு நான் சேர்ந்தால் ஏன் சரஸ்வதி போலாகக்கூடாது? சுகமாய்ப் போய் வா. நாளை மத்தியானம் அவசியம் வருகிறேன்.

**சரஸ்வதி** தாம்பூலம் போட்டுக்கொண்டு சந்திராவிடம் அன்புடன் விடைபெற்றுத் தன் இல்லம் சென்றாள்.

(தொடர்ந்து வரும்.)

---

"லோகோபகாரி"ப் பத்திரிகையின் அபிப்பிராயம்:—சென்னையில் திருவாளர் தி. ராஜகோபால் முதலியாரால் வெளியிடப்படும் ஆனந்த குண போதினி என்ற மாத சஞ்சிகையின் முதல் இலக்கம் வரப் பெற்றோம். ஸ்ரீமான் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் ஆசிரியராவார். ஸ்ரீமான் நாயுடு பத்திரிகைத் தொழிலில் நீண்ட அநுபவம் பெற்றவர். இந்த முதல் இலக்கத்தில் பல அரிய கட்டுரைகள் வெளியாயிருக்கின்றன. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும். (20-5-26)

| | | |
|---|---|---|
| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப் பிரதாபன்**<br>***(Registered.)*** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |


# எதிலே குறைச்சல்? என்னத்திலே தாழ்த்தி?



என் விகட உலகத்தின் குடி படைகளே! அதிசயகுண திடவாலிப சுகுமாரர்களே! காளைப்பருவச் சந்திரகாந்த தீரர்களே! ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நோட்டம்—குறை சொல்லும் ஒய்யார சிங்கார கம்பீரர்களே! என் விகடக் குழாங்களே! சென்ற பத்திரிகையில் விகடப் பிரதாபனாகிய நான் பார்வதி பரமசிவத்தை அண்டத்திலே கண்டதும், உடனே என் கேள்வி நீண்டதும், அதற்கு அவர்கள் விண்டதும், பிறகு நான் சமாதானம் கொண்டதும் கொட்டி யளந்தேனல்லவா? அத்துடன் அவர்களை விட்டுவிடவில்லை. உறவு-நட்பு-விசுவாசம் உள்ள இடத்திலே உள்ளத்தி லுள்ளவற்றை யெல்லாம் கொட்டி எவ்வளவுவேண்டுமானாலும் பேசலாமல்லவோ? அன்பு என்பது ஒன்றுமட்டும் இருந்தால் எத்தனைய பொல்லாங்கான சொல்லும் ஒரு குற்றமாகக் குறைச்சலாகப் படாதன்றோ? பரமசிவம் படியளக்கிற வைபவப் புராணமெல்லாம் கேட்டுவிட்டு, ஐயனே! அரசே! அப்பனே! இக்காலத்துக் குடி ஜனங்கள் படும்பாட்டிற்கு என் இறங்குவதில்லையோ?— முன்னாளில் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து வெளிக்கு ஏழைகள்போல் காட்டி உள்ளுக்குள் வெகு புஷ்டியாக வாழ்ந்தார்கள்; இந்நாளிலோ உள்ளுக்குள் ஒருபசையுமின்றி வெளி டம்பமினுக்காய் வெள்ளையுஞ் சள்ளையுமான ஆரவாரமாய் எல்லாக்குடும்பங்களும் இருந்துகொண்டு ஓலமிடுகின்றனவே—ஜீவனார்த்தம் ஏர்படுவதே வெகு வெகு பாடாய் முடிந்திருக்கின்றதே—வரவு வருகிறதோ, உண்டோ இல்லையோ வீட்டுக்குச் செலவு எவ்விதமும் வாங்கிக் கொடுத்தாகவேண்டி யிருக்கிறதே—வயிறு கஞ்சிக்கு அழ, கொண்டை பூவுக்கு அழ என்பதுபோல வீட்டுக்காரன் இன்றைய செலவுக்கு எப்படியடா வழி என்று ஏக்கம் கொண்டு உட்கார்ந்து தீராவிசாரத்திலே கிடக்க, அவனது பச்சைக் குழந்தைகளான பாலக பாலகிகள் எனக்கு அது இதுவேண்டும், உயர்ந்த திண்டி வகைகள் வேண்டும், காசுமாலை, ரத்தின ஜடையில்லை வேண்டும் என்று சொல்லிக் குதிக்க, வீட்டுக்குள் பொறுமையற்ற மனைவி எனக்கு என்ன வாரிக் கொடுத்துவிட்டாய் என்று கும்மாளம்போட, இதைத் தீர்ப்பதா, இன்றைக்குச் செலவுக்கு

வழிபார்ப்பதாவென்று தட்டுக் கெட்டுத் தடுமாற, இதுவும் ஒரு வாழ்வா ஐயனே! வராதவர்கள் எப்போதோ அபூர்வமாய் வந்து இரண்டு மூன்று நாள் இருந்து சென்றால், அவர்களோடு எல்லோரும் கூடித் தின்று விட்டு ஆன செலவுகளின் பழியை அவர்களுக்கே ஆனதாய் அவர்களின் தலையில் போட்டுவிட்டு, அந்த சொற்ப செலவையும் சமாளிக்க முடியாத குடித்தனமாகிப்போய், அந்தக் கடன் தீர்க்க வீட்டுப் பண்டங்களை விற்கவும், ஒரு ரூபாய் ஒரு அணு வட்டியில் நகைகளை அடகுவைக்கவுமாகி, இப்படியும் கண்ராவியான காலக்ஷேபமாய் ஜனங்கள் கதறுகிறார்களே—ஒரு செழிப்பையும் காணுமே—ஒரு புஷ்டியும் தென்படவில்லையே-நன்றாய் உடுக்க, உண்ண, நாலுபேருக்குச் செலவிட்டு நல்ல வாழ்வு நலமாய் வாழ வழி வகைகள் விழி வகைக்குத் தோற்றவில்லையே—நஷ்டம்வருவதேயன்றி லாபம் வந்து ஓங்குவது சூன்யமாகிவிட்டதுவே—எப்படியடா அப்பா சமுசாரம் நடத்துவதென்பதேதீராக்கவலையாகி இருக்கிறதே—வீட்டுக்காரன் விழித்துக்கொண்டுவாழுகிற இப்பொழுதே இப்படியானால், இனி அவன் காலை நீட்டிக்கொண்டு நோயும் பாயுமாய்ப் படுத்துக்கொள்ளும்போது, அவனால் நாலுகாசு வந்து சோற்றுப்பருக்கை தயாராக வேண்டிய நிலையிலுள்ள வீட்டின் பாடு அப்போது எப்படியாகிறது? படுத்தவன் மீண்டும் எழாமல் பரலோகம் கண்டுவிடுவதானால் அவனுக்குப் பிறகு அவன் காலையே சுற்றி அவனையே கதியாக நம்பிய அவன் பெண்டு பிள்ளைகள் போகும் வழி என்ன-அவர்களுக்குப் பிழைப்பு ஜீவனம், வயிற்றுக்கு வழி எப்படி, ஐயோ ஈசனே! — இதென்ன காலக் கொடுமையோ— அரிசி படி மூன்று பணமாய் முழிக்கிறது, ஐயையோ ஏழைகள் புழுவாய்த் துடிக்கிறது, இதற்கு நிவர்த்தி ஒன்றும் சொல்லக் கூடாதா?—என்று தாய் நாட்டின் முன்னாட் பெருமையும், இந் நாட் சிறுமையும் நீங்கள் அறியீர்களா?—

1. புன்னகையும் இன்னிசையும்
எங்கொளித்துப் போயினவோ?
இன்னலொடு கண்ணீர்
இருப்பாகி விட்டனவே!

2. ஆணெலாம் பெண்ணாய்,
அரிவையரெலாம் விலங்காய்,
மாண்பெலாம் பாழாகி
மங்கிவிட்ட தின்னாடே!

3. வீமாதி வீரர்கள்
விழிந்தெங்கு போயினரோ?
ஏமாறி நிற்கும்
இழிஞர்க ளிங்குள்ளாரே!

4. வேதவுபநிடத மெய்ந்
நூல்களெல்லாம் போய்,
பேதைக் கதைகள்
பிதற்றுவரின் னாட்டினிலே!

5. ஆதிமறைக் கீதம்
அரிவையர்கள் சொன்னதுபோ[ய்]
வீதி பெருக்கும்
விலையடிமை யாயினரே!

6. செந்தேனும் பாலும்
தெவிட்டிநின்ற நாட்டினிலே
வந்தே தீப்பஞ்சம்
மரபாகி விட்டதுவே!

7. மாமுனிவர்கள் தோன்றி
மணமுயர்ந்த நாட்டினிலே,
காமுகரும் பொய்யடிமைக்
கள்வர்களும் சூழ்ந்தனரே!

8. பொன்னுமணியும் மிகப்
பொங்கிநின்ற இந்நாட்டினிலே
அன்னமின்றி நாளும்
அழிவார்கள் எத்தனைபேர்?

உய்யும் வழி தான் என்னவோ? உள்ளம் உவந்து உதவிடவொண்ணாதோ? சாகும் வரையிற் சஞ்சலம் அணுகில் சந்தோஷிப்பது

எந்த நாள்! நாங்கள் படும்பாடு சிவமே, உலகோர் நவிலும் பஞ்சு தான் படுமோ, சொல்லத் தான் படுமோ, கான்படு கண்ணியின் மான் படுமாறு கலங்குகின்றோம், என் படு கின்றாய் என்று இரங்காவிடில் என் செய்வோமே—என்று விகடனாகிய நான் கண்ணீர் அருவியாகப் பெருக உள்ளம் தடுமாற, உடல் சோர ஓ வென்று அலறி யழுது பரமசிவத் தின் பாத மலர்களில் விழுந்து பணிந்து சிந்தை வெந்து செந்தண லாகி நின்றேன்.

நின்ற விகடனைப் பரமசிவம் தூக்கி எடுக்க, பார்வதி மாதா தன் கண்களைத் துடைத்துக் கொள்ள, அப்பால் பரமசிவம் என்னை நோக்கி, விகடப் பிரதாபா! உலகம் நீ நினைக் கிறதுபோ வில்லை, உலகம் நினைக் கிற மாதிரியும் நீ தெரியவில்லை. வீட்டுக்கு வீடு வாசற்படிதான், எங் கும் மண் ணடுப்புத் தான், அந்தப் பழய நாளிலும் அப்படித் தான், ஔவையும் கூழுக்குப் பாடியே, காளமேகமும் சாலவறிஞனே, இரட் டைப் புலவர்களும் வறுமையில் ஈடில்லாதவர்களே, கம்பனும்—"நெற் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று வயிறு எரிந்து பாடினன். அந்த நாளில் செலவிட வகை யில்லாததால் பணம் சேர்ந்தது; இந்நாளிலோ பல செலவு களில் கை நனைத்துக் கொண்டதால் வந்த பணம் போனவழி மாயமாய்த் திண்டாட்ட மாகிறது. எதிலே குறைச்சல்? என்னத்திலே தாழ்ந்தி? என்று எடுத்தாரையா கதையை!

விகடப் பிரதாபா! கேள். எதிலே குறைச்சல், என்னத்திலே தாழ்ந்து போயிருக்கிறது? முன்னைப் பார்க்கிலும் கல்யாணங்கள் குறைந்து போயிருக்கிறதா? அதன் செலவுகள் அதிகமே யன்றி முன்னிலும் ஏதா வது தாழ்வுபட்டு நிற்கிறதா? சாவு எடுக்கிற வேடிக்கைகள் குறைவா? அதிலே வாஷிங்டன் லேட், பத் தெட்டு விதக் கொட்டுத் தாளங்கள் குறைச்சலா? கூத்துகள் குறைந் ததா? கொட்டாய் பந்தல் பாட்டு கள் குறைந்ததா? பயாஸ்கோப் முதலிய தமாஷாக்கள் ஆயிரம் ஆயிர மாய்ப் பணம் வாருகிறது குறைந் ததா? அதற்கு ஐயாமார்களும், அம்மாமார்களும், நாகரீக புனிதர்க ளும், புனிதவதிகளும், வாலிபர்களும் துட்டுகளைக் கொண்டு போய்க் கொட்டுவதில் ஏதாவது குறைச்சலா? மோட்டார் வண்டிகளில் உல்லாச மாய் உலாவுவதில் குறைச்சலா? தலைப்பாகை டம்பங்களில் குறைச் சலா? ஆங்கில பிரபுக்களாய் அலங் காரம் செய்து கொள்வதில் குறைச் சலா? பைசிக்கல்கள், மோட்டார் சைக்கல்கள், ரிக்ஷா வண்டிகள் சவாரி குறைச்சலா? டீ—காப்பி— கிளப்புகள் குறைச்சலா? அந்த அனு சார ஆபாஸ 'எச்சில் சந்தை'யிலே புகுந்துகொண்டு பலபட்டரை ஜாதி களும் கண்டதை 'பிண்டதை' மொக்கு மொக்கென்று மொக்கித் தள்ளுகிற திண்டி போரத்திலே குறைச்சலா? மதுபான வகைகள் விலை தூக்கா யிருந்தாலும், அதிலே கொண்டுபோய்க் கொட்டுகிற துட்டு பணங்களுக்குக் குறைச்சலா? படி அரிசி ஆறணு ஏழணு, காய் கறி இரட்டை விலை, பல சரக்கு சாமான் கள் கிரயம் ஒன்றுக்கு மூன்று விலை யாய் ஏறி யிருந்தாலும் பணம் போட்டு வாங்கிச் சாப்பிடுவதிலும், விசேஷ காலங்களில் ஏராளமாய் வாங்கி வீண் விருந்துகள் நடத்திக் கிதாப்பு பெறுவதிலும் குறைச்சலா? துணிமணிகள் ஏகப்பட்ட விலை உயர்ந்துபோ யிருந்தாலும், நைஸ் நைஸாக உடுத்திக் காட்டுவதில் ஏதா வது குறைச்சலா? பணம் இல்லை

பணம் இல்லையென்று பிறருக்குச் சொல்லிக் கொண்டே தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் தன்னவர்களாய் வீட்டுக்கு வந்தவர்களுக்கும் செலவுகள் செய்வதில் குறைச்சலா? ஒப்பாரி உறவுக்கு ஒரு பிடியரிசி வாரிப் போட்டுவிட்டு, உள்ள உறவுக்கு உவக்கும்வாறெல்லாம் செய்து உபசரிப்பதில் குறைச்சலா? புதுபுது விதமான நகைகளுக்கும், விதம் விதமான சிங்காரங்களுக்கும் குறைச்சலா? காது சில்லரை, மூக்கு சில்லரை, கை காப்பு, கால் கொலுஸு, ஒட்டியாணம் இவைகளை யெல்லாம் வாங்கி வாங்கிப் பணத்தைக் கொட்டிச் சிங்காரம் செய்து கொள்ளுகிற அந்த நகை நட்டு பேரங்களுக்குக் குறைச்சலா? தையற்காரர்கள், நாவிதர்கள், வண்ணார்கள், பூக்காரர்கள் செலவு குறைச்சலா? வாசனை சோப்புகள், சாந்து, ஜவ்வாது, கஸ்தூரி, ஓட்டோ மோஹினி வாசனைகள் இவைகளுக்குக் கொட்டிக் கொடுப்பதில் ஏதாவது குறைச்சலா? முன்பு ஆறு ரூபாய் சம்பாதித்தவன் இப்போது இருபது ரூபாய் சம்பாதித்து, முன்பு ஆறுரூபாய்க்குவாங்கியவற்றை இப்போது இருபதுரூபாய்க்கு வாங்குவதில் குறைச்சலா? கோவில் திருவிழாக்களிலே சாமிக்காகவு மல்ல, பக்திக்காகவு மல்ல, சிலாக்கியத்துக்காக அந்த ஜோடிப்பு, இந்த ஜோடிப்பு என்று வேடிக்கைகள் எல்லாம் காட்டுவதில் குறைச்சலா? திருப்பதிக்குப் போவதில் கோவிந்தா கோவிந்தா என்று கோவிந்தம் போட்டுக் கொண்டு இரண்டு தாசரிகள் தப்பைத் தாளம் கொட்டிக் கொண்டு போகிற வழக்கம் போய், இப்போது சென்னையிலே பாண்டு வாத்தியமாய் அதுவே ஒரு சிறு கல்யாணமாய் ஆரவாரம் காட்டுவதில் குறைச்சலா? மொஹரம் பண்டிகையில் தலை காய்ந்தவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு இரண்டு கால் புலிகளாய் நடித்தது போய், இப்போது புலியரசுகளாய்ப் பாண்டு வாத்தியங்களோடு புறப்படுவதும், அந்த செலவுகளுக்கும் அதற்கு மேற்பட்ட வருமானத்திற்கும் வழி வகைகள் வைத்துப் பணம் துணிமணிகளை எண்ணாது கொடுத்து விடுவதில் குறைச்சலா? ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற மற்ற நாட்களிலும் சாராயம் கள்ளின் மகத்துவத்தில் அடி தடிகளிலே ஏதாவது குறைச்சலா? அந்தச் சண்டைகளிலும், கோர்ட்டு விவகாரங்களிலும் சர்க்காருக்குக் குவியும் பணங்களிலே குறைச்சலா? குஜிலிக் கடை, 'ஈவினிங் பஜார்,' ஜவுளிக் கடை, மார்க்கட்டு, பாத்திர சாமான்கள் கடை, வெளி நாட்டுப் பண்டங்களை குவிந்துள்ள ஷாப்புகள் இவற்றின் வியாபாரங்களுக்குக் குறைச்சலா? முக்காலணா தந்து வண்டி யேறாமல் மூன்று மைல் காலால் நடந்த நாள் போய், அந்த மூன்று மைலுக்கே மூன்றணா தந்து ஏறிச் செல்வதில் குறைச்சலா? மூலை முடுக்கில் இருந்தவர்க ளெல்லாம் ஜனத் தலைவர்களாக விருப்பங் கொண்டு தங்கள் பெயர்களை விளம்பரப் படுத்துவதில் குறைச்சலா? சட்ட சபைக்குப் போய் ஜனோபகாரம் செய்யப் போவதாய்த் தமுக்கு அடித்துக் கொண்டு அதன் மூலமாய்ப் பணம் வாரி தன் வீடும் தானுமாய் உல்லாசத்தில் சிலாக்கியப் படுவதில் குறைச்சலா? ஓட்டு முழக்கங்களுக்குக் குறைச்சலா? கட்சி பேதப் பிரிவினைகளுக்குக் குறைச்சலா? மத்யான நேரத்தில் கால் கொப்பளிக்கும் வெயிலில் ஏழைகள் தங்கள் வயிற்றுப்பாட்டுக்கு இளநீர், நொங்குகள் விற்க, அவர்களை உதறிவிட்டு, காப்பிக் கடைகளுக்குள் புகுந்து உஷ்ணத்துக்கு உஷ்ணமென்று சுடச்சுடப் பருகி உள்ள

வேர்வையோடு பின்னும் வேர்வை யாவதிலே குறைச்சலா? ஒருவன் பிழைப்பை ஒருவன் கெடுக்கத் துணிந்து போட்டி போட்டுக் கொண்டு, ஓராயிரம் ரூபாயை ஒன்றரை காசாக நினைத்துச் செலவிடுவதில் குறைச்சலா? பத்திரிகைகளில் போட்டி விளம்பரங்கள் போடுவதில் குறைச்சலா? ஏழையென்றும் பணக்காரனென்றும் கண்டு பிடிப்பதற்கில்லாமற் போவதில் குறைச்சலா? மருமகனுக்கு மாமியார் வீட்டிலே குறைச்சலா? ஏமாந்த மைத்துனன் வீட்டிலே ஆடம்பர அண்ணுத்தைகளின் ஆரவாரங்களுக்குக் குறைச்சலா? காலணு கார்டு அரையணு வாகியும் கடிதங்கள் எழுதுவதில் குறைச்சலா? துன்மார்க்க விரயங்களுக்குக் குறைச்சலா? பத்து ரூபாய் உத்தியோகத்துக்கு ஐம்பதுரூபாய் உடுப்பு உடுத்துவதில் குறைச்சலா? உள்ளதை மனதோடு உவந்து உதவாவிட்டாலும் வாய் உபசாரத்துக்குக் குறைச்சலா? அக்கிரமமாய் ஆடு கோழிகள் பலியிடுவதிலே குறைச்சலா? வரவு குறைந்தாலும் செலவுகளை மட்டும் இன்னும் பெருக்கிக் கொண்டு போவதிலே குறைச்கலா? ஈரைப் பேனுக்கி, பேனைப் பெருமாளாக்கி, பெருமாளைப் பெரிய பெருமாளாக்கி, சிறு சண்டையைப் பெருஞ் சண்டைகளாக முடிப்பதிலும், முடிபோடுவதிலும் குறைச்சலா? இந்த நாள் ஆண் பெண்கள் அடக்கமற்றுப் போய் வெகு வெகு சொட்டுப் பேச்சுகள், குத்து வார்த்தைகள் பேசக் கற்றுக் கொண்டிருப்பதிலே குறைச்சலா?

இதெல்லாம் இப்படி இருக்கட்டும், ஊரெல்லாம் என்னென்னவோ கஷ்டத்திலும் பாடுகளிலும் வறுமையிலும் இருக்கிற தென்கிறுயே விகடா! பணம் படைத்தவர்கள் தங்களின் சொந்த ஊர் ஜனங்களின் பட்டினி பசியைத் தீர்க்கத் தாங்கள் வைத்திருக்கும் பணம் காசுகளை தர்ம நியாயமாய் எடுத்துச் செலவிட்டு, ஊராரைக் காப்பாற்றுவதற்காகத் தெருத் தெருவுக்கு அரிசி-'தவிசி'-தர்மப்படி—காய் கறி புளி மிளகாய் முதலியவற்றிற்குத் தர்ம விலை—துணி மணிகள் தர்ம விலை—அன்னக்காவடி—தருமபந்தல்—அரிசிபடி தர்மம்—கைத்தொழில் ஸ்தாபனம், ஏழை எளியவர்களுக்கு பிழைப்புகாட்டி உதவுதல்—இன்னும் இவைபோல்வன பலவற்றைச் செய்து, ஆசாரவகைகளை காலத்திற்குத் தக்கபடி திருத்தி செலவிலே சுருக்கி நடத்தச் செய்து தங்கள் தேசத்தை க்ஷேமத்திலே வைக்கும்படி பார்க்கவேண்டியதை விட்டுவிட்டு, நான் சீமைக்குப் போகிறேன்—நான் இங்கிலாந்துக்குப் போகிறேன்—நான் லண்டனுக்குப் போகிறேன்—அங்குபோய் எல்லாவற்றையும் உருட்டி சுருட்டி புரட்டி ஒன்றும் விடாமல் சேரக் கட்டிக்கொண்டு வந்து விடுகிறேமென்று 50-ஆயிரம் 30-ஆயிரம் லக்ஷக்கணக்கான பணங்களை ஊர்பட்ட ஜனங்களிடத்தில் வசூலாக்கிக்கொண்டு கப்பல் செலவு, ரயில் செலவு, சீமையில் ஹோட்டல் செலவு, அங்கே பல விருந்து செலவுகளும் செய்துகொண்டு, அதைப் பத்திரிகைகளிலே பத்தி பத்திபாய் முழக்கிவிட்டு, ராய்ட்டர் தந்திகள் மூலம் உலகமெங்கும் தங்கள்பெயரை விளம்பரப்படுத்தி விட்டு, ஒன்றுமே தாங்கள் நாட்டுச் சங்கதியை சாதகப் படுத்தாமல் தங்கள் ஊர் திரும்புகிறுர்களே! அதில், அந்த செலவு இனங்களிலே ஏதாவது குறைச்சலா? எதிலே குறைச்சல்? என்னத்திலே தாழ்ந்தி?

இவைகளெல்லாம் முன்னைய காலங்களைவிட மிகவும் விபரீதமாகவும் ஜாஸ்தியாகவும் நடந்துகொண்டு

வரும்போது, ஊர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற தென்று எப்படிச் சொல்லவந்தாய் விகடா? ஊர் கஷ்டப்படுகிறுப் போலவா இவைகள் காட்டுகின்றன? போ போ பைத்தியக்காரா! மறுபடியும் இந்த மாதிரி எம்மிடம் சொல்லவந்தால், இன்னும் அநேக காரியங்கள் இருக்கின்றன—சங்கதிகள் இருக்கின்றன — அவைகளையெல்லாம் வெளியில் இழுத்துப் போட்டுவிடுவேன்; பேசாமற்போய் உன் வேலையைப்ப பார். ஏழைகள் அந்த நாளிலும் இந்த நாளிலும் எந்த நாளிலும்தான் கஷ்டப்படுகிறுர்கள். அவர்களின் கண்ணீரை யார் துடைக்கிறுர்கள்? எந்த ஏழை உறவினனுக்கு எந்தப் பெரிய பந்து ஒத்தாசை செய்கிறுன்? அவனவன் தன் காரியத்தில் கண்ணுய், பேச்சில் மட்டும் வெகு விசுவாசக் கொக்காய்த் தாளம் போடுகிறுன். பழயநாளில் பல குடும்பங்களை வைத்து ஆதரித்துப் பிழைப்பு காட்டிய நல்லோர்களும் வாழ்ந்தார்கள். இந்த நாளிலோ தங்கள் பெயர் விளம்பரப்படுகிற வழியிலே ஓராயிரம் ரூபாயை உடனே நன்கொடையாகக் கொடுப்பார்களே தவிர, அழுதுகொண்டு வயிறு ஒட்டிச் செலவுக்குத் திகைத்துத் தங்கள் வாசற்படியிலே காத்து நிற்கும் ஏழைகளுக்கு மிஞ்சின சண்ணும்பையாவது உதவுவார்களா? வெளியில் பெரியபேர்தான், உள்ளே பார்த்தாலோ அவ்வளவும் சுயநலமே, ஆபாஸக்களஞ்சியமே. நல்ல சிந்தை, உத்தம மனது, தயாள ஹிருதயம் எத்தனை பேருக்கு இருக்கிறது? எங்கோ லக்ஷத்தில் ஒன்றே. இந்த நிலையில் ஏழைகள் போகும் கதி என்ன? நான் அல்லவோ அவர்களின் கண்ணீரைத் துடைத்து, ஏதாவது அந்தந்த நாட்பொழுதுக்குக் கிடைக்கவைத்து, மானஸ்தனை மானம்விட்டுப் போகாதபடி காத்து, என் காலடிகள் பட்டுத் தேய்ந்த பாரதநாட்டையும் கால விதிவசத்தால் அது என்ன கேடுகெட்டாலும் அதன் பூர்வ கௌரவம் குன்ருதிருக்கும்படி செய்து காப்பாற்றிவருகிறேன். இந்த விஷயங்களை நீக்கிக் கொண்டு பார்த்தால் மற்றவர்களுக்கு எதிலே குறைச்சல், என்னத்திலே தாழ்த்தி? சிக்கனவாழ்வு வாழுகிறது தானே, பூர்வத்தில் இருந்தது போல் நடந்துகொள்கிறது தானே, மகாத்மா காந்தியின் நல்லுபதேசங்களைக் கேட்டு நல்ல வாழ்வு வாழக் கூடாதா? உங்கள் நாட்டிலே செய்த கதர் துணியை ஏன் உடுக்கக்கூடாதோ? இவைகளெல்லாம் தெய்வத்துக்கும், தெய்வ பயத்துக்கும், தர்ம நியாயத்துக்கும் மீறி நடக்கிற சங்கதிகள். அந்த சங்கதிகளுக் கேற்றபடி அவரவர்களின் கர்ம வினையை அநுபவிக்கட்டுமென்று நான் ஒதுங்கிக் கொள்ள வேண்டி யிருக்கிறதே த்விர, இன்னும் சில காலத்துக்குச் சீர்திருத்த மார்க்க மெதுவும் காண முடியவில்லை. நீ வீணுக தெய்வமே உன் கோயில் இடிய என்று எங்கள்மேல் குறை சொல்லாதே. நீயே எல்லாம் யோசித்துப் பார்—என்று என் 'மூஞ்சி'யிலே மொத்தி யனுப்பினுர் பரமசிவம்! நான் என் திருவாயை மூடிக்கொண்டு, உங்களைத் தேடிக் கொண்டு, வாடிக்கொண்டு வந்து உங்களிடம் எல்லாம் கொட்டிவிட்டேன். என்ன செய்யலாம்—காலப் போக்கு அப்படி இருக்கிறது—கடவுளின் கருணை இப்படி யிருக்கிறது. 'அதுவும் செய்யலாம், இதுவும்செய்யலாம், இல்லாததற்கு என்ன செய்யலாம்' என்று புதுக்கோட்டைத் திவான் ஒருவர் சொன்னதுபோல் இருக்கிறது சங்கதிகள், என் செய்வது? எதற்கென்று முட்டிக் கொள்வது?

# விநோதக் கொத்து

மானிடர்க்குப் பத்தில் ஒரு பங்கு ஸந்தோஷமுண்டென்று பல காவியங்கள் கூறுகின்றன. அவ்வாறாயின், மீதி ஒன்பது பங்கு ஸஞ்சலங்களும் சோதனைகளுமேபோலும். மனிதன் ஸந்தோஷமொன்றினால் மாத்திரம் தன் சோதனைகளின் உக்கிரகத்திலிருந்தும் ஒருவாறு தப்பித்துக் கொள்ளக் கூடும். அத்தகைய ஸந்தோஷத்தை யுண்டுபண்ணுவது எவ்விதமென்று ஓர் கேள்வி யுண்டாகலாம். அதற்கு விடையாவது; சிநேகிதர்களிடம் உல்லாஸமாய்ப் பேசி யிருத்தல், ஸந்தோஷமுண்டாகக் காரணமாயுள்ள பல புஸ்தகங்கள், பத்திரிகைகளை வாசித்தல், இவைகளும் இவைபோன்ற இன்னும் அநேகமுமுண்டு. ஸந்தோஷமென்றால் என்ன?—அதற்கு அடையாளம் யாது? வாய் விட்டு நகைத்தலும் புன்னகை கொண்டு பூரித்தலுமேயாம். உள் மனத்தின் பரவசத் தன்மையை வெளியில் எடுத்துக் காட்டுதலுக்கே 'நகைத்தல்' என்பர். ஒரு மனிதன் எவ்வளவு துக்கக்கடலில் ஆழ்ந்திருந்தாலும், எத்துணைக் கொடிய பிணியால் வருந்தினாலும் சரி; அவனுக்கு அடிக்கடி நகைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஸந்தர்ப்பங்கள் வாய்க்குமாயின், அவனைவியாதியோ, துக்கமோ அவ்வளவாகப் பாதிக்காதென்பது சாதாரண அநுபவம். ஒரு சிறிதேனும் அவற்றை அவன் மறந்து உல்லாஸப்படுதல் கூடும். ஆகவே, நகைச்சுவைக் கேற்ற சிறு சிறு ஸம்பாஷணைக் கொத்துகளை இங்கு தருகிறோம். நமது அன்பர்களில் எவரேனும் அவ்விதம் எழுதி யனுப்புவார்வார்களாயின் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

**மகா சபைப் பிரஸங்கம் :—**

மனைவி :—வரும் மகா சபைக்குப் பேச்சைத் தயார் செய்துகொண்டீர்களா?

கணவன் :—இன்னுமில்லை. என் சிநேகிதர் ஒருவர் எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் அதை முடித்ததும் நான் மனப்பாடம் பண்ணிக் கொள்வேன். அது வெகு நேரத்தை இழுக்காது. எனக்கு நல்ல ஞாபக சக்தியுண்டு.

மனைவி :—(தன் மனதுக்குள்) ஆனால் சொந்த மூளை யில்லையே?

***

**'ஓட்டு'த் தந்திரம் :—**

மனைவி :—பாங்கியில் அடகு வைத்திருக்கும் கடியார கொலுசைத் திருப்பித் தரும்படி நான்கு வருஷமாய்க் கெஞ்சி நிற்கிறேனே? அதைக் கவனியாமல் மகா தயாள புருஷர்போல் வெள்ள விபத்து நிதிக்கு எழுநூறு ரூபாய் நன்கொடை தொலைத்து வந்தீர்களே. அத்தொகையில் பாதி யிருந்தால் கடியார கொலுசைத் திருப்பி யிருக்கலாமே.

கணவன் :—அந்த நன்கொடையால் என் பெயர் விளம்பரமாகும். பல பத்திரிகைகளிலும் வரும். உன் கெடியார கொலுசைத் திருப்பினால் அந்தப் பெயர் வருமா?

மனைவி :—பெயர் வந்து ஆவதென்ன? இன்றைக்கு நம்மைக் கொண்டாடுகிறவர்கள் நாளைக்கு நாம் ஓட்டாண்டியானால் நம்மையே ஏளனம் செய்யத் தொடங்கிக் கொள்வார்கள்.

கணவன் :—நீ விஷயம் தெரியாமல் உளறுகிறாய். இந்த நன்கொடை காரணமாக என் பெயர் விளம்பரப்படுவதில், நான் சட்ட சபைத் தேர்தலுக்கு நிற்கும்போது ஜனங்கள் எனக்கே அதிகமாக ஓட் கொடுக்க வருவார்கள். நான் சட்ட சபை யங்கத்தினரானதும் பண வருவாய்க்கான வழி தேடிக்கொண்டு, இப்போது செலவிட்டதையெல்லாம் ஒன்றுக்குப் பல மடங்காக வட்டியும் முதலுமாக எடுத்து விடுவேன்.

மனைவி :—ஆனால், பொதுஜன நன்மைக்காகச் சட்ட சபை யங்கத்தினராவதாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்களே?

கணவன் :—அது எல்லாம் வெறும் பேச்சு. அப்படிச் சொல்லிக் கொண்டுதான் இந்த ஜனங்களை ஏமாற்றி சட்ட சபைக்கு ஏற வேண்டும். பிறகு நமது சொந்த நன்மையிலேயே கருத்தாயிருக்க வேண்டும். நான் கொடுத்த நன்கொடையின் ரகசிய அருத்தம் இப்போது உனக்குப் புலப்படுகிறதா? எல்லாம் உன் நன்மைக்காகவே தான்—உன்னைப் பொன் காய்த்த மரம்போல் ஆக்குவதற்கேதான் இவ்வளவுக்கும் பாடு பாடுகிறேன். 'ஓட்' தந்திரம் என்றால் அது என்ன சாமான்யமானதா?

***

பெரும்பான்மையான சங்கதி :—

இராமன் :—அவர் பெரிய தேசாபிமானி, வெகு ஜனோபகாரி. மனிதன் என்று இருந்தால் அப்படியல்லவா இருக்க வேண்டும்?

கோபாலன் :—அந்த உள் ஓட்டை உனக்குத் தெரியாதோ? பெரிய மனிதர்கள் என்போரில் வெகு பேர் நாலு பேர் கூடி மெச்சத்தகுந்த சங்கதிகளுக்குத்தான் பணத்தைக் கொடுப்பார்களேயன்றி, ஏழையென்று ஒருவன் வயிறு ஒட்டி வந்தால் அவனுக்கு ஒரு புதுக்கோட்டை அம்மன் காசு கூடத் தர மாட்டார்கள். பெயர் வெளிவராத ஒரு தர்ம விஷயத்துக்கு நாலு காசு கேட்டுப்பார். ஒரு போதும் கிடைக்காது.

இராமன் :—ஆனால், அவர்கள் செலவிடும் தொகையெல்லாம் பெரிய மனிதர்க ளாவதற்காகத் தானோ? உத்தம புருஷர்களே யில்லையா?

கோபாலன் :—இல்லாமலென்ன? இருக்கிறார்கள் எங்கோ இரண்டொரு பேர். ஆனால் பெரும்பான்மையான சங்கதி மேற்சொன்னபடி தான்.

***

மேனாட்டு நாகரீகக் கல்யாணம் :—

துரை :—கண்ணே! நீ நல்ல பதிவிரதை. நம்முடைய விவாகம் இன்று முடிந்தபடியால் இனி நாம் இருவரும் ஒன்றாய் இன்புற்றிருக்கலாம். நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

துரைசானி :—அக்கேள்வி எத்தன்மையதோ?

துரை :—நம்முடைய ஐரோப்பிய ஆசாரத்தின்படி கடந்த ஆறு மாத காலமாக உன் மீது காதல் கொண்டு அரும் பாடுபட்டு உன் மனத்தைக் கவர்ந்தேன். பன்முறை நான் கொஞ்சியும் கெஞ்சியும் ஒரு முறையிலேனும் நாம் இருவரும் மனோரம்யப்பட்டிருக்க நீ இடம் தரவில்லையே? அதனாலேயே நீ நல்ல பதிவிரதை என்று உணர்ந்தேன்.

துரைசானி :—நீர் என்னை நாடுமுன் ஆறு பெயர்கள் என் மீது காதல் கொண்டு என்னை அவசியம் விவாகம் செய்து கொள்வதாகக் கூற, நான்

அவர்கள் மனப்படி ரகசியத்தில் அவர்களுக்கு இன்பநாயகி யாயிருந்தேன். கடைசியில் விவாகம் செய்து கொள்ளாமலே என்னை மோசம் செய்து விட்டார்கள். நான் ஏமாறினேன். உமது விஷயத்தில் எதற்கும் இணங்காமல் நான் முன் ஜாக்கிரதையாக இருந்ததால் கல்யாண காரியம் சுலபத்தில் கை கூடிற்று.

***

முத்தம் அனுப்புதல் :—

ஒருவன் :—(எருமைகளை ஓட்டிக்கொண்டு போகும் பெண்ணைப் பார்த்து) அம்மா, உங்கள் தெருவில் இருக்கிற கனகாங்கியைத் தெரியுமோ ?

பெண் :—தெரியும். எதற்காகக் கேட்கிறீர் ?

ஒருவன் :—கனகாங்கிக்கு ஒரு முத்தப் பரிசு கொடுக்க வேண்டும். அதை உன்னிடம் கொடுத்தனுப்பட்டுமா ?

பெண் :—என்னைக் காட்டிலும் இந்த எருமைகள் முந்தி போய்ச் சேரும். அவைகளிடத்தில் உமது முத்தத்தைக் கொடுத்தனுப்பும்.

***

முட்டாள் பட்டம் :—

அவர் :—உமக்கு 'முட்டாள் முத்துத்தேவன்' என்று எப்படிப் பெயர் வந்தது ?

இவர் :—எவரேனும் ஒரு காரியம் புதிதாகச் செய்தால், அதைப் போலவே அடுத்த நிமிஷத்தில் நான் தயாரித்து விடுவதால்தான். நான் சுயமாக என் மூளையின் உதவிகொண்டு எதுவும் செய்வதில்லை யானதால் எனக்கு இந்தப் பெயர் கிடைத்தது.

***

குள்ளநரி தந்திரம் :—

நண்பர் :—அந்த நூலாசிரியருக்கு அவர் எழுதிய புஸ்தகத்துக்கு முழுத் தொகையும் கொடுத்து விட்டீர்களா ?

பிரசுர கர்த்தர் :—அவர் கேட்டது நூறு ரூபாய். பல சில்லரையாக நாற்பது வரையில் வாங்கியிருக்கிறார். அதற்குமேல் நான் தர முடியாது. அவ்வளவுதான் அந்தப் புஸ்தகத்தின் விலை.

நண்பர் :—அவர் அதற்கு ஒப்பாவிட்டாலோ ? நீர் நூறு ரூபாய்க்கு சம்மதித்துத் தானே வாங்கினீர் ?

பிரசுர கர்த்தர் :—அவர் ஒப்பாமற்போனாலும், வாங்கின பணத்தை இது வரையில் செலவழித்து விட்டிருப்பார். புஸ்தகம் நன்றாயில்லையென்று படித்தவர்கள் சொல்லுகிறார்கள் ; ஆனதால் நாற்பது ரூபாய்க்கு மேல் அது பெறாது. இஷ்டமில்லாவிட்டால் வாங்கின ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விடும் என்பேன். அதைக் கொடுக்கக் கதியற்று ஏதாவது சேர்த்துத் தரும் படி கெஞ்சுவார். ஒரு ஐந்து ரூபாயை அவருக்குத் தொலைத்து சிடு சிடு என்று பட்டு அவரை யனுப்பிவிடுவேன். அத்துடன் அவர் தொல்லையும் ஒழிந்துவிடும். புஸ்தகமும் 'காபிரைட்டும்' எனக்குச் சொந்தமாய் விடும்.

**நண்பர்** :—பேஷ்! நல்ல காரியம் செய்கிறீர். அன்று ஒரு ஐயர் ஏதோ ஒரு எட்டுப் பிரதி கொண்டு வந்து கொடுத்தாரே? அவர் விஷயம் எம்மட்டில் வைத்திருக்கிறீர்?

**பிரசுர கர்த்தர்** :—அவருக்கு ஜன்னி பிறந்துவிட்டதென்று கேள்வி. இன்னும் ஒரு காசும் வாங்கவில்லை. அவர் எப்போது சாவார்? புஸ்தகம் நமக்கு ஒரு காசு செலவில்லாமலே எப்போது சொந்தமாகுமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

***

கர்ணமுடியாது :—

**வித்வான்** :—இன்று இராத்திரிக்குப் பிரபுவின் பேட்டி கிடைக்குமா? அவரைக் காணலாமா?

**சேவகன்** :—இன்று அவருடைய பேட்டி கிடைக்காது. நீரும் அவரைக் காண முடியாது. ஏனெனில் அவர் நேற்றுப் பகல் 12-மணிக்கே போய்விட்டார்.

**வித்வான்** :—என்னை வரும்படி கடிதம் எழுதியிருந்தாரே. அதற்குள் அவ்வளவு அவசரமாக எங்கே சென்றார்?

**சேவகன்** :—அந்த உலகத்துக்கு!

***

மாப்பிள்ளை வீட்டாரது பொறுமையின் எல்லை :—

**பந்து** :—உமது குமாரன் பெண்ணின் கழுத்தில் மாங்கல்யம் சூட்டும் வரையில், வெகு அடக்கமாயும் மரியாதையாயும் அதிக உபசாரம் சொல்லுகிறவராகவும் மிக்க விநயமாக நடந்துகொண்டீரே. இப்போதென்ன இப்படித் துள்ளிப் பாய்ந்து சிடு சிடுக்கிறீர்? கல்யாண காலத்தில் ஏன் இந்தக் கலகம்?

**மாப்பிள்ளையின் தந்தை** :—முடி போட்டாய் விட்டதல்லவா? அது வரையில்தான் மாப்பிள்ளை வீட்டார் வாயடங்கிப் பொறுத்திருக்க முடியும். முடி போடுவதற்கு முன் வரையில்தான் பெண் வீட்டார் துள்ளிக் குதிக்கலாம். பின் அவர்கள் தெய்வமே யென்று அடங்க வேண்டியதே. அப்பால் நாங்கள் மீறி ஆகாயத்தை எட்டிப் பார்க்க வேண்டியதே. உலக வழக்கம் இப்படித்தான். இது தெரியாதா உமக்கு?

---

## விசேஷ அறிக்கை.

இம்முறை விஷயங்கள் அதிகமாகிவிட்டதனால், 48 பக்கங்களுக்குப் பதிலாக 56 பக்கங்களாக்கியும், 'சென்ற மாதம்,' 'பத்திரிகாசாரம்' முதலியவைகளைப் பிரசுரிக்கக் கூடாமற்போயிற்று. அடுத்த பத்திரிகையிலிருந்தும் அவைகள் தொடர்ந்து வரும். அன்பர்கள் நமது முயற்சியையும் உழைப்பையும் பாராட்டி இந்த 'ஆநந்த குணபோதினி'ப் பத்திரிகையை அன்புடன் ஆதரித்துத் தங்கள் நண்பர்களுக்கும் எடுத்துரைத்து, அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேருமாறு செய்து நம்மை ஊக்கப்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.